உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஐப்பசி 12 சனிக்கிழமை (29.10.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 337



மேற்குலக நாடகத்தின் வரலாறு 14



16 தமிழர்பிரச்சினை உள்நாட்டு விவகாரம் அல்ல



21 ராஜீவ் கொலை குற்றவாளிகளின் வழக்கு



23 லிபிய படையினருக்கு உதவியது சூடான் இராணுவம்



25 இலங்கையை பதம் பார்க்கும் பாகிஸ்தான்

# அரசிடம் இருந்து தீர்வைப் பெற போர்க்குற்றத்தைப் பாவியுங்கள்

## கூட்டமைப்புக்கு அமெரிக்கா ஆலோசனை

கொழும்பு, ஒக்ரோபர் 29

**இலங்கை அரச தலைவர்கள் மீதான போர்க் குற்றச்சாட்டுக்கள் ஒரு பக்கம் இருக்க, கொழும்புடன் பேசித் தமிழர்களுக்கு நீதியான தீர்வு ஒன்றை வென்றெடுப்பதில் கவனம் செலுத்தும்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஒபாமா நிர்வாகம் எடுத்துக் கூறி இருப்பதாக வோஷிங்ரனில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதாவது போர்க் குற்றச்சாட்டால் நெருக்கடிக்குள் சிக்கியுள்ள இலங்கை அரசின் பலவீனங்களைப் பயன்படுத்தி தமிழர்களின் நலன்களை வென்றெடுக்கப் பாருங்கள் என்பதே அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்த கருத்துக்களின் சாரம் என்று கூறப்படுகிறது.**



அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் அழைப்பின் பேரில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கு சென்றுள்ளனர். இரு தரப்பினருக்கும் இடையிலான சந்திப்புக்கள் நேற்று மூன்றாவது நாளாகவும் தொடர்ந்தன என்று கூட்டமைப்பினர் கூறினர்.

இந்தச் சந்திப்புகளில் ஆராயப்பட்ட விடயங்கள் குறித்து அனேகமாக இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் அறிக்கை ஒன்று வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அமெரிக்கத் தமிழ்த் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையே,- வழக்கத்துக்கு மாறாக- அமெரிக்க ராஜாங்கத் திணைக்கள அதிகாரிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் தொடர்ச்சியாக மூன்று நாள்கள் சந்திப்புக்களை நடத்தியிருப்பது

பக் 28

# போர்க் குற்றத்துக்குப் பொறுப்புக் கூறாத இலங்கையில் பொதுநலவாய மாநாடா?

## தடுத்து நிறுத்த மன்னிப்புச் சபை அழைப்பு

கொழும்பு, ஒக். 29

பொதுநலவாய நாடுகளின் (கொமன்வெல்த்) தலைவர்கள் மாநாட்டின் அடுத்த அமர்வை கொழும்பில் நடத்துவதை உறுப்பு நாடுகளின் தலைவர்கள் தடுத்து நிறுத்த வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தி உள்ளது. அவ்வாறு செய்யத் தவறின் பொதுநலவாய நாடுகள் அமைப்பு காலத்துக்குப் "பொருத்தமற்ற" அமைப்பாக மாறிவிடும் என்றும் அது எச்சரித்துள்ளது.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் தலைவர்கள் மாநாடு ஆஸ்திரேலியாவின் பேர்த் நகரில் நேற்று ஆரம்பமானதையொட்டி வெளியிட்ட அறிக்கையிலேயே மன்னிப்புச் சபை இதனை வலியுறுத்தி உள்ளது.

2009இல் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் கூட்டத்திலேயே, 2013ஆம் ஆண்டு மாநாட்டைக் இலங்கையில் நடத்துவது என்று தீர்மானிக்கப் பட்டுள்ளது. எனினும் அதன் பின்னர் இலங்கை அரசு மீது ஐ.நாவும் மேற்கு நாடுகளும் போர்க் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தின. அந்தக் குற்றச்சாட்

பக் 28

அகவை பத்தில் சுடர் ஒளி

கொழும்பிலிருந்து வெளிவரும் உதயனின் சகோதர நாளிதலான

சுடர் ஒளி

தனது பத்தாவது அகவையை இன்று (29.10.2011) நிறைவு செய்கின்றது
தனது மக்கள் பணியில் அது மேன்மேலும் சுடர் விட்டுப் பிரகாசிக்க வாழ்த்துகிறோம்.

உதயன் குடும்பத்தினர்.

## வடக்கின் அரச நிர்வாகத்தில் தெற்கின் ஆக்கிரமிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.29

யாழ்.மாவட்டத்தில் 3 பிரதேச செயலகங்களுக்குத் தென்பகுதியைச் சேர்ந்த மூவர் உதவிப் பிரதேச செயலர்களாக நேற்றுமுன்தினம் முதல் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.


இலங்கை நிர்வாக சேவை பயிற்சி பெறுவதற்காக தெற்கில் இருந்து யாழ். மாவட்டத்துக்கு கடந்த ஜூலை மாதமளவில் 150 பேர் வந்திருந்தனர். இவர்கள் யாழ். மாவட்டத்தில் ஒரு மாதம் தங்கியிருந்து பயிற்சிகளைப் பெற்றனர்.

இவர்களில் மூவரே தற்போது யாழ். மாவட்டத்தில் உதவிப் பிரதேச செயலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கு விக்கிரம ஆராய்ச்சி, சங்கானைப் பிரதேச செயலர் பிரிவுக்கு எம்.பண்டாரா, உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்கு இரேஷா ஆகியோர் உதவிப் பிரதேச செயலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் நியமிக்கப்பட்டிருப்பதாகவும் இவர்கள் நேற்றுமுன்தினம் வியா

பக் 27

# மஹிந்தவை கைது செய்; ஆஸி. தமிழர் ஆர்ப்பாட்டம்




கன்பரா, ஒக். 29

இலங்கை ஜனாதிபதி மீதான போர்க்குற்றச்சாட்டுக்களுக்காக அவரைக் கைது செய்ய வலியுறுத்தி ஆஸ்திரேலியாவின் பேர்த்தின் நகரின் மத்தியில் தமிழர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

பொதுநலவாய நாடுகள் மாநாடு ஆரம்பமான நேரத்தில் நேற்று இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ருவாண்டா, மலேசியா, ஆஸ்திரேலிய பழங்குடிமக்கள் என்று 1,500 பேர் வரையானோரும் இதேபகுதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மாநாட்டுக்குத் தலைவர்கள் வருகை தர ஆரம்பித்ததில் இருந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் பதாகைகளைத் தாங்கியபடி எதிர்ப்புக் கோஷங்களை எழுப்பினர். முன்னதாக நகர வீதிகளில் அவர்கள் ஊர்வலமும் நடத்தினர். எனினும் வருகை தரும் தலைவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் பாதுகாப்பை

பக் 27

# பிரபாகரனைக் காட்டிக் கொடுக்கவும் தயாராகவே இருந்தது அமெரிக்கா

கொழும்பு, ஒக். 29

இறுதிப் போரின்போது, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே.பிரபாகரன் எந்த வகையிலேனும் இலங்கையை விட்டுத் தப்பிச் சென்றால் அவரைக் கண்டறிவதற்கான அனைத்து உதவிகளையும் வழங்கத் தயார் என்று அமெரிக்கா இலங்கைக்கு உறுதி கூறி இருந்தது என்ற தகவலை 'விக்கி லீக்ஸ்' கசியவிட்டுள்ளது.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் 2009 இல் கொழும்பில் அமெரிக்கத் தூதுவராக இருந்த ரொபேர்ட் ஓ பிளேக்குக்கும் இடையில் நடந்த சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பாக அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்ட 'கேபிள்' தகவலை 'விக்கி லீக்கிஸிடம்' பெற்று வெளியிட்டுள்ளது 'கொழும்பு ரெலிகிராப்' ஊடகம்.

அந்தக் கேபிளின்படி, விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அனைத்து உறுப்பி

பக் 28

# இலங்கை மனித உரிமை மீறல்கள் விவகாரம் விவாதக் களமாகிறது பொதுநலவாய மாநாடு

கன்பரா, ஒக்.29

ஆஸ்திரேலியாவில் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமான பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் இடம்பெறும் விவாதங்களில் இலங்கைமீதான போர்க்குற்றச்சாட்டு விவகாரம் முக்கிய இடம்பெறும் என்று தகவல்கள் வெளியாகின.

அதேவேளை, போர்க்குற்றச் சாட்டுகள் மீதான விசாரணையை மேற்கொள்ள சுதந்திரமான விசாரணை ஆணைக்குழு அமைக்கப் பட வேண்டும் என்ற சர்வதேச அழுத்தங்களும் இந்த மாநாட்டில் சூடுபிடிக்கும் எனவும் தெரிவிக்கப் படுகிறது.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் தலைவர்கள் நேற்று உறுப்பு நாடுகளில் இடம் பெறும் மனித உரிமை துஷ்பிரயோகங்களைத்

பக் 27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம்: 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்திப்பிரிவுகள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் மழைபெய்யும் சாத்தியம்.

# முன்னாள் போராளிகளுக்கும், விதவைகளுக்கும் சுவிஸ் இங்கு வேலை வாய்ப்பு வழங்க வேண்டும்

## அந்நாட்டு பிரதிநிதிகளிடம் அரச அதிபர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஒக். 29

புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்படும் போராளிகளுக்கும் விதவைகளுக்கும் இங்குள்ள இளைஞர் களில் 10 வீதமானோருக் கும் வேலை வாய்ப்புக்கள் இல்லை. இவர்களுக்கு வேலைவாய்ப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் சுவிஸ் பிரதிநிதிகளிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இலங்கைக்கான சுவிஸ் தூதுவர் தோமஸ் விச்சன் தலைமையிலான 4 பேர் கொண்ட குழுவினர் யாழ். மாவட்ட செயலகத்துக்கு நேற்று மதியம் வருகை தந்து அரச அதிபருடன் கலந்துரையாடினார். இதன்போதே அரச அதிபர் மேற்கண்டவாறு கேட்டுக் கொண்டார்.

சுவிஸ் நாட்டின் உதவியுடன் மறவன்புலோவில் 350 வீடுகள் தலா ஏழரை லட்சம் ரூபா செலவில் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றுக்கு மேலதிகமாக இன்னும் 60 ஆயிரத்து 842 வீடுகள் தேவை - என்று அரச அதிபர் கூறினார்.



மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பாகவும் எடுத்துக்கூறப்பட்டது. 1983ஆம் ஆண்டு காலப் பகுதியில் 40 ஆயிரம் மெற்றிக் தொண்ணுக்கும் அதிகமாக மீன் கிடைத்தது. தற்போது 20 ஆயிரம் மெற்றிக் தொண்ணாக வீழ்ச்சி கண்டுள்ளது என்றும் அவர் எடுத்துக் கூறினார்.

யாழ். போதனா வைத்திய சாலையின் தேவைகள் தொடர்பாகவும், பாடசாலைகளுக்கான தேவைகள் தொடர்பாகவும் அரச அதிபரினால் விளக்கிக் கூறப்பட்டது .

விதவைகள் மற்றும் இங்கு வேலைவாய்ப்பில்லாத இளைஞர்களுக்கும் புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கும் வேலை வாய்ப்புக்கள் வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அரச அதிபர் கேட்டுக் கொண்டார். (ஒ-15)

## போதையுடன் மோட்டார் சைக்கிள் செலுத்தியவருக்கு அபராதம்

தென்மராட்சி, ஒக். 29

சாரதிய அனுமதிப் பத்திரமின்றி மதுபோதையில் ஆபத்தை விளைவிக்க கூடிய வகையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய சாவகச்சேரி வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 9 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

வழக்கை விசாரித்த பதில் நீதிவான் செ. கணபதிப்பிள்ளை எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 9ஆயிரத்து 500ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் 2 மாதச் சாதாரண சிறைத் தண்டணை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (ஒ-207)

# யாழ். ஊடக மாணவர்களுக்கு தமிழகத்தில் புத்தாக்கப் பயிற்சி

சென்னை, ஒக். 29

யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தின் மாணவர் கள் 29 பேர் சென்னை யில் இருவார கால இதழி யல் புத்தாக்கப் பயிற்சி நெறியில் கலந்துகொண்டுள்ளனர். சென்னைப் பல்கலைக் கழகத்தின் அனுசரணையுடன் இந்தப் பயிற்சி நெறி நடத்தப்படுகிறது.






வருடாந்தம் சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம் இத்தகைய பயிற்சிநெறியை நடத்தி வருகிறது.

இந்த ஆண்டுக்கான பயிற்சியில் ஊடகவளங்கள் பயிற்சி நிலையத்தில் முழுநேரமாக இதழியல் கற்கும் மாணவர்கள் பங்கெடுத்துள்ளனர். கடந்த 20ஆம் திகதி மு.ப. 11 மணிக்கு சென்னைப் பல்கலைக்கழத்தில் அவர்களுக்கான பயிற்சி ஆரம்பமாகியது.

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தரும் பேரறிஞருமான பேராசிரியர் க.ப.அறவாணர் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாக, தமிழகத்தில் இருந்து வெளியாகும் 'தீக்கதிர்' பத்திரிகையின் ஆசிரியர் சு.பொ.அகத்தியலிங்கமும் சினிமா நடிகரும் இயக்குநருமான யு.வி.சேதுவும் கலந்து கொண்டார்.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் இதழியல் மற்றும் தொடர்பியல் துறைத் தலைவர் பேராசிரியர் கோ.ரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி மையத்தின் இயக்குநர் தே.தேவானந்தும் விசேட விருந்தினராகக் கலந்து கொண்டார்

இந்த பயிற்சியும் கல்விப் பயணமும் பதினைந்து நாள்கள் தொடர்ச்சியாக நடைபெறும் என்று யாழ். பல்கலைக்கழகம் தெரிவித்தது.

இந்தப் பயிற்சியின்போது தமிழ் நாட்டின் ஊடகத்துறை சார்ந்த முன்னணி ஊடகவியலாளர்களையும் மாணவர்கள் சந்தித்துக் கருத்துரையாடுவதோடு பத்திரிகை மற்றும் தொலைக்காட்சி நிறுவனங்களில் உள்ளகப் பயிற்சிகளையும் மாணவர்கள் பெறுவார்கள். ஹலோ எவ்.எம், பொதிகை தொலைக்காட்சி, ரைம்ஸ் ஒவ் இந்தியா ஆங்கிலப் பத்திரிகை, தினமலர், புதியதலைமுறை பத்திரிகை என்பவற்றில் பணியாற்றும் மூத்த பத்திரிகையாளர்கள் வளவாளர்களாகப் பங்கு கொண்டு யாழ்ப்பாணத்து மாணவர்களுக்குப் பயிற்சிகளை வழங்கி வருகின்றனர்.

''சென்னைப் பல்கலைக் கழக இதழியல் மற்றும் தொடர்பியல் துறை இந்தப் புத்தாக்கப் பயிற்சியை ஒரு பன்முக மற்றும் தொலை நோக்குப் பார்வையுடன் வடிவமைத்துள்ளது. யாழ். பல்ககைலக்கழ இதழியல் மாணவர்களின் ஆற்றல் சார்ந்த திறனை இந்த புத்தாக்கப் பயிற்சியும் கல்விப் பயணமும் வெகுவாக மேம்படுத்தும் என்று நம்புகிறேன்'' எனத் துறைத் தலைவர் பேராசிரியர் கோ.ரவீந்திரன் தெரிவித்தார். (உ)

# காணிகளைத் துப்புரவு செய்துவிட்டு வீடுகளுக்காக காத்திருக்கும் மக்கள்

தென்மராட்சி, ஒக். 29

அண்மையில் மீள்குடியமர்ந்த எழுதுமட்டுவாழ் தெற்குப் பிரிவு மக்கள் காணிகளை துப்புரவு செய்துவிட்டு வீடுகளை அமைக்க அரசின் உதவிகளை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

2000 ஆம் ஆண்டு இடம்பெயர்வின் போது இந்தப் பிரிவில் 287 குடும்பங்கள் வசித்து வந்தன. அண்மையில் மீள்குடியமர்வு வேளையில் சென்றபோது படையினரின் பாவனையில் இருந்த 7 வீடுகள் தவிர்ந்த ஏனைய குடியிருப்புகள் அனைத்தும் இருந்த இடம் தெரியாத அளவுக்கு அழிக்கப்பட்டிருந்தன.

இந்தப் பிரிவைச் சேர்ந்த 94 சத வீதமானோர் 'அ' பங்கீட்டு அட்டைக்கு உரியவர்கள் என்பதால் தற்காலிக வீடுகள் அமைக்கக் கூட வசதியில்லாத நிலையில் உள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானோர் உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ளதால் தமது சொந்த இருப்பிடங்களில் வீடுகள் அமைத்துத்தர அரச உதவிகளை எதிர்பார்க்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-207)

# நிகழ்வுகள்

**மகாதேவா இல்லத்தில் முப்பெரும் விழா**

கிளிநொச்சி மகாதேவா சைவசிறார் இல்லத்தின் முப்பெரும் நிகழ்வுகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது. இல்லத் தலைவர் தி. இராசநாயகம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் ஆசிரியர் கெளரவிப்பு நிகழ்வு, சிறுவர்தின விழா, குழந்தைகள் பிறந்தநாள் விழா ஆகியன இடம்பெறவுள்ளன. பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலாளர் அ.சிவசுவாமி கலந்து கொள்வார். (ஒ-302)

**கேற்வேயில் கலந்துரையாடல்**

'கேற்வே' நிறுவனத்தினால் நடத்தப்படவுள்ள இளவயதினருக்கான 'ஜோண் கீல்ஸ்' ஆங்கில புலமைப்பரிசில் திட்டத்தில் பயிற்சி பெறுவதற்காக விண்ணப்பித்த பாடசாலை மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு 347, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள 'கேற்வே' பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது. விண்ணப்பித்த அனைத்து மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு பயற்சித் திட்ட இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-313)

**நினைவு தினமும், பரிசளிப்பு விழாவும்**

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் ஜயரத்தினம் நினைவு தினமும் கனிஷ்ட பிரிவு பரிசளிப்பு விழாவும் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு பாவலர் துரையப்பா பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளன. (ஒ-313)

**சட்டமாணி கற்கை கருத்துரை**

யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக சட்டமாணிக் கற்கை நெறி இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இல: 464 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணக் கல்லூரியின் பட்டப்படிப்புகள் பிரிவில் ஆரம்பமாகவுள்ளது. இந்தக் கற்கை நெறியில் இலங்கை மற்றும் சர்வதேச ரீதியில் அங்கீகாரம் பெற்ற கொழும்பு பிறின்சி அக்கடமி வளவாளர்கள் கருத்துரைகளை நிகழ்த்துவர். (உ)

**தெய்வீக இசையரங்கு**

கந்தசஷ்டி உற்சவத்தை முன்னிட்டு நல்லூர் மகேஸ்வரன் மணி மண்டபத்தில் இணுவையூர் ரசிகப்பிரியா சபா கலை வளர்ச்சி மையம் நடத்தும் தெய்வீக இசையரங்கின் மூன்றாம் நாள் நிகழ்வுகள் இன்று மாலை 5 மணிக்கு நுண்கலைமாணி யசோதரன் , காண்டீபன் ஆகியோரின் சக்ஸ [illegible]

**[illegible]**

இலங்கை பரீட்சை திணைக்களத்தின் அனுசரணையுடன் கிளிநொச்சி வலயக் கல்விப்பணிமனை நடத்தும் க.பொ.த. சாதாரண மாணவர்களுக்கான வரலாற்றுப் பாடத்திற்கான கருத்தரங்கு இன்று காலை முதல் நடைபெறவுள்ளது. (உ-406)


**சனசமூக நிலைய ஆண்டு விழா**

கோண்டாவில் ஞானவீர சனசமூக நிலையத்தின் 67 ஆவது ஆண்டுவிழாவும், பரிசளிப்பு நிகழ்வும் இன்று மாலை 4.30 மணிக்கு நிலைய முன்றிலில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் கல்விசார் மற்றும் விளையட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில் வழங்கலும், வறுமைக் கேட்டுக்குக் கீழ் வாழும் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கல் நிகழ்வும் விழா ஏற்பாட்டாளர்களால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (ஒ-323)

**வாசிப்பு விழிப்புணர்வுக் கூட்டம்**

வட்டுக்கோட்டை ஸ்ரீகணேச வாசிகசாலையின் ஏற்பாட்டில் மக்கள் மத்தியில் வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும் விழிப்புணர்வுக் கூட்டம் இன்று மாலை 4 மணிக்கு வாசிகசாலை தலைவர் இ.பொன்னுராசா தலைமையில் மூளாய் வீதியிலுள்ள வாசிகசாலை கேட்போர் கூட்டத்தில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் ''வாசிப்புப் பழக்கமும் சமூக மேம்பாடும்'' எனும் தலைப்பில் வலிகாமம் மேற்கு பிரதேசசபை நூலகர் பா.விஜயகுமார் உரையாற்றுவார். (ஒ-323)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பொது நலவாய உச்சிமாநாட்டில் உலகத் தலைவர்கள் அணிவகுத்து நிற்கும் காட்சி.

# குடாநாட்டில் காணாமற்போனோர் குறித்த விசாரணைக்கு பொலிஸார் ஒத்துழைப்பர்

## மனித உரிமைக் குழுவினருடனான சந்திப்பில் சம்மதம்

யாழ்ப்பாணம், ஒக். 29

யாழ். குடாநாட்டில் 2005 ஆம் ஆண்டுக்குப் பின்னர் காணாமற் போனவர்கள் தொடர்பான மனித உரிமை ஆணைக் குழுவின் விசாரணைகளுக்கு பொலிஸார் ஒத்துழைப்பு வழங்க சம்மதம் தெரிவித்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளரும் முன்னாள் பொலிஸ்மா அதிபருமாகிய ரி.ஈ.ஆனந்த ராஜா தலைமையிலான குழுவினருக்கும் பொலிஸ் சிரேஷ்ட அதிகாரிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்றுக் காலை ஞானம்ஸ் விடுதியில் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடல் தொடர்பாக ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே கனகராஜ் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் நேற்றையதினம் யாழ். மாவட்டத்துக்கு விஜயம் செய்து பலதரப்பட்டோரையும் சந்தித்து கலந்துரையாடினார். அவ்வேளை சமகால மனித உரிமை நிலவரங்கள் தொடர்பாக கூடுதலாக ஆராயப்பட்டுள்ளது.

இதன் பின்னர் பொலிஸாருடன் இடம்பெற்ற சந்திப்பில், பொலிஸாருக்கும் மனித உரிமை ஆணைக்குழுவுக்கும் இடையிலான தொடர்புகளை அதிகரிப்பதற்கு உரிய வழிவகைகள் மேற்கொள்வது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

### தமிழ்மொழி மூலம் முறைப்பாடு பதிவு

பொலிஸ் நிலையங்களில் தமிழ்மொழி மூலம் முறைப்பாடுகள் பதிவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும் என்றும் மனித உரிமை ஆணைக்குழு வினால் தெரிவிக்கப்பட்டது. இதனை ஏற்றுக்கொண்ட பொலிஸ் தரப்பினர் நடைமுறைப்படுத்துவதாகவும் தெரிவித்தனர்.

மேலும் இலங்கை கடற்படையால் மேற்கொள்ளப்பட்டு வரும் முறையற்ற கைதுகள் தொடர்பிலும், யுத்தத்தின் பின்னர் யாழ். மாவட்டத்தில் அதிகரித்துள்ள சிறுவர்கள் மற்றும்



பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பாகவும் மனித உரிமைகுழுவினால் பிரஸ்தாபிக்கப்பட்டது. அத்துடன் மனித உரிமை ஆணைக்குழுவின் கோட்பாட்டுக்கு அப்பால் செல்லும் விடயங்கள் தொடர்பிலும் கவனம் எடுக்கப்பட்டது.

முக்கியமாக 2005 ஆம் ஆண்டுக்குப் பின்னர் யாழ். மாவட்டத்தில் காணாமற் போனவர்கள் தொடர்பிலான விசாரணைக்கு பொலிஸாரது ஒத்துழைப்புத் தேவை என்பது தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழுவினால் தெரிவிக்கப்பட்டதற்கு பொலிஸாரது பூரண ஒத்துழைப்பு கிடைக்கும் என்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மற்றும் சகல பொலிஸ் நிலையங்கள் தோறும் மனித உரிமை விழிப்புணர்வு செயற்றிட்டம் மேற்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் பொலிஸ் தரப்பில் யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரி.இந்திரன் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நெவின் பத்மதேவ மற்றும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் ஆகியோர் உட்பட 30 பேர் வரையில் கலந்து கொண்டனர். (ஒ-15)

# முன்னாள் போராளிகள் 115 பேர் சாதாரணதர பரீட்சைக்கு

கொழும்பு, ஒக். 29

எதிர்வரும் டிசெம்பர் மாதத்தில் இடம்பெறும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு புனர்வாழ்வு முகாம்களிலுள்ள முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் 115 பேர் தோற்றவுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகமான மேஜர் ஜெனரல் சன்னராஜ குரு தெரிவித்துள்ளார்.

இவர்களுள் 38 பேர் கடந்த 25 ஆம் திகதியன்று விடுவிக்கப்பட்டுள்ள போதிலும் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அவர்கள் மீளவும் வரவுள்ளார்கள் எனவும் அவர் கூறினார்.

கடந்த ஆண்டில் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றியிருந்த புனர்வாழ்வு பெற்ற 372 பேருள் 200 பேர் சித்திபெற்றிருந்ததாகவும் ஆணையாளர் தெரிவித்தார்.

எதிர்வரும் டிசெம்பர் 12 முதல் 22 ஆம் திகதி வரையில் இடம்பெறும் மேற்படிப் பரீட்சையின்போது வவுனியா தமிழ் மகா வித்தியாலய பரீட்சை மண்டபத்தில் இவர்கள் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-22)

# 20 வீத தமிழ் பேசும் மாணவருக்கு சிங்களப் பாடசாலையில் அனுமதி

கொழும்பு, ஒக். 29

சிங்களப் பாடசாலைகளில் தமிழ், முஸ்லிம் மாணவர்களுக்கு 20 சதவீத அனுமதியைப் பெற்றுக்கொடுக்கத் தாம் நடவடிக்கை எடுக்கப்போவதாக ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்ஸிலுக்கும் ஜாதிக ஹெல உறுமயவிற்கும் இடையில் கொழும்பில் இடம்பெற்ற சந்திப்பொன்றின்போது கலந்துகொண்டு உரையாற்றிய ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் வண.அத்துர லிய ரத்ன தேரரே இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் முஸ்லிம் கவுன்ஸிலின் தலைவர் என். எம்.அமீன் கூறியதாவது:-

ஜாதிக ஹெல உறுமயவின் வேண்டுகோளுக்கு இணங்க இச்சந்திப்பு இடம்பெற்றது. நாடு முழுவதும் முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி நாம் அவர்களுடன் பேசினோம்.

முஸ்லிம்களுக்கு கல்வியில் பாரபட்சம் காட்டப்படுதல், சிங்கள மொழி பாடசாலைகளில் முஸ்லிம் மாணவர்களுக்கு அனுமதி மறுக்கப்படுதல், கொழும்பு முஸ்லிம்களின் சேரிப்புற அவல வாழ்க்கை உள்ளிட்ட பல விடயங்கள் பற்றி நாம் பேசினோம்.

சிங்களப் பாடசாலைகளில் முஸ்லிம் மாணவர்களுக்கு அனுமதி மறுக்கப்படுதல் தொடர்பாகத்தான் விசேட கவனம் செலுத்தப்போவதாக ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் வண. அத்துர லிய ரத்தினதேரர் கூறினார்.

சிங்களப் பாடசாலைகளில் தமிழ், முஸ்லிம் மாணவர்களுக்கு 20 சதவீத அனுமதியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தான் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுப்பார் என்று அவர் மேலும் கூறினார்.

முஸ்லிம்களின் இவ்வாறான பிரச்சினைகள் பற்றிக் கலந்தாலோசிப்பதற்காக ஒவ்வொரு மாதமும் இருதரப்புகளும் சந்திப்பதென இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது - என்றும் கூறினார்.

# கைதடி வாசிகளுக்கு தலா 3 ஆயிரம் ரூபா அபராதம்

தென்மராட்சி,ஒக்.29

கைதடிப் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி அரச சாராயம் விற்பனை செய்த இருவர் சாவகச்சேரி மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்களிடம் வசமாக மாட்டிக் கொண்டனர்.

கைதடி வடக்கு, கைதடி மத்தி ஆகிய இடங்களைச் சேர்ந்த இருவருக்கு எதிராக மதுவரி உத்தியோகத்தர்கள் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

வழக்குகளை நேற்று தனித் தனியாக விசாரித்த பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை இருவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தலா 3 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் தலா ஒரு மாதம் வீதம் சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (ஒ-207)

# புதிய சிறைச்சாலைகள் நிர்மாணம்; இதுவும் சீன நாட்டு நிறுவனத்திடமே

## புனர்வாழ்வு அமைச்சு பரிசிலனை

கொழும்பு, ஒக்.29

நகரப்புறங்களிலுள்ள சிறைச்சாலைகள் அவ்விடங்களிலிருந்து அகற்றப்பட்டு நகரத்துக்கு அப்பாலுள்ள பிரதேசங்களுக்குக் கொண்டு செல்லப்படவுள்ளன. இவற்றை சர்வதேச தரங்களுக்குப் பொருந்தும் விதத்தில் நவீன வசதிகளுடன் நிர்மாணிக்கும் பொறுப்பை சீனா நாட்டின் 'கட்டிக்' நிறுவனத்துக்கு வழங்குவது குறித்து புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு பரிசீலித்து வருகிறது.

சீன அரசின் நிவாரணக் கடனுதவிகளைப் பெற்று இந்தக் சிறைச்சாலைகளின் நிர்மாணப் பணிகள் 'கட்டிக்' நிறுவனத்துக்கு வழங்கப்படவுள்ளன.

இந்த 'கட்டிக்' நிறுவனமானது சீனா மற்றும் வேறு நாடுகளில் சிறைச்சாலைகளுக்கான திட்டங்களைக் கட்டமைத்தும் சிறைச்சாலைகளை நிர்மாணித்தும் அனுபவம் பெற்றுள்ளதாக அமைச்சு தெரிவிக்கிறது.

பொரளை சிறைச்சாலைகள் கட்டடத் தொகுதியை அங்கிருந்து அகற்றி, மஹர மற்றும் வட்டரக்க பிரதேசங்களுக்கும், தங்காலை, மாத்தறை மற்றும் காலி சிறைச்சாலைகளை அவ்விடங்களிலிருந்து அகற்றி ரன்ன மற்றும் பிற்றபத்தர போன்ற பிரதேசங்களுக்கு மாற்றுவதற்கு அரசு ஏற்கனவே தீர்மானித்துள்ளது.

புதிதாகச் சிறைச்சாலைகளை நிர்மாணிக்கும் போது, அவற்றை சர்வதேசத் தராதரங்களுக்குப் பொருந்தும் விதமாகவும் பாதுகாப்புச் சாதனங்கள் மற்றும் நவீனமான வசதிகளுடன் நிர்மாணிக்க அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. இந்தியா உட்பட ஏனைய நாடுகளுக்குப் போட்டியாக சீனா இலங்கையில் தற்போது பல்வேறு அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டு வருவது தெரிந்ததே. (ஒ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டத்துக்கு அப்பாற்பட்டு தமிழ் கைதிகளை மனித நேய அடிப்படையில் விடுவியுங்கள்

## நீதி அமைச்சரிடம் மேல் மாகாண சபை உறுப்பினர் கோரிக்கை

தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் சட்டம், அதிகாரம் என்பவற்றுக்கு அப்பால் மனிதாபிமானத்துடன் செயற்படுவதற்கு நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் முன்வர வேண்டும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும், மேல் மாகாணசபை உறுப்பினருமான எஸ்.ராஜேந்திரன் கேட்டுள்ளார். அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து இவர் நேற்று அறிக்கையொன்றை விடுத்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டுத்தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள மன்னார் திருக்கேதீஸ்வரத்தைச் சேர்ந்த ஜெகதீஸ்வரன் (வயது-32) இரு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்ட நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நடப்பதற்குக்கூட இயலாத நிலையிலுள்ள குறிப்பிட்ட தமிழ் அரசியல் கைதிக்கு காலில் விலங்கிடப்பட்டுத் தடுத்து வைத்திருப்பது, இன வன்முறை அரசியல் போக்கையே வெளிக்காட்டி நிற்கிறது.

சிறுபான்மையின மக்கள் தலைவரான நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம், மனிதாபிமானமற்ற இந்த நடவடிக்கைக்குத் துணைபோவது எமக்கு மிகவும் கவலைதருகிறது.

உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் ஒரு கைதிக்கு சட்டரீதியான தண்டனை உறுதிப்படுத்தாத நிலையில், காலில் விலங்கிட்டு மேன்மேலும் துன்புறுத்துவது எவ்வகையில் நியாயமானது. எனவே, குறிப்பிட்ட அரசியல் கைதியை 'தமிழர்' என்ற அடையாளத்துடன் உற்று நோக்காது, மனிதாபிமான அடிப்படையில் உரிய சிகிச்சையளிக்க அமைச்சர் ரவூப் ஹக்கீம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று கொழும்பு மட்டக்குளி கதிரானவத்த பிரதேசத்தைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான 29 வயதுடைய எம்.என்.மொஹமட் ஹக்கீம் 21.03.2009இல் காணாமல் போன நிலையில் அலரிமாளிகையில் நடந்த (14.10.2011) கைதிகளை விடுவிக்கும் நிகழ்வின் போது தனது மகனை அடையாளம் கண்டபோதும், அவருடன் பேசுவதற்கோ தொடர்பு கொள்வதற்கோ எவ்வகையிலும் தனக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லையென்று அவரின் தாயார் சித்தி அமினா என்னிடம் நேரடியாக வந்து முறையிட்டுள்ளார். இதுதொடர்பாக ஊடகங்களிலும் செய்தி வெளியிடப்பட்டுள்ளமையை தாங்களும் அறிந்திருப்பீர்கள்.

நீதியமைச்சர் என்பதற்கு அப்பால் மனிதாபிமானத்தின் பேரில் சிறுநீரகம் பாதிக்கப்பட்டு சிகிச்சைப்பெற்றுவரும் அரசியல் கைதியை நேரில் சென்று பார்வையிட்டு இலங்கை அரசியலில் புதியதொரு வரலாற்றுத் தடத்தைப் பதிப்பீர்கள் என்றும் எதிர்பார்க்கின்றேன்.

சட்டம், பாதுகாப்பு ஆகியன நாட்டின் தேசிய நலன்களுக்கு அவசியமானது என்பது தொடர்பாக நானும் முழுமையாக உடன்பாடு கொண்டுள்ளேன். அதற்கும் அப்பால் மனிதாபிமானம் என்பது மிகவும் பெறுமதிவாய்ந்தது என்பதை நாம் அனைவரும் உணர்ந்து செயற்படுவது மிகவும் அவசியமாகும் என்பதை உங்களைப் போன்ற சிறந்த தலைவர்களுக்கு சுட்டிக்காட்ட வேண்டிய அவசியமில்லை.

'கைதிகளும் மனிதர்களே' என்ற வாசகத்தையும் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றேன். நீண்டகாலமாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ள அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்வதற்கு உடன் நடவடிக்கையெடுக்க முன்வருமாறு உங்களை தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ். பல்கலை புதுமுக மாணவருக்கு புதன் முதல் கற்றல் செயற்பாடுகள்

## திசை முகப்படுத்தலுடன் ஆரம்பம்

யாழ். பல்கலைக்கழக அனைத்துப் பீடங்களுக்கும் தெரிவான புதுமுக மாணவர்களுக்கான கற்றல் செயற்பாடுகள் எதிர்வரும் 2 ஆம் திகதி புதன்கிழமை முதல் ஆரம்பமாகும் என்று பதிவாளர் அறிவித்துள்ளார்.

முகாமைத்துவ வணிக பீடம், விஞ்ஞானபீடம் என்பவற்றுக்கு தெரிவான புதுமுக மாணவர்களுக்கு எதிர்வரும் புதன்கிழமை காலை 9 மணிக்கு திசைமுகப்படுத்தல் நிகழ்வுடன் கல்விச் செயற்பாடு ஆரம்பமாகும்.

கலைப்பீடத்துக்குள் அடங்கும், கலை, சட்டம் என்பவற்றுக்கு தெரிவான மாணவர்களுக்கு எதிர்வரும் 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கிலும், அதற்கு மறுநாள் 9 ஆம் திகதி புதன்கிழமை இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும் பாடங்களுக்குத் தெரிவான புதுமுக மாணவர்களுக்கு மருதனார்மடம் இராமநாதன் நுண்கலைக்கழகத்திலும் திசைமுகப்படுத்தல் நிகழ்வுடன் கல்விச் செயற்பாடு ஆரம்பமாகும்.

இதேவேளை யாழ்.பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் ஏனைய மாணவர்களுக்கான விரிவுரைகளில், நாளைமறுதினம் திங்கட்கிழமை முதல் கலைப்பீட மாணவர்களுக்கும், எதிர்வரும் 2 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணி முதல் முகாமைத்துவ வணிகபீடம், விஞ்ஞானபீடம் மாணவர்களுக்கும் விரிவுரைகள் இடம்பெறும் என்றும் பதிவாளர் அறிவித்துள்ளார். (ஒ-323)

# சண்டே லீடர் ஆசிரியருக்கு கொலைமிரட்டல்

சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் பிரட்றிகா ஜேன்ஸ் தனக்கு கொலைமிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது என மீரிஹானைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

தனது வீட்டுக்குக் கடிதம் ஒன்று வந்தது என்றும் அதில் தனக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது என்றும் பிரட்றிகா ஜேன்ஸ் நேற்றுத் தெரிவித்தார்.

இது தொடர்பில் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அஜித்ரோஹண தெரிவிக்கையில், கடிதம் ஒன்றின் மூலம் தனக்குக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என்று நேற்றிரவு மீரிஹான பொலிஸ் நிலையத்தில் செய்துள்ள முறைப்பாட்டில் பிரட்றிகா ஜேன்ஸ் தெரிவித்துள்ளார் - என்று கூறினார்.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் வெள்ளைக் கொடி விவகார வழக்கில் இவர் பிரதான சாட்சியாவார். இந்த வழக்கின் தீர்ப்பு அடுத்த மாதம் 18 ஆம் திகதி வழங்கப்படவுள்ளது.

இந்நிலையில் இவருக்குக் கொலைமிரட்டல் விடுக்கப்பட்டுள்ளமை ஊடகத்துறை வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.(சி)


# 30ஆம் நாள் இதய அஞ்சலி

உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன்
இறப்பிலும் வாழ்வான் (லூக்கா 11:25)

மண்ணுலகில்
09.08.1915



விண்ணுலகில்
30.09.2011

## அமரர் சாமுவேல் பெஞ்சமின்

(பிரபல ஒப்பனைக் கலைஞர்)

ஆருயிரே யாழ். நகர் ஆவணிப் பொன்னே
ஆண்டு பன்னீரெட்டாம் ஆவணியை அன்பாலாண்டு
பேருரைக்கும் படி ஒப்பனைக் கலையில் மலர்ந்த
பெருமகனே கலைமகனே நின் நாமம் வாழுமையா
நாட்டுக் கூத்தோடு நாடக மேடையுமாய்
கலை நிகழ்வோடு நாட்டிய நடன அரங்கென
காட்டிய ஒப்பனையும் ஆடை அணிகலனும்
பெரியவரே தங்கள் கைதேர்ந்த கலையுமாச்சே
சீருடையாய் சிற்பமொரு ஓவியக் கலையிலும்
கரம்பதித்தே பட்டங்கள் விருதுகள் பலவென்று
நீருயர்ந்து இன்று இறைமாடக் கலைஞனாய்
சென்ற நாள் முதலாய் கலங்குதையா கலையுலகம்.

எமது குடும்பத்தின் கலங்கரை விளக்கமாகவும், பாசத்தின் பொறுமையின் இமயமாய் விளங்கி நாம்

உயர்ந்த உன்னதமான நிலையை அடைய எம்மை சிறப்பாக உருவாக்கிய எமது குடும்பத் தலைவர் 30.09.2011 அன்று இறைபதம் அடைந்தபோது இறப்பின் செய்தியறிந்து எமதில்லத்துக்கு வருகை தந்து இவரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக வழிபாடுகள் நடத்தி எமக்கு ஆறுதல் கூறிய அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், யாழ், மன்னார், கிளிநொச்சி தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மாவட்ட முகாமையாளர், பணியாளர்கள், யாழ்.கரித்தாஸ் - கியூடெக் நிறுவன இயக்குநர், பணியாளர்கள், திருமறைக் கலாமன்றத்தினர், சுண்டுக்குளி சனசமூக நிலையத்தினர், கிறீன் கிங்ஸ் சனசமூக நிலையத்தினர், புனித சாள்ஸ் மகாவித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், அன்னாரோடு இணைந்து பணியாற்றிய முதுபெரும் கலைஞர்கள், யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினர் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், சமூகத் தொடர்பு சாதனங்கள் ஊடாக ஆறுதல் கூறியோர் , மலர் வளையம் சாத்தி அஞ்சலி செலுத்திய அனைவருக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவர் நோயுற்றிருந்த போது இறுதி அருட்சாதனங்களை நிறைவேற்றிய அருட்தந்தையர்களுக்கும் , நல்லடக்க ஆராதனை திருப்பலி நிறைவேற்றி, மறையுரையாற்றிய அருட் தந்தையர்களுக்கும், இவரது பூதவுடலை இறுதியாக ஆசீர்வதித்து இறுதி வழிபாட்டை முன்னெடுத்த மேன்மை தங்கிய யாழ். மாவட்ட ஆயர் இ. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகைக்கும் இறுதி நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆன்மா இளைப்பாற்றுக்காக இன்று [29.10.2011] சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு தூய மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இல. 96, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அவகாசம் கோரும் நோக்கம் ஏதோ?

அமெரிக்க அரசின் அழைப்பின் பேரில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் நியூயோர்க் சென்று பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளார்கள். இதேவேளை பார்த்து அரசாங்கம்- ஜனாதிபதி தனது விசேட பிரதிநிதியாக அமைச்சர் மஹிந்த சமரசிங்கவை, ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ - மூனைச் சந்தித்துப் பேசுவதற்கு அனுப்பி உள்ளார். அரசு, இதனைத் திட்டமிட்டு வேண்டுமென்று செய்தது போலவே, சமரசிங்க செயலாளர் நாயகத்தைச் சந்தித்துப் பேச்சு நடத்தி உள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளும் ஐ.நா.செயலாளர் நாயகத்தைச் சந்தித்துப் பேசுவதற்கு ஏற்பாடாகி உள்ளது. ஆனால் அரசாங்கம் அதனை முந்திக்கொண்டது.

இந்தச் சந்திப்புக் குறித்து, செயலாளர் நாயகத்தின் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில்,-

★ செயலாளர் நாயகம் இம்மாதம் 19 ஆம் திகதியன்று இலங்கை ஜனாதிபதியின் விசேட தூதுவரைச் சந்தித்திருந்தார். 2009 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதி இலங்கை ஜனாதிபதியும், பான் கீ - மூனும் கூட்டாக வெளியிட்டிருந்த அறிக்கையை அடியொற்றியதாக, சந்திப்பு நடைபெற்றுள்ளது. தேசிய நல்லிணக்கம் தொடர்பான விடயங்களுக்குப் பதில் அளிக்கும் கடப்பாட்டைக் கையாள வேண்டிய முக்கியத்துவத்தை ஐ.நா. செயலாளர் நாயகம் அழுத்தி உரைத்துள்ளார். உண்மையான அரசியல் நல்லிணக்கத்துக்குப் பதில் அளிக்கும் கடப்பாடுள்ள விடயங்களைக் கையாள்வது முக்கியமானது என்பதனையும் செயலாளர் நாயகம் அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்தார் - என்று எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

ஆனால் உத்தியோகபூர்வமற்ற, நம்பத்தகுந்த வட்டாரங்களின் தகவல்களின் பிரகாரம், அரசாங்கத்தின் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை அடுத்த மாதம் (நவம்பர்) பதினைந்தாம் திகதி வெளியிடப்படும் என்று பான் கீ-மூனிடம் கூறப்பட்டதாக அறியப்படுகின்றது.

அவ்வேளையில்,

போர் முடிவடைந்து விட்டது. அதனால் தேசிய நல்லிணக்கத்தை விரைவில் உண்டாக்குவதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசு மேற்கொள்ள வேண்டும். அத்தோடு பதிலளிக்கும் விவகாரங்களை கையாள்வது முக்கியமானது என்றும் செயலாளர் நாயகம் வலியுறுத்தி உள்ளார் எனச் சுயாதீனமான தகவல்கள் தெரிவிக்கின்றன. எதுவாயிருப்பினும் -

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் செயலாளர் நாயகத்தைச் சந்திக்கும் போது, நல்லிணக்கத்துக்கான முயற்சியில் அரசாங்கம் ஓர் அங்குலம் தானும் நகரவில்லை; பதிலாகக் காணி பறிப்பு, தமிழர் பிரதேசங்களைப் பெரும் பான்மையினருக்காக கபளீகரம் செய்வது, வடக்கு, கிழக்குப் பகுதிகளை இராணுவமயப்படுத்துவது போன்றவற்றில் தீவிரம் காட்டுதல் போன்ற எதிர்மறை நடவடிக்கைகளிலேயே ஈடுபட்டு வருகின்றது என்று நேரில் சொல்வதற்கு முன்னர், முந்திக்கொண்டு, தருணம் பார்த்து அமைச்சர் சமரசிங்காவை, ஐ.நாவின் செயலாளர் நாயகத்திடம் விசேட தூதுவராக அனுப்பியமை அரசின் ஏட்டிக்கு போட்டியான ஏற்பாடு என்பதில் எள்ளளவும் சந்தேகம் கொள்வதற்கில்லை.

சர்வதேச அனுசரணையுடனான விசாரணைக்குழு என்ற கோரிக்கையை மறுதலிக்க, சாமளிக்க அரசு கையிலெடுத்த தற்காப்பு ஆயுதமே கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு என்பதனை சர்வதேசம் நன்கு உணர்ந்துள்ளது.

2009 ஆம் ஆண்டில் போர் முடிவுக்கு வந்ததை அடுத்து போரின் இறுதிக் கட்டத்தில் வன்னியில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் செயற்பாடுகள் குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற பல தரப்புகளின் அழுத்தங்களைத் தட்டிக்கழிக்க இயலாத நிலையிலேயே -

ஐ.நா. செயலாளர் நாயகம் நியமித்த நிபுணர் குழு தனது அறிக்கையை வெளியிட்ட போது அது இலங்கை அரசுக்கு, அதன் செயற்பாடுகளுக்குக் களங்கம் கற்பிக்கும் நோக்கில், ஒருதலைப்பட்சமான அறிக்கை என இலங்கை அரசு அதனை நிராகரித்திருந்தது.

குறித்த விசாரணை மேற்கொள்ளவென தான் நியமித்த கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, தனது அறிக்கையை அரசிடம் எதிர்வரும் நவம்பர் மாதம் 15 ஆம் திகதி சமர்ப்பிக்கவுள்ளதாகவும் அவ்வறிக்கையில் சிபார்சு செய்யப்படும் விடயங்களை நடைமுறைப்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமெனவும் அரசு இதுவரை தெரிவித்து வந்தது. சர்வதேசத்துக்கும் ஊதிப் பெருப்பித்துக் காட்டியது.

ஆனால் தற்போது, நியூயோர்க்கில் வைத்து ஜனாதிபதியின் விசேட பிரதிநிதி என்ற கோதாவில் ஐ.நா. செயலரைச் சந்தித்துப் பேசிய வேளையில் -

இந்த நாட்டில் இறுதிப் போர் இடம்பெற்ற வேளையில், சர்வதேச மனித உரிமை நியமங்களை மீறும் விதத்தில் தனது நாட்டின் அப்பாவிகளான தமிழ்ப்பொது மக்களை பெரும் எண்ணிக்கையில் படுகொலை செய்ததான குற்றச்சாட்டு இலங்கை அரசு மீது பரவலாகச் சுமத்தப்பட்டு வரும் வேளை இது.

அது குறித்த அனைத்துலக ரீதியிலான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியம் சர்வதேச நாடுகள் பலவற்றாலும் வலியுறுத்தப்பட்டு வரும் நிலையில்-

அவற்றுக்கு வலு சேர்க்கும் விதத்தில் சனல் - 4 காணொளி மற்றும் புலம்பெயர் தமிழர் தரப்புக்கள் இறுதிக் கட்டப் போரின்போது நடைபெற்ற சம்பவங்களை நிரூபிக்கும் சாட்சியங்களாகி உலகுக்கு உயர்த்திக் காட்டும் நிலை உருவாகி வரும் வேளையில் -

அமைச்சர் மஹிந்த சமரசிங்க கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிக்க ஆணைககுழுவின் அறிக்கையை இன்னமும் ஒரு ஆண்டு கழித்து 2012 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடரில் சமர்ப்பிக்க அவகாசம் கோரியுள்ளார்.

அரசுக்குப் பின்னடைவை ஏற்படுத்தத் தக்க விதத்தில் இறுதிப் போரின் போது மனித உரிமைகள் மீறப்பட்டன என்றவாறு நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை குற்றம் சாட்டியிருக்குமோ என்று சில தரப்புகள் ஊகம் வெளியிட்டுள்ளன. அது சரியெனில், நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவில் சமர்ப்பிக்க நீண்டு நெடிய கால அவகாசம் கோரப்படுவதற்கான காரணமாகவும் இருக்கலாம் அல்லவா?

# வைத்தியரைக் கைது செய்வதற்கு சட்டமா அதிபரின் அனுமதி அவசியம்

## புதிய சுற்று நிருபம் வெளியாகியது

கொழும்பு, ஒக். 29

இலங்கை மருத்துவச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள மருத்துவரொருவரை ஏதாவதொரு குற்றச்சாட்டின் பேரின் கைது செய்வதானால் அதற்குக் கட்டயமாகச் சட்டமா அதிபரின் அனுமதி பெறவேண்டும் என்ற சுற்று நிருபமொன்றைப் பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் நாட்டிலுள்ள அனைத்துப் பொலிஸ் நிலையங்களுக்கும் அனுப்பிவைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மருத்துவ உத்தியோகத்தர்களது பணியின் கௌரவத்தைப் பேணிக்காப்பது தொடர்பில் அரச மருத்துவ உத்தியோகத்தர்கள் சங்கம் பொலிஸ் மா அதிபர் இடையிலான சந்திப்பொன்று அண்மையில் இடம் பெற்றது.

அதன் பின்னரே பொலிஸ்மா அதிபரினால் இந்த உத்தரவு அடங்கிய சுற்று நிருபம் வெளியிடப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபரின் இந்த உத்தரவுக்கமைய இனிவரும் சந்தர்ப்பங்களில் மருத்துவ நிபுணரொருவரின் வாக்கு மூலத்தைப் பதிவுசெய்து கொள்வதானாலும் சட்டமா அதிபரின் அனுமதி பெறப்படவேண்டும்.

சாதாரண மருத்துவரொருவரின் வாக்கு மூலமொன்றைப் பதிவு செய்வதானால் அது, உதவிப் பொலிஸ் அத்தியட்சகரொருவரினால் அல்லது அதைவிட உயர் மட்டத்தில் உள்ள அதிகாரியொருவரினால் மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் பொலிஸ் மா அதிபர் தெரியப்படுத்தியுள்ளதாகப் பொலிஸ் தலைமையகம் தெரிவிக்கிறது. (த-22)

# இறக்குமதியாகும் விலையைவிட குறைவாக எரிபொருள்கள் விற்பனை

## பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு பெரும் நட்டமாம்

கொழும்பு, ஒக்.29

இறக்குமதி செய்யப்படும் விலையை விடக் குறைந்த விலையில் எரிபொருள்கள் விற்பனை செய்யப்படுவதன் காரணமாக டீசல், மண்ணெண்ணெய் மற்றும் பெற்றோல் விற்பனையில் பெரும் நட்டம் ஏற்படுவதாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய ஒரு லீற்றர் டீசலில் 27 ரூபாவும்' ஒரு லீற்றர் மண்ணெண்ணெயில் 39 ரூபாவும் ஒரு லீற்றர் பெற்றோலில் 2 ரூபாவும் நட்டமேற்பட்டதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.எரி எண்ணெய் லீற்றர் ஒன்றில் ஏற்படும் நட்டம் 45 ரூபா எனவும் கூட்டுத்தாபனம் தெரிவிக்கின்றது.

127 ரூபாவுக்கு இறக்குமதி செய்யப்படும் ஒரு லீற்றர் பெற்றோல் 125 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதுடன், 103 ரூபாவுக்கு இறக்குமதி செய்யப்படும் ஒரு லீற்றர் டீசல் 76 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் கூட்டுத்தாபனம் தெரிவிக்கின்றது. மேலும் 100 ரூபாவுக்கு இறக்குமதி செய்யப்படும் ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 61 ரூபாவாகவும், 85 ரூபாவுக்கு இறக்குமதி செய்யப்படும் ஒரு லீற்றர் எரி எண்ணெய் 40 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகிறது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த கூட்டுத்தாபனத்தின் பேச்சாளரொருவர், உலகச் சந்தையில் எரிபொருள்களின் விலைகள் உயர்வடைந்து செல்கின்றபோதும் நுகர்வோருக்குச் சலுகை விலைகளில் இவற்றை விற்பனை செய்வதாலும், மின் உற்பத்திக்கு எரிபொருள்கள் நியாயமான விலைகளில் விநியோகிக்கப்படுவதாலும் கூட்டுத் தாபனம் பெரும் நட்டத்தை எதிர்கொள்வதாகத் தெரிவித்தார். (த-22)

# நீரிழிவு ஒழிப்பு மாதமாக நவம்பர் லயன்ஸ் கழகத்தினால் பிரகடனம்

தென்மராட்சி, ஒக்.29

உலக நீரிழிவு தினத்தையொட்டி சர்வதேச லயன்ஸ் கழகத்தினர் நவம்பர் மாதத்தினை நீரிழிவு ஒழிப்பு மாதமாகப் பிரகடனப்படுத்தியுள்ளனர்.

'நீரிழிவினை வெற்றி கொள்வோம்' என்னும் தலைப்பிலான லயன்ஸ் நீரிழிவு மாத அங்குரார்பண நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

லயன் டாக்டர் எஸ்.எஸ். அருளானந்தம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகச் சர்வதேச லயன்ஸ் கழக 306 பி, மாவட்ட ஆளுநர் லயன் பிரியந்த பெர்னாண்டோ கலந்து கொள்வார்.

நிகழ்வினையடுத்து பொது மக்களுக்கு சிறுநீர் மற்றும் இரத்தப் பரிசோதனைகளும் நீரிழிவு விழிப்பு கண்காட்சியும் இடம் பெறும். (த-207)

# 'லங்கா முடித்த' பழைய இரும்புக்கு

கொழும்பு,ஒக்.29

தற்போது பயன்படுத்தப்படாமல் இருக்கும் 'லங்கா முடித்த' கப்பலை நங்கூரமிட்டுப் பாதுகாப்பதற்கு மாதாந்தம் 14 இலட்சம் ரூபாவைச் செழவழிக்க வேண்டியுள்ளதாக துறை முகங்கள் மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனால் அதைப் பழைய இரும்புக்கு விற்க வேண்டிய நிலை அமைச்சுக்கு ஏற்பட்டுள்ளது.

கப்பலின் வயது, அதிகளவிலான எரிபொருள் செலவு, அதை நடத்திச் செல்வதில் நிலவும் தடைகள், பெருமளவு நாடுகளின் கப்பல் சார்ந்த நிர்வாக விதிமுறைகளுக்குப் பொருந்தாத நிலை போன்ற காரணிகளால் கப்பலைச் சேவையில் ஈடுபடுத்த முடியாதுள்ளதாக அமைச்சு தெரிவிக்கின்றது.

எனவே இலங்கைக் கப்பல் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான இந்தக் கப்பலை விற்றுவிடுவதற்கு அல்லது உதிரிகள் என்ற பெறுமதியில் விற்பனை செய்வதற்கு அமைச்சு தீர்மானித்துள்ளது. அது தொடர்பாக அமைச்சரவையின் அனுமதிகோரி யோசனை ஒன்றும் முன்வைக்கப்பட்டுள்ளது.

கப்பல்களுக்கான சர்வதேச விதிமுறைகளுக்கு அமையப் பெறவேண்டியுள்ள தர நிர்ணயச் சான்றிதழுக்காக 'லங்கா முடித்த' கப்பலில் நிலவும் தொழில் நுட்பக் கோளாறுகள் சீர் செய்யப்படவேண்டியுள்ளன. அதற்கு 39 மில்லியன் ரூபாவுக்கு மேல் செலவாகுமெனவும் மேற்படி அமைச்சு தெரிவிக்கிறது.

1982 ஆம் ஆண்டு கட்டப்பட்ட இந்தக் கப்பல் 29 ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ளது. (த-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்கு லட்சம் பனம் நாற்றுக்களை அடுத்த ஆண்டு நடுவதற்குத் திட்டம்

## பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 29

யாழ்.மாவட்டத்தில் அடுத்த ஆண்டு முற்பகுதியில் நான்கு லட்சம் பனம் நாற்றுக்களை நடுகை செய்வதற்கான பெரும் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பனை அபிவிருத்தி சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

இந்தப் பனம் நாற்று நடுகைத் திட்டம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இந்த ஆண்டில் பனம் விதை நடுகைத் திட்டத்தை நாம் கைவிடுகின்றோம்.

இந்தப் பனம் விதை நடுகைத் திட்டம் பிரயோசனமற்றது.

ஆனால் பனம் விதைகளை எடுத்து நாற்றுமேடை அமைத்து அதன் மூலம் முளைக்கும் நாற்றுக்களையே அடுத்த ஆண்டு நடுகை செய்வதற்குத் தீர்மானித்துள்ளோம்.

இந்தப் பனம் நாற்று நடுகைத் திட்டத்தை 2012 ஆம் ஆண்டில் பெரும் திட்டமாக மேற்கொள்வதற்கும் சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கமைய குறைந்தது நான்கு லட்சம் பனம் நாற்றுக்களை அடுத்த ஆண்டில் நடுகை செய்ய உள்ளோம்.

கடந்த காலங்களில் நடப்பட்ட பனம் விதைகள் பெரும் பாலானவை முளைக்கவில்லை. அவை உரிய முறையில் பாதுகாக்கப்படவில்லை என்றார் அவர். (த- 26)

# தென்மராட்சியில் 6000 பேர் வீட்டுத் தோட்டத் திட்டத்தில்

தென்மராட்சி, ஒக். 29

தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த 27 ஆம் திகதி 6 ஆயிரம் வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கையாளர்கள் இரண்டாம் கட்டமாக மரக்கறி விதைகளை நட்டுதிட்டத்தில் இணைந்து கொண்டனர்.

அரசின் வாழ்வு எழுச்சித் (திவிநெகும) திட்டமான குடும்பப் பொருளாதாரத்தையும் போசாக்கையும் மேம்படுத்தும் பத்து லட்சம் மனைப்பொருளாதார அலகுகளை உருவாக்கும் தேசிய திட்டத்தின் கீழ் வீட்டுத் தோட்டத்துக்கான விதை வகைகளை அவர்கள் நட்டனர்.

பிரதேச மண் வளத்துக்கேற்ப கீரை, பயிற்றை, வெள்ளரி, புடோல், அவரை உட்பட பல்வேறு வகையான விதைகள் 6 ஆயிரம் பயனாளிகளுக்குக் கடந்த 27 ஆம் திகதி அந்தந்த கிராம அலுவலர்களால் விநியோகிக்கப்பட்டு மு.ப. 9.59 மணிக்கு விதைகள் நடப்பட்டன.

இதே நிகழ்வு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் உட்பட உத்தியோகத்தர்களால் இந்தத் திட்டத்தின் கீழ் விதைகள் நடப்பட்டன. (த- 207)

# வெள்ளக் காடாக செல்வபுரம் வீதி

பளைப் பிரதேசத்தில் அண்மையில் மக்களை மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட செல்வபுரம் கிராமத்துக்குச் செல்லும் வீதி வெள்ளக்காடாகக் காணப்படுவதால் கிராம மக்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

அண்மையில் பெய்த மழையினால் வீதியின் பல இடங்களில் வெள்ளம் தேங்கி நிற்கிறது. இதனால் இந்தக் கிராமத்தில் வதியும் குடும்பங்கள் குடியிருப்பு இல்லாத காணிகள் ஊடாகத் தமது நாளாந்த தேவைகளுக்காகச் சென்று வருகின்றனர்.

இந்த வீதியில் கனரக வாகனங்கள் பயன்படுத்தப்பட்டதால் பல இடங்கள் சேதமடைந்து மழை வெள்ளம் தேங்கி நின்று மக்களின் போக்குவரத்துக்கு இடைஞ்சலாகக் காணப்படுகிறது.

பளைப் பிரதேச சபையினர் இந்த வீதியைப் புனரமைக்க மாட்டார்களா என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (த-207)

## விரைவான சேவைக்காக....



வசதி வாய்ப்பு- பிறப்பு, இறப்பு திருமணச் சான்றிதழ்களுக்கு விண்ணப்பித்து அவற்றை ஒரு மணித்தியாலயத்தில் பெற்றுக் கொள்வதற்கான கணினி மயப்படுத்தப்பட்ட சேவை வலி.மேற்குப் பிரதேச செயலகத்தில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது. பிரதிப் பதிவாளர் நாயகம் என்.சதாசிவஐயர் முதலாவது விண்ணப்பப் படிவத்தின் சான்றிதழைக் கணினியில் பெற்று பிரதேச செயலர் திருமதி தே.பாபுவிடம் கையளிக்கிறார். (த- 29)

# பளை கச்சார்வெளிச் சந்தியில் வீதி விளக்கு பொருத்த கோரிக்கை

பளை, ஒக். 29

பளை, கச்சார்வெளிச் சந்தியில் ஏ-9 வீதியில் வீதி விளக்குப் பொருத்துமாறு அந்தப் பகுதி மக்கள் பளைப் பிரதேச சபையினரைக் கோரியுள்ளனர்.

தூர இடங்களிலிருந்து இரவு வேளைகளில் பஸ்ஸில் வரும் இந்தப் பகுதி மக்கள் இடம் தெரியாமல் சிரமங்களை எதிர்நோக்குவதால் கிராம மக்களின் நலன் கருதி வீதி விளக்குப் பொருத்துமாறு பிரதேச சபையினரை கோரியுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து இரவு வாகனங்களில் வருவோரில் சிலர் இறங்கும் இடத்தை அடையாளம் காண முடியாததால் பளை நகரில் இறங்கி மூன்று கிலோ மீற்றர் தூரம் நடந்து தமது வீடுகளுக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது.

ஏ-9 வீதியில் எழுதுமட்டுவாழ் சந்திக்குப் பின்னர் கச்சார்வெளிச் சந்தியிலேயே வாகனங்களில் வருவோர் இறங்குகின்றனர்.

இதற்கு இடைப்பட்ட நான்கு கிலோ மீற்றர் தூரம் வரை இடம் தெரியாத அளவுக்கு இருமருங்கிலும் பற்றைகளாகக் காணப்படுகிறன.

இந்த நிலையில் யாழ்ப்பாணத்திலிருந்து மாலை 5.30 மணிக்குப் பின்னர் பயணிகள் வாகனங்களில் பயணிப்போர் இறங்கும் இடம் தெரியாமல் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதனால் அண்மையில் கச்சார்வெளி, செல்வபுரம் ஆகிய கிராமங்களில் மீளக் குடியமர்ந்துள்ள மக்களின் நலன்கருதி கச்சார்வெளிச் சந்தியில் (ஏ-9 வீதியில்) வீதி விளக்கு பொருத்துமாறு கோரியுள்ளனர். (த-207)

# பணம், நகை மீளப்பெறுதல்

சங்கானை, ஒக். 29

வட்டுக்கோட்டை, தபாற்கந்தோரடியில் இயங்கிவந்த அகில இலங்கைப் பரஸ்பர காயநிதிச் சங்கம் 1995 இல் ஏற்பட்ட இடப்பெயர்வின் போது இடம்பெயர்ந்து வன்னி மாவட்டத்தில் தனது செயற்பாடுகளை மேற்கொண்டிருந்தது.

தற்போது மீண்டும் இந்தச் சங்கம் வட்டுக்கோட்டையில் செயற்படுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

இந்தச் சங்கம் மூலம் ஒவ்வொருவருக்கும் சேர வேண்டிய பணம் மற்றும் அடகுநகை மீளப்பெறல் போன்ற செயற்பாடுகளை அண்மையில் இந்தச் சங்கத்தின் நிர்வாகி இ.ஆனந்தராசா மேற்கொண்டுள்ளார்.

சங்கத்தின் அங்கத்தவர்கள் அடையாள அட்டை, அடகுச் சீட்டு மூலப் பிரதிகளை ஆதாரங்கள் மூலம் சமர்ப்பித்துத் தமக்குரிய தொகையை, அடகு நகையை மீளப் பெற்றுக் கொள்ளலாம் என நிர்வாகி இ.ஆனந்தராசா தெரிவித்துள்ளார். (த-29)

# வேலணையில் மரம் நடுகை

மனைப் பொருளாதார திட்டத்தின் இரண்டாம் கட்ட நடவடிக்கையாக விதைகள் மற்றும் மரம் நடுகைத் திட்டம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை வேலணை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

காலை 9.59 மணிக்கு பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தலைமையில் விதை நடுகைகள் இடம்பெற்றன. வேலணை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வேலணை பிரதேச சபைத் தலைவர் சி.சிவராஜா, உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி மீரா திசைநாயகம், தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் இ.ராதாகிருஷ்ணன் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (த-7)

# தீபாவளியன்று பசு வெட்டிய மூவரில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஒக்.29

தீபாவளித் தினத்தன்று இளம் பசுமாடு ஒன்றைக் கொன்று இறைச்சியைப் பங்கு போட்டுக் கொண்டிருந்த நான்கு பேர் பொதுமக்கள் வழங்கிய தகவல்களையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸாரைக் கண்டு தப்பி ஓடியுள்ளனர். எனினும் அவர்களில் ஒருவரைச் சுன்னாகம் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

இந்தச் சம்பவம் மயிலங்காடு பகுதியில் வீடு ஒன்றில் வீட்டின் உரிமையாளர் உட்பட மூவர் பசுவைக் கொன்று பங்கு போட்டவண்ணமிருந்தனர்.

இதனைக் கண்ட பொதுமக்கள் சுன்னாகம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர். சம்பவ இடத்துக்குப் பொலிஸார் வருவதைக் கண்ட அவர்கள் உரித்த இறைச்சியையும் கைவிட்டுத் தப்பி ஓடி விட்டனர்.

பொலிஸார் இறைச்சியை எடுத்துச் சென்று மல்லாகம் நீதிவான் கஜநிதிபாலன் முன்னிலையில் சமர்ப்பித்தனர். அவற்றைப் புதைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டதை அடுத்து அவை புதைக்கப்பட்டன. இறைச்சி மட்டும் 67 கிலோகிராம் கொண்டவை.

இறைச்சியின் பெறுமதி 19 ஆயிரம் ரூபா



வெனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் இதில் சம்பந்தப்பட்ட மூவரில் ஒருவரைப் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

அவர் நீதிவான் முன்னிலையில் முன்னிலைப் படுத்தப்பட்ட போது 14 நாள்களுக்கு விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டார்.

சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிந்திக்க பண்டா, பொலிஸ் சார்ஜன்ட் டுகனாசனில், சமரசிறி, பொலிஸ் கான்ஸ்டபிள்கள் பண்டா, மயூரன் ஆகியோர் இறைச்சியை மீட்டனர். (க- 44- 14)

# கொடிகாமம் நகர்ப் பகுதியில் இரண்டு பஸ் நிலையங்கள்

## பயணிகள் பெரும் சிரமம்

தென்மராட்சி, ஒக்.29

கொடிகாமம் நகர்ப் பகுதியில் இரண்டு பேருந்து நிலையங்கள் இயங்குவதால் பயணிகள் சிரமங்களை எதிர் நோக்கியுள்ளனர்.

ஏ-9 வீதியில் நீண்டகாலமாகப் பேருந்து நிலையம் அமைந்திருந்தது. பல வாகனங்கள் தரித்து நிற்பதால் நகரில் வாகனப் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டதையடுத்து பருத்தித்துறை வீதியில் பல மில்லியன் ரூபா செலவில் பஸ் நிலையம் பிரதேச சபையினரால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பேருந்து நி[illegible] உள்ளூர் சேவைகளுக்[illegible]டும் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஏ-9 வீதி ஊடாக கொடிகாமத்துக்கு அப்பால் செல்லும் பயணிகள் வாகனங்கள் பழைய பேருந்து நிலையத்[illegible] செல்லும் அனைத்து பயணிகள் வாகனங்களும் (இ.போ.ச. பேருந்துகள் உட்பட) பழைய பேருந்து நிலையத்தையே பயன்படுத்தி வருகின்றன. புதிய பேருந்து நிலையம் திறக்கப் பட்டதையடுத்து பழைய பேருந்து நிலையத்தில் காணப் பட்ட பயணிகள் தங்கும் கட்டடம் உடைக்கப்பட்டு விட்டது. பழைய பேருந்து நிலையத்தை பயணிகள் பயன்படுத்தி வருவதால் மழை காலத்தில் பேருந்துக் குக் காத்திருக்கும் பயணிகள் மழையில் நனைந்த நிலையில் பேருந்தில் பயணிக்க வேண்டிய நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடி வலையைப் பாவிக்கவே தடை 'ட்றோலர்' படகைப் பயன்படுத்தலாம்

## அரச வர்த்தமானியில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், ஒக். 29

'ட்றோலர்' படகு பயன்படுத்திக் கடல்தொழில் செய்வதற்கு எந்தத் தடையும் இல்லை. 'ட்றோலர்' மடியைப் பயன்படுத்தி தொழில் செய்வதே தடை செய்யப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 4ஆம் திகதி வெளியிடப்பட்ட அரச வர்த்தமானியில் இது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

அதிவிசேட வர்த்தமானியாக அது வெளியிடப்பட்டுள்ளது.

அதில் கடற்படுகையில் ஏதேனும் வாருதலில் ஈடுபடும் தொழில் முறைகள் எதுவும் மேற்கொள்ள முடியாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் இது 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடல்தொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் 30 ஆம் பிரிவுடன் சேர்த்துக் கொள்வதற்காக கடல்தொழில் ரீதியில் வளங்கள் அபிவிருத்தி அமைச்சினால் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

'ட்றோலர்' மடி பயன்படுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது போல வேறும் பல தொழில் முறைகளுக்கும், உபகரணங்களுக்கும் அரசினால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 1996 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7 ஆம் திகதி வெளியிடப்பட்ட அரச வர்தமானி மூலம், தள்ளுவலை கடல் தொழில், கடல்பாலூட்டிகள் ஈட்டிக் கடல்தொழில், எமாகஸ் வலை கடல்தொழில் கடலடிப் பாறைகளில் அல்லது பாறைகளில் வலிவலை, முக்கூட்டு வலைகடல்தொழில்பாடுகள், கடல் வாழ் பாலூட்டிகள் அல்லது கடல் ஆமைகளைப் பிடித்தல் அல்லது கொல்லுதல் என்பன தடை விதிக்கப்பட்டுள்ளன.

96 ஆம் ஆண்டு இரண்டாம் இலக்க கடற்தொழில்ச் சட்டம் மூலம் நஞ்சு முதலியவற்றைப் பயன்படுத்துதல், டைனமற் பாவித்தல் ஆகியவற்றுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

2006 ஆம் ஆண்டு ஜூலை 21 ஆம் திகதி வர்த்தமானி மூலம் தங்கூசி வலை பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 24 ஆம் திகதி திங்கள்கிழமை காலை வேளை பொலிஸார் குருநகர் பகுதியில் திடீர்ச் சோதனை நடவடிக்கை மூலம் 'ட்றோலர்' மடி பயன்படுத்துபவர்களைக் கைது செய்வதற்கான சோதனை 'ட்றோலர்' படகுகளில் மேற்கொள்ளப்பட்டது. எனினும் எவரும் கைது செய்யப்படவில்லை.

கடல்தொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் வைத்திய கலாநிதி ராஜித சேனரட்னவின் உத்தரவின்படியே பொலிஸார் இந்த சோதனை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

'ட்றோலர்' மடி பயன்படுத்தித் தொழில் செய்பவர்கள் கடற்படையினருடன் நல்லுறவுகளைப் பேணியே இந்தச் சட்ட விரோத தொழில் முறைகளை மேற்கொண்டு வருவதாகக் கூறப்படுகிறது. (த-14)

# யாழ்ப்பாணம்- குறிகாட்டுவான் பஸ்சேவை சீரான முறையில்

யாழ்ப்பாணம், ஒக்.29

யாழ்ப்பாணத்திலிருந்து குறிகாட்டுவானுக்கான இறுதி அரச பஸ் சேவை சீராக இடம்பெறுகிறது. குறிகாட்டுவானுக்கான பஸ்சேவை சிலவேளைகளில் தடைப்படுவதாகக் கூறப்படுவதில் எந்த உண்மையுமில்லை என யாழ்.நகர பஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர். ஸ்ரீபவன் தெரிவித்தார்.

யாழ். பஸ் நிலையத்திலிருந்து இரவு 7.45 மணிக்குப் புறப்படும் குறிகாட்டுவானுக்கான இறுதி பஸ் சேவை சீராக இடம்பெறுவதில்லை என முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

சிலவேளைகளில் இந்த நேரத்துக்குரிய பஸ்சேவை இடம் பெறுவதில்லை எனவும் இது பற்றி பஸ் நிலையத்தில் கடமையில் உள்ளவர்களைக் கேட்டால் புங்குடுதீவுக்குப் பஸ் இல்லை. அல்லது பழுதாகி விட்டது என்றும் கூறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புங்குடுதீவு, குறிகாட்டுவான் செல்லும் பயணிகள் சில வேளைகளில் ஊர்காவற்றுறை பஸ்ஸில் ஏற்றிவிடப்படுகின்றனர். அந்த பஸ் அவர்களை வங்களாவடி, வேலணைத்துறைப் பகுதிகளில் இறக்கிவிட்டு சென்றுவிடுகிறது. இதனால் பயணிகள் புங்குடுதீவுக்கு நடந்து செல்ல வேண்டியுள்ளது.

இந்த பஸ்ஸில் குறிப்பிட்ட தொகையினரை ஏற்றிச் செல்ல ஏனைய பயணிகள் பஸ் நிலையத்தில் தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக பொறுப்பதிகாரியுடன் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் இதனை மறுத்தார்.

அவர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்,

எக்காரணம் கொண்டும் குறிகாட்டுவானுக்கான பஸ் சேவையை இடைநிறுத்துவதில்லை. அந்தப் பகுதிக்குரிய பஸ் பழுதடைந்தால் பதிலாக வேறு பகுதிக்குச் செல்லும் பஸ் ஒழுங்கு செய்து கொடுக்கப்படுகிறது. புங்குடுதீவுக்குச் செல்பவர்களுக்கு ஏற்றதாக அவர்களுக்கான படகு புறப்படும் நேரத்தைக் கருத்தில் கொண்டு பஸ் சேவையை நடத்துகிறோம். சேவை சீராக இடம்பெறுகிறது. -என்றார் அவர். (த- 4- 325)

# வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்க 21 ஆவது ஆண்டு விழா இன்று

யாழ்ப்பாணம், ஒக்.29

யாழ்.வலுவிழந்தோர் புனர்வாழ்வு சங்கத்தின் 21 ஆவது ஆண்டு நிறைவுவிழா இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு திருநெல்வேலி வடக்கு, ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள விடுதிக் கட்டடத்தில் இடம்பெறவுள்ளது.

வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத் தலைவர் வைத்திய கலாநிதி ந.சிவராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்து கொள்வார்.

இந்த நிகழ்வு காலை 6.30 மணிக்கு துவிச்சக்கரவண்டி, முச்சக்கர வண்டி ஓட்டத்துடன் ஆரம்பமாகி அரங்க நிகழ்வுகள் காலை 8.30 மணி முதல் இடம்பெறும். இதில் புதிதாக அமைக்கப்பட்ட கண்காட்சி நிலையத் திறப்பு விழாவும் மலர் வெளியீடும், 'ஆர்க்' பாடசாலை மாணவர்கள், அறோட், விழிப்புலனற்றோர் சங்கம், சிவபூமி பாடசாலை மாணவர்கள் ஆகியவர்கள் பங்குபற்றும் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து விற்பனை நிலையத் திறப்பு விழாவும் பரிசளிப்பு விழாவும் இடம் பெறும். (த-313)

## பனை வளம் காப்போம்....



எதிர்காலத்துக்காக- பனை வள அபிவிருத்திச் சபையின் ஆலோசனையுடன் சரவணை கிழக்குப் பகுதியில் 1000 பனை விதைகள் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பனை அபிவிருத்திச் சபை வேலணை பிரதேச செயலகத்துக்கு பொறுப்பான வெளிக்கள உத்தியோகத்தர் எஸ்.ரமேஸ் பனை விதைகளை நடுகிறார். அருகில் அந்தப் பிரிவு கிராம உத்தியோகத்தர், பயனாளிகள் உள்ளனர். (த- 167)

# சிறுவனின் கண்ணை பதம் பார்த்த பட்டாசு

பட்டாசு வெடித்து அதன் அடிக்கட்டை சிறுவனின் கண்ணைத் தாக்கிக் காயப்படுத்தியது.

இந்தச் சம்பவம் தீபாவளி தினத்தன்று மீசாலை வடக்கில் இடம்பெற்றது. இதே இடத்தைச் சேர்ந்த ஜெகநாதன் சதீஸ் (வயது- 13) என்னும் சிறுவனுக்கு கண்ணில் காய மேற்பட்ட நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இதேவேளை தீபாவளி கொண்டாட்டத்தில் ஈடுபட்ட குடும்பஸ்தர் விஷப் பாம்பால் கடியுண்டார். இயக்கச்சி, சங்கத்தார் வயலைச் சேர்ந்த பொன்னையா கயிலாயபிள்ளை (வயது- 64) என்பவர் பாம்பினால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (த- 207)

# தென்மராட்சியில் இடம்பெற்ற விபத்துக்களில் நால்வர் காயம்

தென்மராட்சி, ஒக்.29

தீபாவளி தினத்தன்று வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் சிக்கி நால்வர் காயமடைந்தனர்.

மிருசுவில் வடக்குப் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்தில் எழுதுமட்டுவாழ் கரம்பகத்தைச் சேர்ந்த சரவணமுத்து யோகராசா (வயது 52) படுகாயமடைந்து சுயநினைவிழந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

சுயநினைவிழந்த நிலையில் கொண்டு வரப்பட்ட இவரிடம் காணப்பட்ட தங்கநகைகள், அடையாள அட்டைகள், கைக்கடிகாரம், ஒரு தொகை பணத்துடன் பர்ஸ் ஆகியவை வைத்தியசாலை நிர்வாகத்தினர் பொறுப்பேற்று வைத்துள்ளனர்.

மேலும் வரணி இயற்றாலைப் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் சிக்கி இதே இடத்தைச் சேர்ந்த முருகேசு பிரதீபன் (வயது- 19) சின்னத்தம்பி கிருபாகரன் (வயது- 14) வல்லிபுரம் கோடீஸ்வரன் (வயது 29) ஆகியோரும் தீபாவளி தினத்தில் இடம்பெற்ற விபத்தில் காயமடைந்தனர். பளை, அரசர் கேணியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை ஜெயகரன் (வயது- 30) என்பவர் நேற்று இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த நிலையில்சாவகச்சேரி வைத்திய சாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (த- 207)

# சூதாட்டத்தில் ஈடுபட்டவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஒக்.29

வடமராட்சி, துன்னாலைப் பகுதியில் சூதாட்டத்தில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சந்தேக நபர் ஒருவர் நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

துன்னாலைப் பகுதியைச் சேர்ந்த குறித்த சந்தேகநபர் நெல்லியடிப் பொலிஸாரால் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டார்.

வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிவான் சந்தேக நபருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். (த- 319)

# யாழ். மத்திய கல்லூரியில் நேற்று இராசதுரை நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம், ஒக்.29

யாழ். மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் கணபதி இராசதுரையின் நினைவுப் பேருரை நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் யாழ். மத்திய கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் இடம் பெற்றது.



இந்த நிகழ்வில் சமயத் தலைவர்கள் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர். அதனைத் தொடர்ந்து முன்னாள் அதிபர் கணபதி இராசதுரையின் உருவப்படத்துக்கு அவரது குடும்பத்தினர் மலர் மாலை அணிவித்து நினைவஞ்சலி செலுத்தும் நிகழ்வு இடம்பெற்றது. தொடர்ந்து நிகழ்வின் தலைமையுரையை பாடசாலை அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன் நிகழ்த்தினார்.

இந்த வைபவத்தில் பிரதான நிகழ்வாக "எமது கல்வி முயற்சிகள்; முடிவுறாத பயணங்கள்" எனும் தலைப்பில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் அதிபர் சோ.பத்மநாதன் நினைவுப் பேருரையை நிகழ்த்தினார். (த- 313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் முன்னாள் அதிபர் வ.சிவசுப்பிரமணியத்தின் (வைசர் ) பதினைந்தாவது நினைவுப் பேருரை நிகழ்வு அண்மையில் கல்லூரியில் நடைபெற்றது. மங்கள விளக்கேற்றி நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்படுவதையும்-

நினைவுப் பேருரை ஆற்றிய யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகத் தலைவர் பேராசிரியர் நந்தகுமார், கல்லூரி அதிபர் கலாநிதி ஆறு.திருமுருகன், அமரர் சிவசுப்பிரமணியத்தின் மகன் வைத்திய கலாநிதி எஸ்.சிவபாலன் ஆகியோரையும் முதலாவது படத்தில் காணலாம்.

கல்லூரி நிறுவுநர் குடும்பத்தைச் சேர்ந்த தர்மலிங்கம் சித்தார்த்தன் மற்றும் வைத்திய கலாநிதி சிவசுப்பிரமணியம் சிவானந்தராஜா ஆகியோர் உரையாற்றுவதை இரண்டாவது, மூன்றாவது படங்களிலும் காணலாம். (அ)

# கொரிய மொழி பரீட்சை முடிவுகள் வெளியாகின

அண்மையில் இடம்பெற்ற கொரிய மொழி பரீட்சையின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. பரீட்சைக்குத் தோற்றியவர்கள் தமது முடிவுகளை www.slbfc.lk என்ற இணையத்தளத்தின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலும், இம்முறை நடைபெற்ற கொரிய மொழிப் பரீட்சையின் போது பரீட்சை விதி முறைகளை மீறி நடந்துகொண்ட குற்றச்சாட்டின் பேரில் சுமார் 60 பேர் பரீட்சை நிலையங்களிலிருந்து வெளியேற்றப் பட்டதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் ஏற்கனவே தெரிவித்தது.

இந்தநிலையில், வெளியேற்றப்பட்ட சந்தேக நபர்களின் பெறுபேறுகள் இடை நிறுத்தப்பட்டுள்ளதுடன் அவர்கள் மீண்டும் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான வாய்ப்பையும் இரண்டு வருட காலத்துக்கு இழந்துள்ளதாக மேற்படி முகவர் நிலையம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ)

# கள்ளமாக கனடா செல்ல முயன்ற இலங்கையர் சென்னையில் கைது

ஆள்மாறாட்ட போலிக்கடவுச்சீட்டு மூலம் கனடா செல்ல முயன்ற இலங்கைத் தமிழரொருவர் சென்னை விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சென்னை சர்வதேச விமான நிலையத்தில் இருந்து கொழும்பு வழியாக கனடாவுக்கு நேற்று முன்தினம் புறப் படவிருந்த விமானத்தின் மூலமே பிரஸ்தாப இளைஞர் கனடா செல்ல முயன்றுள்ளார்.

அதன்போது விமானப்பயணிகளை இந்திய விமான நிலைய குடிவரவு அதிகாரிகள் சோதனையிட்டபோது பிரஸ்தாப இளைஞரின் கடவுச்சீட்டு போலியானது என்பது கண்டறியப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள இளைஞன் இலங்கையைச் சேர்ந்த நாகலிங்கம் என்பதும், இந்தியர்கள் சிலரின் உதவியுடன் தயாரித்துக் கொள்ளப்பட்ட போலி இந்தியக் கடவுச் சீட்டில் கனடா செல்ல முயன்றதும் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இதையடுத்து மேற்கொண்டு பயணத்தைத் தொடர அனுமதி மறுக்கப் பட்ட நாகலிங்கம், குடிவரவு அதிகாரிகளால் விமான நிலையத்தில் கடமையில் இருந்த தமிழகப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். அவரைக் கைது செய்த விமான நிலைய பொலிசார், அவருக்கெதிராக வழக்குப் பதிவு செய்துள்ளனர். (வ)

## 'திவிநெகும' திட்டத்தின் கீழ் மர நடுகை நிகழ்வு

நாவற்குழி,ஒக்.29

திவி நெகும திட்டத்தின் விதைகள் மற்றும் மரங்கள் நடும் தேசிய செயல் திட்டத்தின் யாழ். மாவட்ட நிகழ்வு அண்மையில் கோப்பாய் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் கலந்து கொண்டார்.

பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மர நடுகை, விதைநடுகை என்பவை மேற்கொள்ளப்பட்டதுடன் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு விதைப் பொருள்கள் அன்பளிப்பாக வழங்கப் பட்டன. (வ-121)

## பண்டத்தரிப்பு- கீரிமலை வீதி புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.29

சண்டிலிப்பாய், பண்டத்தரிப்பு, கீரிமலை வீதி புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஏற்பாட்டில் இந்த புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சண்டிலிப்பாய் சந்தியில் இருந்து பண்டத்தரிப்புச் சந்திவரை சென்று அங்கிருந்து கீரிமலை செல்லும் வீதி தார் ஊற்றி புனர்நிர்மாணம் செய்யப்பட்டு வருகின்றது.

குன்றும் குழியுமாக மிக மோசமாகச் சேதமடைந்திருந்த இந்த பிரதான வீதி தார் ஊற்றி புனர்நிர்மாணம் செய்யப் படுகிறது. (வ-26)

# மரண அறிவித்தல்



## திருமதி சரோஜினிதேவி சிவஸ்கந்தா

(ஓய்வுபெற்ற தொலைபேசியாளர்)

கருங்காலி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் அராலி வடக்கு, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும், இல. 196, மானிப்பாய் வீதியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரோஜினி சிவஸ்கந்தா நேற்று (28.10.2011) வெள்ளிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமசாமி - பரிமளம் தம்பதியரின் அன்பு மகளும், சிவஸ்கந்தாவின் (முன்னாள் உப தபாலதிபர் - நாகேந்திர மடம்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற கந்தர் - சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகளும், சசிகலா, சசிரேகா, சசிதரன், சசிப்பிரபா (பிரான்ஸ்), சசிதேவி (பிரான்ஸ்), சயந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற அருளானந்தசிவம் மற்றும் பேபி சறோஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆனந்தராசா, சிவசுப்பிரமணியம், சுரேஸ்குமார் தீபனா ஆகியோரின் அன்பு மாமியும் ரதீபன் (லண்டன்), லக்சிகா, மோகனதீபன், நிசாந், டர்ஷிகா, ரேனுகா, தேவேஷ் (பிரான்ஸ்), துவாரகா (பிரான்ஸ்), சுருதிகா (பிரான்ஸ்) அபூர்வன், ஆரபி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான ஜெமினி சுரேந்திரா, புவனேஸ்வரி மற்றும் விபுலஸ்கந்தா, ரமணஸ்கந்தா, தவஸ்கந்தா, சலோஜனா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.10.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

196, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தலைமையின் அனுமதியின்றி உறுப்பினர்கள் ஊடகங்களுக்கு அறிக்கை வெளியிட முடியாது

## ஐ.தே.க. செயற்குழுக் கூட்டத்தில் முடிவு

கொழும்பு,ஒக்.29

கட்சித் தலைமைப்பீடத்தின் அனுமதியின்றி கட்சி உறுப்பினர்கள் ஊடகங்களுக்கு அறிக்கை எதுவும் வெளியிடமுடியாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் நேற்றுமுன்தினம் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண மற்றும் மேல் மாகாணசபை உறுப்பினர் சிரால் லக்திலக்க ஆகியோர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதற்கு ஒழுக்காற்று விசாரணைக்குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக்கூட்டம் கட்சித்தலைமையகமான சிறிகொத்தவில் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது, முக்கிய சில விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. எனினும், புத்திகபத்திரண மற்றும் சிரால் ஆகியோரின் விவகாரம் தொடர்பிலேயே முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, கட்சி மறுசீரமைப்பு தொடர்பாக அங்கு கருத்துப்பரிமாற்றம் இடம்பெறவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்ட விடயங்கள் தொடர்பாக கருத்து வெளியிட்ட அக்கட்சியின் மேல்மாகாண சபை உறுப்பினரும், செயற்குழு அங்கத்தவருமான சி.வை. பி. ராம் கூறியதாவது:

செயற்குழு கூட்டத்தில் முக்கிய பல விடயங்கள் தொடர்பில் நாம் கலந்துரையாடினோம். குறிப்பாக, கட்சியின் தலைமைப் பீடத்தின் அனுமதியின்றி கட்சி உறுப்பினர்கள் ஊடகங்களுக்கு எதுவித அறிக்கையும் வெளியிடக்கூடாது. அதேபோன்று ஊடகவியலாளர் மாநாட்டை நடத்தக்கூடாது என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதற்கு அடுத்தபடியாக கட்சியின் விதிமுறைகளை மீறிச் செயற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் புத்திக பத்திரண மற்றும் மேல்மாகாண சபை உறுப்பினர் சிரால் லக்திலக்க ஆகியோர் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு ஒழுக்காற்று விசாரணைக் குழுவொன்றும் நியமிக்கப்பட்டது.

இந்த உறுப்பினர்கள் எவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபட்டனர் என்பது தொடர்பில் இந்த விசாரணைக்குழு ஆராயும். அதேபோன்று விசாரணைகளும் முன்னெடுக்கப்படும்.

விசாரணைகளின் பின்னர் குறித்த உறுப்பினர்கள் குற்றமிழைத்துள்ளனர் என்று நிரூபிக்கப்படும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக கட்சி செயற்குழு உரிய சட்ட நடவடிக்கை எடுக்கும் - என்றார்.(ச-சி)

---

அகதிகள் பரிமாற்ற உடன்படிக்கை கைவிடப்பட்ட நிலையில்

# ஆள்கடத்தலுக்கு எதிராக கடும் நடவடிக்கை ஆஸி - மலேசியத் தலைவர்கள் உடன்பாடு

கொழும்பு,ஒக்.29

அகதிகள் பரிமாற்ற உடன்படிக்கை கைவிடப்பட்ட நிலையில், ஆள்கடத்தல் தொடர்பான இறுக்கமான நடவடிக்கையை ஆஸ்திரேலியப் பிரதமர் ஜூலியா ஹிலார்ட்டும் மலேசிய பிரதமர் நஜிப் ரசாக்கும் மீண்டும் வலியுறுத்தியுள்ளனர்.

அகதிகள் பரிமாற்ற உடன்படிக்கை கைவிடப்பட்ட பின்னர் முதல் தடவையாக ஆஸ்திரேலியப் பிரதமர் ஜூலியா ஹிலார்ட்டும் மலேசியப் பிரதமர் நஜிப் ரசாக்கும் நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

உள்ளூர் அழுத்தங்களுக்கு மத்தியிலும் தங்களின் உறுதிப்பாட்டை மீண்டும் அவர்கள் அப்போது உறுதி செய்தனர்.

பொதுநலவாய அமைப்பின் உச்சி மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்றபோதே இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

ஆள்கடத்தல் தொடர்பான இறுக்கமான நடவடிக்கையை இரு தலைமை அமைச்சர்களும் மீண்டும் வலியுறுத்தினர்.

அந்த உடன்படிக்கையின் படி அகதிகள் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களில் 4000 பேரை ஏற்பது என்ற அடிப்படையில் 800 பேர் தஞ்சம் கோருபவர்களை மலேசியாவிற்கு ஆஸ்திரேலியா அனுப்புவதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

இந்த உடன்படிக்கையை ஆஸ்திரேலிய மேல்நீதிமன்றம் சட்டவிரோதமானது என்று தீர்ப்பளித்தது. எனினும் அந்த உடன்படிக்கையின் படி அந்தக் கொள்கையில் உறுதியாக இருப்பதாக ஆஸ்திரேலியா தெரிவித்துள்ளது.

கிறிஸ்மஸ்தீவில் இடம்பெற்ற துக்ககரமான படகு சம்பவம் ஒன்று மீண்டும் இடம்பெறக்கூடாது என்ற எண்ணத்திலேயே அந்த உடன்படிக்கையை தான் செய்துகொண்டார் என்று மலேசியப் பிரதமர் நஜிப் தெரிவித்துள்ளார்.(ச-சி)

---

# முல்லேரியா சம்பவம் முழுநாட்டுக்குமே களங்கம்

## விமல் வீரவன்ச கூறுகிறார்




கொழும்பு, ஒக்.29

சர்வதேச ரீதியில் இலங்கை தலைவர்களுக்கு எதிராக வழக்குகளைத் தாக்கல் செய்பவர்கள், அதற்கான ஆதாரங்களைத் தேடிக் கொண்டிருக்கின்றனர்.

இந்த நிலையில் அரசின் அரசியல்வாதிகள், பாதாள உலகக்குழுக்களைப் பாதுகாப்பதும் அவர்களைக் கொண்டு தாக்குதல்களை மேற்கொள்வது நாட்டின் நன்மதிப்பைப் பாதிக்கும் என்று அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

அரச கட்சிக்குள் உள்ள இருவர், ஒருவர் மீது ஒருவர் தாக்குதல் நடத்தியமையானது அரசுக்கு மாத்திரமல்லாமல் முழு நாட்டுக்கும் அபகீர்த்தியான செயல் என்று அவர் தெரிவித்துள்ளார். (ச)



தேசிய முத்திரைக் கண்காட்சி கொழும்பில் அமைந்துள்ள பிரதம தபால் அலுவலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமானது. இந்தக் கண்காட்சியை தபால்துறை அமைச்சர் ஜீவன் குமாரதுங்க ஆரம்பித்து வைத்தார்.

---

# தமிழ்க்கட்சிகளுடனும் பான் கீ மூன் பேசவேண்டும்

ஐக்கிய நாடுகளின் செயலாளர் பான் கீ மூன் ஏனைய கட்சிகளின் தலைவர்களையும் சந்திக்க வேண்டும் என்று இலங்கை அரசு கோரியுள்ளது.

அமெரிக்கா சென்றுள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பினரை பான் கீ மூன் சந்திக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தநிலையில் கடந்த புதன்கிழமை அவரை சந்தித்த இலங்கையின் அமைச்சர் மஹிந்த சமரசிங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாத்திரம் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அல்லர். எனவே இனப்பிரச்சினை தீர்வு என்ற விடயத்தில் ஏனைய தமிழ் கட்சிகளுடனும் இலங்கை அரசு பேச்சு நடத்தி வருகிறது.

இந்தநிலையில் இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைச் சந்திப்பது போன்று பான் கீ மூன் ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் பேச வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். (ச)

---

# யுத்தம் நடைபெறாத நிலையில் ஏன் பாதுகாப்பு அமைச்சுக்கு நிதி?

## தொழிற்சங்க மகா சம்மேளனத்தின் பிரதிநிதிகள் கேள்வி

கொழும்பு,ஒக்.29

நாட்டில் யுத்தம் ஒன்றும் நடைபெறாத நிலையில், அடுத்த வரவு செலவுத்திட்டத்தில், அரசபாதுகாப்பு அமைச்சுக்கு ஏன் அதிகளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது என்று அரச சேவை தொழிற்சங்க மகா சம்மேளனத்தின் பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் கேள்வி எழுப்பியுள்ளனர்.

நாடு ஒன்றை முன்னேற்ற வேண்டுமானால், கல்வி, சுகாதாரம் போன்ற அமைச்சுகளுக்கு அதிகளவில் நிதியை ஒதுக்க வேண்டும் என்ற போதிலும், அதனைச் செய்யாது, பாதுகாப்பு அமைச்சுக்கு சுமார் 25 ஆயிரம் கோடி ரூபா ஒதுக்கப்படவுள்ளதாகவும் இது நாட்டைப் படிப்படியாக இராணுவமயப்படுத்தும் நடவடிக்கையோ என்ற சந்தேகம் எழுந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளனர்.

கொழும்பு, பொரல்லையில் உள்ள சுகாதார அமைப்பின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டன. கடந்த வரவு - செலவுத் திட்டத்தில் வழங்குவதாக உறுதியளிக்கப்பட்ட நிவாரணங்களை இந்த வரவு செலவுத் திட்டத்தில் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். 2009 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் வழங்குவதாக உறுதியளிக்கப்பட்ட 2,500 ரூபா சம்பள அதிகரிப்பு, வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவுகள் என்பவற்றை அரசு, இந்த முறை வரவு செலவுத் திட்டத்தில் வழங்க வேண்டும் என்று அரச சேவை தொழிற்சங்க மகா சம்மேளனத்தின் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(ச)

---

# மரை இறைச்சியுடன் இருவர் கைது

கொழும்பு,ஒக்.29

வனாத்தவில்லு, எழுவன்குளம், இறால்மடுவ பிரதேசத்தில் சுமார் 40 கிலோகிராம் மரை இறைச்சியுடன் இரண்டு சந்தேக நபர்கள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை புத்தளம் வனபரிபாலன திணைக்கள அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சந்தேகநபர்கள், வில்பத்து சரணாலயப் பகுதியில் நீண்ட நாள்களாக வேட்டைக்குச் செல்பவர்கள் என்று விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் புத்தளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

---

# ஓய்வுபெற்ற நீதிபதிகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க அதிகாரமில்லை

## முன்னாள் பிரதம நீதியரசர் தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.29

ஓய்வூபெற்ற நீதிபதிகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க நாடாளுமன்றத்திற்கு அதிகாரமில்லை என்று முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

நீதிபதி ஒருவர் அந்தப் பதவியில் இருக்கும் காலத்தில் மாத்திரம் நாடாளுமன்றத்தில் மூன்றில் ஒன்று நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஆதரவுடன் நீதிபதிக்கு எதிராக விசாரணை நடத்த முடியும் . நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் நீதிபதியைப் பதவியில் இருந்து நீக்க மாத்திரமே நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.



முன்னாள் பிரதம நீதியரசர்களின் செயற்பாடுகள் சம்பந்தமாக ஆராய நாடாளுமன்ற தெரிவுக்குழுவொன்றை நியமிக்க சபாநாயகர் சமல் ராஜபக்ஷ அண்மையில் தீர்மானித்தார். இந்தத் தெரிவுக்குழு மூலம் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தனது அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியமை சம்பந்தமாகவும் விசாரணை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.(ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
29 ஒக்ரோபர் 2011 சனிக்கிழமை

# வவுனியா அபிவிருத்திக் குழுக் கூட்டம் தமிழ்ப் பிரிவு தலைவருக்கு அழைப்பு இல்லை

## கண்டிக்கிறார் சிவலிங்கம்

வவுனியா, ஒக்.29

வவுனியா பிரதேச செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வவுனியா பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்திற்கு அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்து வரும் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைப்யின் சார்பில் அதன் தலைவருக்கு அழைப்பிதழ் வழங்கப்படாமை கண்டிக்கத்தக்க விடயம் என அந்தப் பிரதேச சபையின் தலைவர் க.சிவலிங்கம் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் பிரதேசத்தின் அபிவிருத்தி என்பது அனைவரது பங்களிப்பும் சார்ந்த விடயமாக இருத்தல் வேண்டும். அந்த வகையில் வவுனியாவின் பெரிய பிரதேசங்களை உள்ளடக்கிய வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் தலைவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

இந்த கூட்டத்திற்கு ஒழுங்குகளை மேற்கொண்டிருந்த வவுனியா பிரதேச செயலாளரின் இவ்வாறான செயற்பாடுகள் கண்டிக்கத்தக்க விடயமாகும்.

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உருவாக்கப்பட்டு முதன் முதலாக மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டு பல்வேறான அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப் பட்டு வரும் நிலையில் அரசியல் காரணங்கழுக்காக பிரதேச செயலாளர் பக்கச்சார்பாக நடந்துகொள்வது விசனத்தை ஏற்படுத்தும் ஒரு விடயமென்பதை சம்பந்தப்பட்ட தரப்பினர் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்தவிடயம் தொடர்பாக மாவட்ட அரச அதிபருக்கு உடனடியாக அறிவித்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ)

# மல்லாவி மத்திய கல்லூரியில் நூலக வாசிப்பு மாத செயற்பாடு

மல்லாவி, ஒக்.29

மல்லாவி மத்திய கல்லூரி நூலகத்தின் எதிர்வரும் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை உயர் தர வகுப்பு மாணவர்களினால் பல செயற்பாடுகள் முன்னெடுத்து வருகின்றன.

மேற்படி கல்லூரியின் நூலக வாசிப்பு மாத செயற்பாடாகக் கடந்த 20ஆம் திகதி கல்லூரி வளாகம் தொடக்கம் பிரதான வீதி வரை சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த 24ஆம் திகதி வாசிப்பு மாதத்துக்கான கொடிவாரம் அனுஷ்டிப்பு போன்ற நிகழ்வுகளுடன் மாணவர்களின் ஆக்கங்கள் உள்ளடக்கிய சஞ்சிகை வெளியிடப்பட்டுள்ளன.

நாளை மறுதினம் கண்காட்சியும் பாடசாலை உபகரண விற்பனையும் நடைபெறவுள்ளன என் பது குறிப்பிடத்தக்கது. (எ-418)

# பரந்தன் சித்தி விநாயகர் நிர்வாகத்திடம் ஒப்படைப்பு

கிளிநொச்சி, ஒக். 29

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன சித்தி விநாயகர் ஆலயம் கடந்த 22 ஆம் திகதி முதல் இராணுவத்தினரால் அனுமதி வழங்கப்பட்டு ஆலய நிர்வாகத்திடம் ஆலயம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் ஆலயப் பரிபாலன சபை செயலாளர் செல்வரத்தினம் தெரிவித்தார். இந்தவிநாயகர் ஆலயம் கடந்தகால யுத்தம் காரணமாக பெரிய சேதங்களுக்கு உள்ளாகி இருந்தது.

மக்கள் மீளக்குடியமர்ந்த நிலையில் இந்த ஆலயம் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்து நிர்வகிக்கப்பட்டு வந்தது.

இந்த ஆலய நிர்வாகத்தி னரின் கோரிக்கைகளுக் கிணங்க மேற்படி ஆலயம் கடந்த 22 ஆம் திகதி பொது மக்கள் வழிபாட்டிற்கென ஆலய நிர்வாகத்திடம் இராணுவத்தினரால் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-426)

# கிளிநொச்சி கல்வி வலயத்தில் விருது பெற்றோருக்கு பாராட்டு

கிளிநொச்சி,ஒக். 29

கிளிநொச்சி கல்வி வலயத்தில் பிரதீபா பிரபா விருது பெற்ற 4 அதிபர்களையும் 11 ஆசிரியர்களையும் பாராட்டும் நிகழ்வு கடந்த 19 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 9.30 மணிக்கு கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெற்றது.

விருது பெற்ற கிளிநொச்சி முருகானந்தா மகாவித்தியாலய அதிபர் தில்லையம்பலம் வரதன் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் கிளிநொச்சி பதில் வலயக்கல்விப் பணிப்பாளர் க.முருகவேல், பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான கோ.செல்வராசா, கி.சின்னராசா, க.இரட்ணகுமார் மற்றும் கண்டாவளைக் கோட்டக்கல்வி அலுவலர் வீ.இராசகுலசிங்கம், பூநகரி கோட்டக்கல்வி அலுவலர் சு. தர்மரட்ணம், பளை கல்விக் கோட்ட அலுவலர் எஸ். ஆனந்தசிவம், கிளிநொச்சி கல்வி வலயக் கணக்காளர் ஆகிரிதரன், நிர்வாக உத்தியோகத்தர் இ.தவராசா ஆகியோர் விருது பெற்ற அதிபர், ஆசிரியர்களை பாராட்டி உரை நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் கிளிநொச்சிக் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள், அலுவலகப் பணியாளர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (எ-405)

# வலுப்படுத்தும் கலந்துரையாடல்

கிளிநொச்சி,ஒக். 29

யு.என்.டி.பி. நிறுவனத்தின் நிதியுதவியுடன் கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி, கரைச்சி, கண்டாவளை, பளை போன்ற பிரதேச செயலகங்களைச் சேர்ந்த சமூக மட்ட அமைப்புக்களைச் சேர்ந்த பிரதிநிதிகளுக்கான வலுப்படுத்தல் கருத்தரங்கு தொடர்ந்து 16 நாள்கள் நடைபெறவுள்ளன.

இந்தக் கருத்தரங்கை யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் நடத்தவுள்ளனர். மேற்படி கருத்தரங்கு கிளிநொச்சி யு.என்.டி.பி நிறுவன அலுவலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை மு.பகல் 10.30 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-406)

# சிறுவர், முதியோர் தினத்தை முன்னிட்டு துணுக்காயில் சிரமதானப் பணிகள்

துணுக்காய், ஒக்.29

துணுக்காய் பிரதேச செயலகத்தில் சிறுவர், முதியோர் தினத்தை முன்னிட்டு சிரமதானப் பணிகள் நடைபெற்றன. இந்த நிகழ்வு கடந்த 23ஆம் திகதி காலை 9 மணிக்கு உதவி அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன் தலைமையில் நடைபெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் துணுக்காய் கிராமத்து மக்களுடன் தேறாங்கண்டல் கிராம மக்களும் கிராம அலுவலர்களும் கலந்து கொண்டு சிரமதானப் பணிகளை மேற்கொண்டனர்.

கடந்த 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அ.த.க.பாடசாலையில் பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்ற சிரமதானப் பணிகளில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பிரதேசத்தின் இராணுவ வீரர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (எ-418)

# மன்னார் பஸார் பகுதிப் பாதை ஒரு வழிப் பாதையாக மாற்றம்

மன்னார்,ஒக். 29

மன்னார் பஸ் தரிப்பிடம் மற்றும் முக்கிய கடைகளுக்குச் செல்லும் பிரதான பாதையொன்றை மன்னார் நகர சபையும், வீதிப் போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸாரும் இணைந்து ஒருவழிப் பாதையாக மாற்றியுள்ளனர்.

மன்னார் பொலிஸ் நிலைய வீதியூடாக வந்து வர்த்தக நிலையங்கள் அமைந்துள்ள பெரிய கடை வீதியூடாக பஸார் பகுதிக்குள் செல்லும் பாதையே நேற்று முன்தினம் முதல் ஒரு வழிப் பாதையாக மாற்றப்பட்டுள்ளது.



இந்தப் பகுதியில் வாகன நெரிசல் அதிகரித்துக் காணப்பட்டமையாலேயே குறித்த வீதியை ஒருவழிப் பாதையாக மாற்றியதாக வீதிப் போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு பஸார் பகுதிக்குள் செல்லும் பாதை ஒரு வழிப் பாதையாக மாற்றப்பட்டுள்ளதால் மன்னார் மக்களும் அந்தப் பகுதியில் உள்ள வர்த்தகர்களும் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். (எ-601)

# போதைப் பொருளுடன் கைதானோர் 31ஆம் திகதிவரை தடுப்புக் காவல்

மன்னார்,ஒக். 29

தலைமன்னார் கிராமத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை ஹெரோயின் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்ட ஒரு மாதக் கைக்குழந்தையின் தாய் உட்பட நான்கு பேரை இந்த மாதம் 31 ஆம் திகதி வரை பொலிஸாரின் தடுப்பில் வைத்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு மன்னார் நீதிவான் திருமதி கே.ஜீவராணி உத்தரவிட்டார்.

குறித்த போதைப் பொருளுடன் தொடர்பு பட்டதாகக் கூறப்படும் ஒரு மாதக் கைக்குழந்தையின் தாய் உட்பட நான்கு பேரையும் கடந்த செவ்வாய்க்கிழமை பொலிஸார் கைது செய்தனர். இந்த நிலையில் குறித்த நான்கு பேரையும் நேற்றுமுன்தினம் மன்னார் நீதிவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தினர்.

இதன்போது தலைமன்னார் பொலிஸார் குறித்த நபர்களைத் தொடர்ந்தும் விசாரணை செய்ய வேண்டும் எனக் கேட்டதையடுத்து இந்த மாதம் 31 ஆம் திகதி வரை பொலிஸில் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு நீதிவான் உத்தரவிட்டார். (எ)

# அவலங்களுடன் வாழும் கல்மடுக் கிராம மக்கள்

*(நேற்றைய தொடர்ச்சி)*

விதைநெல் இலவசமாக வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டபொழுதிலும் இறக்குக் கூலி என்று ஒவ்வொருவரிடமும் ரூ200 வசூலிக்கப்பட்டுள்ளது. இதனைப்போன்றே ஏனைய பயிர் வகைகளுக்கு ரூ100 வசூலிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபையைச் சேர்ந்தவர்கள் இந்த கிராம மக்களிடம் உங்களுக்கு மின்சாரம் வேண்டும் என்றால் சாலையில் உள்ள மரங்களை வெட்டித் தாருங்கள் அப்பொழுது தான் மின்கம்பங்களை நட்டு இழுக்க முடியும் என்று கூறுகின்றனர்.

ஒரு மரத்தைத் தறிப்பதற்கு குறைந்தபட்சம் 4 ஆயிரம் ரூபா முதல் 5 ஆயிரம் ரூபா வரை செலவாகின்றது.

வருமானத்துக்கு வழிதெரியாது தவிக்கின்ற மக்கள் இப்பொழுது இந்தச் செலவை எப்படி எதிர்கொள்வது என்பது தெரியாமல் முழிபிதுங்கி நிற்கின்றனர்.

தொண்டு நிறுவனம் வேலைக்குக்கூலி என்னும் அடிப்படையில் இந்தக் கிராமமக்களுக்குச் சிறிதளவு பொருளாதார உதவிகளைச் செய்துவருகிறது. இத்தகைய பணியின்கீழ் பாடசாலைக் கட்டடம் போன்ற சிறு சிறு பணிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

யுத்தம் முடிவடைந்து விட்டது நாம் எமது சொந்த இடங்களுக்குச் சென்று மீண்டும் நமது இயல்பு வாழ்க்கையைத் தொடங்கலாம் என்று நினைத்த பொழுது எமக்கு பல்வேறு நெருக்கடிகள் தோன்றியுள்ளது. அரசு ஏதாவது செய்யும் என்று எதிர்பார்த்தோம் ஆனால் செய்யவில்லை.

அரசு யுத்தம் முடிந்தபிறகு அடிப்படைத்தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

ஆனால் அப்படிச் செய்யவில்லை. அப்படிச் செய்வதற்கு அரசிடம் பணம் இல்லை. யுத்தத்துக்கு ஒருநாளைக்கு [illegible] கோடி ரூபா [illegible] அரசிற்கு இன்று அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு செலவழிக்க பணம் இல்லை.

போர் புரிவதற்கு உதவியளித்த நாடுகளும் இன்று நிதியுதவி வழங்கத் தயங்குகின்றன.

அரசு பயங்கரவாதத்தை முறியடித்துவிட்டு அரசியல் தீர்வை வைக்கின்றேன் என்றது. யுத்தம் முடிவுற்றதன் பின்னர் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டுபங்கு பெரும்பான்மை பலம் வந்தவுடன் அரசியல் யாப்பில் திருத்தத்தைக் கொண்டுவந்து பிரச்சினையைத் தீர்ப்பேன் என்றது. அதன் பிறகு மக்கள் எனக்கு அளித்த ஆணையின்படி என்னுள் இருக்கின்ற யோசனையின் அடிப்படையில் அரசியல் தீர்வுகாண்பேன் என்றார் ஜனாதிபதி.

இப்படி அடிக்கடி தெளிவற்ற கொள்கையினால் சலிப்படைந்த உதவிவழங்கும் நாடுகள் இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வை முன்வையுங்கள் அதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்துங்கள். அதன் பிறகு அபிவிருத்திக்கான சகல உதவிகளையும் செய்கின்றோம் என்று தெரிவித்துவிட்டன. எனவே அரசாங்கத்திற்கு எம்முடன் பேச்சு வார்த்தை நடத்துவது அவசி யமாயிற்று.

**வவுனியன்**

*(முற்றும்)*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பட்டதாரி நியமனம் வழங்காவிடின் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட நேரிடும்

## வவுனியா தமிழ் பட்டதாரிகள் சங்க அமைப்பாளர் தெரிவிப்பு

வவுனியா, ஒக். 29

பல்வேறுபட்ட அசாதாரண சூழ்நிலைகளிலும் நிறைந்த துன்பங்கள், துயரங்கள் மத்தியிலும் பல விதமான கனவுகளுடன் கல்வி பயின்று சித்தியடைந்த பட்டங்கள் பெற்ற பின்னரும் தொழில் வாய்ப்பின்றி பட்டதாரிகள் காணப்படுகின்றனர். இவர்களுக்கான நியமனங்களை விரைவில் அரசு வழங்க வேண்டும். இல்லையேல் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட நேரிடும் என வவுனியா மாவட்ட தமிழ் பட்டதாரிகள் சங்கத்தின் அமைப்பாளர் இரா.ஜயமோகன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

பட்டதாரிகள் இன்று தமது வேலைவாய்ப்புக்காக வீதியில் இறங்கிப் போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். பல பட்டதாரி இளைஞர், யுவதிகள் குடும்ப வறுமையின் காரணமாக கூலித் தொழிலாளர்களாக மாறியுள்ளனர். இது அவர்களுக்கு ஏற்பட்டுள்ள துர்ப்பாக்கிய நிலையாகும். பல்கலைக்கழக மாணவர்களுக்கு தலைமைத்துவ பயிற்சி வழங்கி பல்கலைக்கழக நுழைவினை வழங்கும் நிகழ்வு அதே மாணவர்கள் பட்டங்கள் பெற்று வெளியேறியவுடன் பாராமுகமாக இருப்பதற்கான காரணம் என்ன? கடந்த மாதங்களில் பொது நிர்வாக சேவைக்கு நடத்தப்பட்ட பரீட்சைகளில் பல்லாயிரக் கணக்கான பட்டதாரிகள் பரீட்சைக்குத் தோற்றி புள்ளி அடிப்படையில் நேர்முகத் தேர்வுக்கு அழைத்திருந்தும் இதுவரையில் முடிவுகள் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளமையானது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

அரச சார்பானவர்கள் தமக்கு சார்பான பட்டதாரிகளின் பெயர்களை இரகசியமாகத் திரட்டி வருவதனால் நியமனங்கள் அரசியல் சார்பானதாக அமைந்து விடுமோ எனவும் எண்ணத் தோன்றுகிறது. இந்த நிலையைப் பட்டதாரிகள் தொடர்ந்தும் நேர்முகத் தேர்வு பரீட்சை என இழுத்தடிப்பு செய்வது ஏற்றுக்கொள்ள முடியாத விடயமாகும். எனவே உடனடியாக கால மூர்ப்பின் அடிப்படையில் நியமனங்களை அரசு வழங்க வேண்டும். இல்லையேல் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்க வேண்டியேற்படும் எனவும் தெரிவித்தார். (எ)

# ஓமந்தை, உலுக்குளம் விவசாயிகளுக்கு விரைவில் விதை உற்பத்திப் பொருள்கள்

வவுனியா, ஒக். 29

வவுனியாவில் தெரிவுசெய்யப்பட்ட இரு கிராமங்களான ஓமந்தை மற்றும் உலுக்குளம் கிராமங்களில் ஜி.ரி.சட் நிறுவனத்தின் ஊடாக விவசாயிகளுக்கு விதை உற்பத்திப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன என வவுனியா மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் திருமதி ஜெ.ஜெகநாதன் தெரிவித்தார்.

இந்தக் கிராமங்களில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு ஓமந்தையில் ஒருவருக்கு 4 ஏக்கர் வீதம் 2808 புசல் நெல்லும், உலுக்குளத்தில் 474 புசல் நெல்லும் வழங்கப்படவுள்ளதுடன் அதனைப் பெறாதவர்களுக்கு அரை ஏக்கருக்கு உழுந்து, பயறு கௌப்பியும் வழங்கப்படவுள்ளதுடன் இவர்கள் அனைவருக்கும் வீட்டுத் தோட்டத்துக்கான விதைகளும் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை விவசாய வெளிக்கள போதனாசிரியர் பிரிவு ரீதியாக வீட்டுத் தோட்டப் போட்டி இடம்பெற்று முடிந்துள்ள நிலையில் தற்போது மாவட்ட ரீதியாக சிறந்த வீட்டுத் தோட்ட விவசாயிகளைத் தெரிவுசெய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இதேவேளை இந்த வருடம் காலபோகத்துக்கு 19,438 ஹெக்டேயரில் நெற்செய்கை இடம்பெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (எ)

# தூக்கில் தொங்கிய நிலையில் சமயபுரத்தில் வயோதிபர் சடலம்

வவுனியா, ஒக். 29

வவுனியா சமயபுரம் கிராமத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் பொன்னையா தேவர் செல்வராசா என்ற 60 வயதுடைய ஆண் ஒருவருடைய சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மரணமடைந்தவர் நீண்ட நாள்களாக சுகவீனம் அடைந்திருந்ததாகவும் இவரை மனைவி பராமரித்து வந்த நிலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை 5.30 மணியளவில் இவரைக் காணாத நிலையில் வீட்டார் தேடிய போது அயலில் உள்ள மாமரத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டார்.

சம்பவ இடத்துக்கு மரண விசாரணை அதிகாரி சிவநாதன் கிசோர் சென்று பார்வையிட்டதுடன் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டார். (எ)

## ஆசிரியரை நியமிக்குமாறு கோரிக்கை

கிளிநொச்சி, ஸ்கந்தபுரம் இல. 1 பாடசாலையில் 5 ஆண்டுகளுக்கு மேலாக ஆண் ஆசிரியர் பணியில் இல்லாத நிலை காணப்படுகிறது. ஆரம்பப் பாடசாலையாக இருக்கும் இந்தப் பாடசாலையில் சகல பணிகளையும் பெண் ஆசிரியர்களே பல சிரமங்களுடன் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பாடசாலையில் நிர்வாகப் பணிகளையும் பெண் ஆசிரியர்களே மேற்கொண்டு வருகின்றனர். ஆகவே ஆண் ஆசிரியர் ஒருவரை நியமிக்குமாறு இந்தப் பாடசாலையின் பெண் ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-410)



கிளிநொச்சி ஸ்கந்தபுரம் இல.1 அ.த.க.பாடசாலையில் தரம் 5 புலமைப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களான ஸ்ரான்லி சுமல்ராஜ்-சயந்தன் 150, கேதீஸ்வரன்-சரண்ஜா 147 ஆகியோர் பாடசாலை முதல்வர் திருமதி வ.விமலேஸ் வரனுடன். (410)

## மல்லாவி மத்திய கல்லூரியில் மர நடுகை செயற்றிட்டம்

துணுக்காய், ஒக்.29

மல்லாவி மத்திய கல்லூரி உயர் தர வகுப்பு மாணவர்களின் குழு செயற்றிட்டத்தின் கீழ் பயன் தரும் மரக்கறி தோட்டங்களையும், மரங்களையும் உருவாக்கும் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தச் செயற்றிட்டத்திற்காக மல்லாவி மத்திய கல்லூரி வளாகத்தில் உள்ள காணியின் மரக்கறித் தோட்டம், மரவள்ளித் தோட்டம் வாழைத்தோட்டம், மூலிகைத் தோட்டம் என்பனவற்றுடன் தென்னங்கன்றுகள் நாட்டுதல், நிழல் தரும் மரங்கள் போன்ற பயன் தரும் மரங்களை நாட்டுதல் போன்ற வேலைத் திட்டங்களும் இடம்பெறுகிறது.

அது மட்டுமின்றி எதிர் காலத்தில் மாணவர்களை இந்த மரம் நடும் செயற்பாட்டில் முன்வருவதற்கான ஊக்குவிப்பாகவும் இந்தச் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகிறது.

இந்தக் கல்லூரியின் மாணவர்கள் குழுக்களாக பிரிக்கப்பட்டு இந்த செயற்றிட்டத்தை மிகவும் சிறப்பாக அமைத்து வருவதற்காக பிரதேச காணி அலுவலரினால் ஒரு தொகை தென்னம் கன்றுகள் கல்லூரிக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-415)

# நெற்செய்கைக்கான கூட்டம்

அக்கராயன், ஒக். 29

அம்பலப்பெருமாள்குளம், கோட்டைகட்டியகுளம், தென்னியங்குளம் ஆகிய குளங்களுக்கான காலபோக நெற்செய்கை தொடர்பான கூட்டம் கடந்த 11 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை கோட்டைகட்டியகுளம் பாடசாலையில் துணுக்காய் பிர தேச செயலர் சி.குணபாலன் தலைமையில் நடைபெற்றது.

மூன்று குளங்களின் இறுதி விதைப்பு எதிர்வரும் நவம்பர் மாதம் 11 ஆம் திகதியும் நீர் வளங்கல் எதிர்வரும் மார்கழி மாதம் 12 ஆம் திகதி எனவும் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

கோட்டைகட்டிய குளத்தின் கீழ் 405 ஏக்கர்களிலும் அம்பலப்பொருமாள் குளத்தின் கீழ் 850 ஏக்கர்களிலும் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (எ-410)

# பரந்தன் சிவபுரம் வீதி மிகவும் மோசமாகச் சேதமுற்ற நிலையில்

## பயணிப்போர் அவதி

யாழ்ப்பாணம், ஒக்.29

பரந்தன் சிவபுரம் வீதி, மிக மோசமான நிலையில் சேதமடைந்து உள்ளதால் இதனூடாக போக்குவரத்துச் செய்வதில் பெருஞ்சிரமங்களை எதிர் நோக்குவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதியானது முல்லைத்தீவு வீதியில் இருந்து குறுக்கு வீதியாகப் பிரிந்து செல்லும் 11 ஆம் ஒழுங்கையில் காணப்படுகின்றது.

மழைபெய்து வருவதால் இந்த வீதியில் உள்ள குழிகளுக்குள் வெள்ளம் தேங்கி நின்று சேறும் சகதியும் நிறைந்த வீதியாகவே காணப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதியால் பாடசாலை செல்லும் மாணவர்கள் தொடக்கம் கட்டடத் தேவைக்கு மணல் ஏற்றுவதற்கும், விவசாய நடவடிக்கைகளுக்கும் என பல வாகனங்கள் இந்த வீதியால் தினமும் பயணிப்பது குறிப்பிடத்தக்கது.

சம்பந்தப்பட்ட தரப்பினர் இந்த வீதி தொடர்பாக அக்கறை எடுத்து வீதியை திருத்தித்தருமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (எ-426)

# தனி மாவட்டமாக கிளிநொச்சி பிரகடனம் அதற்குப் பின்னரே பிரதேசம் வளர்ச்சி

## பூநகரி பிரதேச சபைத் தலைவர் தெரிவிப்பு

பூநகரி, ஒக்.29

யாழ். மாவட்டத்துடன் இணைக்கப்பட்டிருந்த கிளிநொச்சிப் பிரதேசம் 1985 ஆம் ஆண்டு தனி மாவட்டமாகப் பிரகடனப்படுத்தப்பட்டதினால் இந்தப் பிரதேச மக்களுக்கு பல நன்மைகள் கிடைத்துள்ளன. பல்கலைக்கழக அனுமதியில் விஷேட கவனம் செலுத்தப்பட்டதால் டாக்டர்கள், பொறியிலாளர்கள் உட்பட பல பட்டதாரிகள் உருவாகியுள்ளார்கள். இந்த நேரத்தில் கிளிநொச்சியைத் தனி மாவட்டமாகப் பிரகடனப்படுத்த முன்னின்று செயற்பட்ட முன்னாள் [illegible] வி.ஆனந்தசங்கரிக்கு கிளி[illegible] மக்கள் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன் என பூநகரி பிரதேச சபைத் தலைவர் பொ. சிறிஸ்கந்தராஜா தெரிவித்தார்.

பூநகரி வாடியடிச் சந்தியில் அண்மையில் திறக்கப்பட்ட இலங்கை வங்கிக்கிளை திறப்பு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வட பிராந்திய இலங்கை வங்கி உதவிப் பொது முகாமையாளர் கே.இ.டிசுமணசிறி திறந்து வைத்த இந்த நிகழ்வில் பிர[illegible]

கடந்த இரு தசாப்தங்களுக்குப் பின்பு பூநகரி பிரதேச மக்களின் மேம்பாட்டிற்கான நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. இலங்கை வங்கிக்கிளை இங்கு திறந்து வைக்கப்பட்டதன் மூலம் இந்தப் பகுதி மக்களின் அபிவிருத்தியில் வங்கிக்கு இருக்கும் கரிசனையை உணர முடிகின்றது.

ஒரு பிரதேசத்தின் வளர்ச்சிக்கு தூண்டு சக்தியாக வங்கிகளே இருக்கின்றன. மக்களின் வாழ்வாதாரத்துக்கு உதவ முன்வந்துள்ள இலங்கை வங்கியின் சேவையை சகல மக்களும் சரியான முறையில் பயன்படுத்தி வளர்ச்சியடைய வேண்டும். (எ-115)

## மாணவர் கௌரவிப்பும் உதவி வழங்கும் நிகழ்வும்

கிளிநொச்சி, ஒக்.29

கிளிநொச்சி நகர் கிராம அபிவிருத்திச் சங்க ஏற்பாட்டில் கிளிநகர் எல்லைக்குட்பட்ட தரம்-5 புலமைப்பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர் கௌரவிப்பும், தாய், தந்தையரை இழந்த ஆதரவற்ற 10 சிறார்களுக்கு கல்விக்கான உதவி வழங்கும் நிகழ்வும் இடம் பெற்றது.

மேற்படி நிகழ்வானது கடந்த 25 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பி.ப 3.00 மணிக்கு கிளி நகர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சி.பி.இராஜநாயகம் தலைமையில் இடம் பெற்றது. (எ-426)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி ஜோசியம்



(சென்றவாரத் தொடர்ச்சி)

அதைப் பார்த்ததும் சீடர்களுக்கு மகிழ்ச்சி, "ஆஹா! நம் குருவின் ஜாதகம் ஒரே வண்ணமயமாக இருக்கிறது" என்று புன்னகை பூத்தனர். அதை வைத்து ஜாதகம் சொல்லலானார் ஜோசியர், "உங்கள் குருவுக்கு ஏழரை நாட்டுச் சனியன் பிடித்திருக்கிறது. அது இன்னும் ஏழரை வருஷங்களுக்குப் பிடிச்சு ஆட்டும்," என்று சொல்லும் போதே.

இடையில் முண்டன் குறுக்கிட்டு, "ஜோசியரே! நாங்கள் ஐந்து பேரும் எதற்கு இருக்கிறோம்? எங்கள் குருவை ஆடாமல் பிடித்துக் கொள்வோம்," என்றான். "இன்னும் ஏழரை வருஷம் வரைக்கும் பொருள்வரும், ஆனால், தங்காது. வீண்விரய செலவுகள் ஏற்படும். ஏனென்றால் ராகுவும் கேதுவும் எதிரும் புதிருமா நிற்கின்றன, அகப்பட்டவனுக்கு அஷ்டமத்தில் சனி, ஓடிப் போனவனுக்கு ஒன்பதாமிடத்தில் குரு, என்று சொல்வது போல, உங்கள் குருவின் ஜாதகத்தில் அஷ்டமத் தில் சனி வலுவாக உட்கார்ந்துள்ளான். இன்னும் ஏழரை போன பிறகுதான் குருபார்வை வருகிறது. அப்போது தான் நீங் கள் நினைத்த காரியம் கைகூடும்,"என்று சொன்னார்.

"சீடர்களே! நாம் நம் குருவின் பெயர் நாமத்துக்கு மட்டும் பார்த்துவிட்டு அப்போதே கிளம்பியிருக்கலாம். அப்போதும்ஆடிமாதம் போனால்நினைத்தது நிறைவேறும் என்று சொன்னார். இப்போது நம் பணமும் போய், இன்னும்ஏழரை வருஷம் போக வேண்டும் என்றார். எப்படி ஏழரை வருஷம் காத்திருக்க முடியும்," என்றான் பாவாடை. "சீடர்களே! அப்போது சுருக்கமாக சொன்னேன். இப்போது அலசி ஆராய்ந்து முழுவதும் சொல்கிறேன். நீங்கள் செலுத்தும் காணிக் கையை நான் மட்டும் சாப்பிடப் போறதில்ல. அதில பாதி தட்சணையை என் குல தெய்வமான இரத்தக் காட்டேரி சூலக் கருப்பனுக்கு செலுத்தினால்தான் எனக்கு வாக்கு கொடுப்பான்," என்றார் ஜோசியர்.

"ஜோசியரே! இதற்குப் பிராயச்சித்தம் ஏதும் கிடையாதா? இதற்கு ஏதேனும் பரிகாரம் செய்ய முடியும் என்றால் சொல்லுங்கள்! நாங்கள் செய்கிறோம்,"என்றனர் சீடர்கள். உடனே ஜோசியர், "உங்கள் குருவுக்கும், உங்கள் ஆசிரமத்துக்கும் தோஷம் இருப்பது போல் தெரிகிறது. இந்த தோஷத்தை நீக்கினாலொழிய நீங்கள் நிம்மதியாக இருக்க முடியாது; "என்றார்.

"அப்படி என்ன தோஷம் உள்ளது? என்று விவரமாகக் கூறுங்கள். நாங்கள் அதனை உடனே நீக்கிவிடுகிறோம்" என்றான் சண்டன். "உங்கள் ஆச்சிரமத்தில் உள்ள வாசற்படி தெற்கு நோக்கி உள்ளது. அதை அடைத்து விட்டு, வாசற்படியை மேற்கு நோக்கி வைக்க வேண்டும் அப்பொழுதுதான் சிறப்பு வரும்," என்றார் ஜோசியர். உடனே முண்டன் எழுந்து, "ஜோசியரே! எங்களுக்கு மேற்குத் திசை எது என்பது தெரியாதே"என்றான். உங்கள் குருவைக் கேட்டால், அந்தத் திசையைக் கூறுவார். சரி, பொழுது இருட்டுவதற்குள் போய்ச் சேருங்கள். இல்லையென்றால், உங்கள் குரு ரொம்ப வேதனைப்படுவார். உங்கள் குருவிடம் நான் ரொம்ப விசாரித்ததாகச் சொல்லுங்கள், என்று சொல்லிக் கொண்டிருக்கையில் தன் வீட்டில் புளிச்ச மோர் இருப்பது நினைவுக்கு வர, அதை எடுத்துவந்துஉப்புப்போட்டுக்கலக்கிகொடுத்து, "சீடர்களே இந்த மோரைக் குடித்துவிட்டு தெம்பாய்ச்செல்லுங்கள்..." என்று ஜோசியர் சொல்ல, சீடர்களும், பசிமிகுதியால் குடித்து விட்டுச் செல்ல தயாராயினர்.

"ஜோசியரே! நீங்கள் சொன்ன மாதிரி செய்தால், எல்லாம் நல்லபடியாக நடக்குமா?"என்று சீடர்கள் மீண்டும் கேட்டனர். "ம்... பயப்படாமப் போங்க! ஆனா நான் சொன்ன திசையை மறந்து மாத்தி வைத்து விடாதீர்கள். எதுக்கும் நீங்க எல்லாரும் ஆச்சிரமத்தை அடையும் வரை, மேற்குத் திசை... மேற்குத் திசை மேற்குத் திசை... என்று சொல்லிக் கொண்டே செல்லுங்கள்"என்று அனுப்பி வைத்தார். (முற்றும்)

# அகர வரிசையில் வினைச் சொற்கள்

**"அ" சொற்கள்**


அறிதல்- Know
அடக்கு -Control /Inhibit
அசை - Move
அனுப்பு - Send/ Dispatch
அடி- Strike/Smite
அறி-Know
அணி-Wear
அனுமதி-Allow/Admit
அழி-Distroy
அனுபவி-Enjoy
அரை-Grind
அடை-Get
அதிகரி-Increase
அறிமுகம்-Introduce
அழை-Invite
அள-Measure
அடுக்கு-Pile
அச்சிடு-Print
அதிர்ச்சியடை-Shock/Upset
அடிபணி-Submit
அலை- Wander
அறிவி- Announce
அழகுபடுத்து-Beautify
அவதூறு கூறு-Defame
அணை-Extinguish
அடை காத்தல்-Hatch
அனுமானி-Infer
அவமதி-Insult
அறிவூட்டு-Instruct
அட்டூழியம்-Outrage

எஸ்.கிருசா,
புலோலி.

(வளரும்)

# நோர்வே

நோர்வே ஐரோப்பாவில் ஸ்கண்டிநேவியத் தீபகற்பத்தின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள நாடாகும். இதன் தலைநகரம் ஒஸ்லோ. இந்த நாட்டுக்கு வடக்கே ஆர்டிக் சமுத்திரம் மேற்கே நோர்வேஜிய கடல் தெற்கே வடகடல் என்பவற்றையும் சுவீடன், பின்லாந்து ரஷ்யா என்பவற்றுடன் நில எல்லைகளையும் கொண்டுள்ளது.




நோர்வே அகலம் குறைந்த நீளமான வடிவத்தையுடைய நாடாகும். இது ஆர்டிக் கடல் பகுதிகளான சுவால் பாத் மற்றும் சான்மடேரன் என்பவற்றையும் உள்ளடக்குகிறது. உலகிலே மிக நீண்ட கடற்கரையையும் கொண்ட நாடாக விளங்கும் நோர்வே நாட்டின் மொத்தப் பரப்பில் ¼ பங்கு காடுகளாகும். ஏனைய ஐரோப்பிய நாடுகளை விட நீர்வளம் நிறைந்த நாடாகும். இதனை விட இயற்கை வாயு,உருக்கு, செம்பு, நாகம், நிலக்கரி மற்றும் வடகடலிலிருந்து பெறப்படும் பெற்றோலியம் என்பன இந்த நாட்டின் வளங்களாகும்.

சவூதி அரேபியா மற்றும் ரஷ்யாவுக்கு அடுத்த படியாக அதிக பாறை எண்ணெய் (பெற்றோலியம்) உற்பத்தி செய்யும் நாடாகும். நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு எனப் பெயர் பெற்றது இந்தநாட்டின் இன்னுமொரு சிறப்பாகும்.

சா. ஜிந்துஜா
கோண்டாவில்.

# யானை

யானை யானை
அழகர் யானை

அழகரும் சொக்கரும்
ஏறும் யானை

கட்டிக்கரும்பை
முறிக்கும் யானை



காவேரித் தண்ணீரை
கலக்கும் யானை

குட்டி யானைக்குக்
கொம்பு முளைச்சுதாம்

பட்டணமெல்லாம்
பறந்தோடிப் போச்சுதாம்!


அபி,
மானிப்பாய்.

# உலகம்



இஸ்லாமிய நாடு என்று சிறப்பிக்கப்படும்நாடு எது?
இந்தோனேசியா
உலகில் மிக உயரமான அணை எது?
போல்டர் அணை
உலகில் மிகப்பெரிய ஜனநாயக நாடு எது?
இந்தியா
உலகில் மிகப்பெரிய கம்யூனிஸ்ட் நாடு எது
சீனா
உலகிலேயே மிகப்பெரிய நன்னீர் ஏரி எது?
சுப்பீரியர் ஏரி
உலகில் அதிகளவில் அச்சிடப்படும் நூல் எது?
பைபிள்
உலகில் எரிமலை இல்லாத கண்டம் எது?
ஆஸ்திரேலியா

அ.கிரிசாந், தரம் 6ஏ
யா/யூனியன் கல்லூரி.



அச்சுவேலி வடக்கு கதிரொளி முன்பள்ளியில் நடை... நிகழ்வின் போது சிறார்கள் பாண்ட் வாத்தியம் சகிதம் விருந்தினர்களை வரவேற்றனர். தொடர்ந்து இடைவேளையின் போது சிறார்களின் இசையும் அசைவும் நிகழ்வு நடைபெற்றது.
(313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்குடியமர்வு இன்னும் நிறைவுறாத நிலையில் எல்லைகள் போடப்படுவதால் மக்கள் பாதிப்பு

## அரசைச் சாடுகிறார் துரைரெட்ணசிங்கம்



மூதூர் ஒக்.29

மக்கள் முழுமையாக மீளக் குடியேறாத நிலையில் திருகோணமலை மாவட்டத்தில் லிங்கபுரம், அரியம்மன் கேணிப் பகுதிகளில் வனபரிபாலன சபையினரால் எல்லை போடப்படுகின்றது. இதனால் மக்கள் நெருக்கடி நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

திருகோணமலை மாவட்டத்தில் லிங்கபுரம் மற்றும் அரியம்மன் கேணி ஆகிய பகுதிகளில் வனபரிபாலன சபையினர் எல்லைகளைப் போட்டுச் செல்கின்றனர். அவர்கள் குடியிருப்புகள் மற்றும் வயல்காணிகள் உள்ள இடங்களுக்கு மேலாகவே எல்லைகளைப் போட்டுள்ளனர்.

அந்தப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்துள்ள மக்கள் முழுமையாக மீளக் குடியமராத நிலையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் இந்த மக்கள் தமது காணிகளில் மீளக் குடியமரமுடியாத நிலையேற்பட்டுள்ளது. அத்துடன் தமது வயல் காணிகளை இழக்கவும் நேரிட்டுள்ளது. யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்கள் தமது காணிக்குரிய உறுதி அல்லது அனுமதிப் பத்திரத்தை தொலைத்துள்ள நிலையில் அவர்கள் பல்வேறு கஷ்டங்களுக்குள்ளாகியுள்ளனர்.

முன்னர் திருகோணமலை-கண்டி வீதியின் 4ஆம் கட்டை முதல் தம்பலகாமம் வரையான பகுதிகள் வனபரிபாலன திணைக்களத்தால் சுவீகரிக்கப்பட்டு மரநடுகை செய்யப்பட்ட பின் திட்டமிட்ட குடியேற்றங்கள் இடம்பெற்றன. அதுபோன்று இங்கும் இடம்பெறலாம் என்று அந்தப் பகுதி மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

எனவே, மக்களைப் பாதிப்புக்குள்ளாக்கும், அச்சத்தை ஏற்படுத்தும் நடவடிக்கையை நிறுத்துமாறு கோருகிறேன்.

இது இவ்வாறிருக்க, வடக்கு, கிழக்கில் மக்கள் முழுமையாக குடியமராத நிலையில் காணிப் பதிவை மேற்கொள்வது ஏற்க முடியாது.

முதலில் மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்வதற்கு இடமளித்து அதற்கான நிலையை ஏற்படுத்த வேண்டும். நாட்டின் ஏனைய பகுதிகளில் காணிப் பதிவு மேற்கொள்ளப்படுகின்றமை போல் வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்படுகின்றது என்ற கூற்றை ஏற்கமுடியாது.

வடக்கு, கிழக்கின் நிலைமை வேறு. இதனை அரசு உணர்ந்து கொள்ள வேண்டும்- என்றார். (ச)

## புதிய நியமனங்களால் 122 பேர் பதவியிழப்பு

சப்ரகமுவ, ஒக்.29

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் பல வருடங்களாகப் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த அதே பிரதேசத்தைச் சேர்ந்த பலர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

பல்கலைக்கழகத்தில் பாதுகாப்புப் பணிகளுக்கு ரக்னா லங்கா நிறுவனத்தால் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் மட்டுமே நியமிக்கப்படுவர் என்று உயர்கல்வியமைச்சு தீர்மானித்ததையடுத்தே இவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

பல வருட காலமாக 142 பேர் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர். ரக்னா லங்கா நிறுவனம் அவர்களில் இருபது பேரை மட்டுமே தேர்ந்தெடுத்துள்ளதால், எஞ்சிய 122 பேர் வேலை இழந்துள்ளனர்.

லக்னா லங்கா நிறுவனம் பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயற்படுகிறது. ஓய்வுபெற்ற இராணுவச் சிப்பாய்களுக்கு மட்டுமே நியமனம் வழங்கப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## திருமலையில் அபராதம் செலுத்திய 324 வர்த்தகர்கள்!

திருகோணமலை,ஒக்.29

திருகோணமலை மாவட்டத்தில் நுகர்வோர் விவகார அதிகார சபை கடந்த மூன்று மாதங்களில் வர்த்தக நிறுவனங்களை முற்றுகையிட்டு 324 வழக்குகளைத் தாக்கல்செய்துள்ளனர். இதன் மூலமாக நீதிமன்றத்தால் 529,000 ரூபாய் தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளதாக அதிகார சபையினர் தெரிவித்துள்ளனர்.

அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்களான திருமதி கோகிலா சந்தரசேகரம், செல்வி சத்தியபாமா சிவனேசன், ஏ. எல்.ஜே.சாபத் ஆகியோரால் இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. திருகோணமலை பட்டணமும் சூழலும் பகுதியில் 174வழக்குகள்தாக்கல்செய்யப்பட்டுள்ளன. (ச)



மத்திய மாகாண விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கடந்த புதன்கிழமை கம்பளை, தொழுவை, கணேகொடையில் ஏர் பூட்டு விழா நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதமர் டி.எம்.ஜயரட்ன கலந்துகொண்டு வயல் உழுதலை ஆரம்பித்து வைத்தார்.

## சனத்தொகை கணக்கெடுப்புக்கு கண்டிக்கு 6 ,000 பேர் நியமனம்

கண்டி, ஒக்.29

முப்பது வருடங்களுக்குப் பிறகு நடைபெறவுள்ள சனத்தொகை மற்றும் வீடுகள் கணக்கெடுப்புக்கு கண்டி மாவட்டத்தில் ஆறாயிரம் உத்தியோகத்தர்கள் நியமிக்கப் படவுள்ளனர் என்று கண்டி மாவட்ட அரச அதிபரும், சனத்தொகை கணக்கெடுப்பு ஆணையாளருமான காமினி செனிவிரத்ன தெரிவித்துள்ளார்.

கணக்கெடுப்பில் பங்குபற்றும் அதிகாரிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான செயலமர்விலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதி நாடெங்கும் இந்தக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

மூன்று கட்டங்களாக நடைபெறவுள்ள இந்தக் கணக்கெடுப்பில் வரைபுகள் தயாரித்தல், கட்டடங்களின் பட்டியலைத் தயாரித்தல் ஆகியவை தற்சமயம் முடிவடைந்துள்ளன. தகவல்கள் சேகரிப்பு வட்டம், மீளாய்வு வட்டம் என்று கணக்கெடுப்புகள் இரு வட்டங்களில் நடைபெறும்.

முப்பது வருடங்களுக்குப் பின்னர் நடைபெறவுள்ள இந்தக் கணக்கெடுப்பு மிகவும் முக்கியமானது. முழு இலங்கை மக்களும் இதற்கு தங்களது பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும். நாட்டின் அபிவிருத்திப் பணிகளுக்கு இந்தக் கணிப்பு மிகவும் அவசியமானது- என்றார்.(ச)

## மலையகத்தில் இம்முறை களை கட்டாத தீபாவளி

### சீரற்ற கால நிலையே காரணம்

நுவரெலியா,ஒக்.29

மலையகத்தில் தீபாவளிப் பண்டிகை இந்த முறை களை கட்டவில்லை. தோட்டப் புறங்களில் வாழும் மக்களுள் சிலர் வெகு விமரிசையாகக் கொண்டாடினாலும் ஏனையோர் ஆலய வழிபாடுகளுடன் பண்டிகையை நிறைவுக்குக் கொண்டு வந்தனர். தீபாவளிப் பண்டிகை வந்து விட்டால் போதும், மலையகமே குதூ கலிக்க ஆரம்பித்துவிடும். பட்டாசு சத்தம், விளையாட்டு நிகழ்வுகள், பாரம்பரிய கலாசார நிகழ்வுகள் என மலையகமே இன்ப வெள்ளத்தில் மூழ்கும்.

ஆனால் இந்த வருடம் மலையகத்தில் தற்பொழுது நிலவும் சீரற்ற காலநிலையே தீபாவளி பண்டிகை களைகட்டாததற்கான காரணம் என்று கூறப்படுகின்றது. தீபாவளித் தினத்தன்று மலையகத்தில் இசை நிகழ்வுகள், கிரிக்கெட் சுற்றுப் போட்டிகள் உட்பட முக்கிய விளையாட்டு நிகழ்வுகள் நடைபெறுவது வழமை. ஆனால், அவை அனைத்தையும் மழை இம்முறை கெடுத்துவிட்டது என சிலர் கவலை வெளியிட்டுள்ளனர்.

மழை காரணமாக தீபாவளிக்கு வெளிவந்த புதிய திரைப் படங்களைக் கூடபார்ப்பதற்கு நகருக்கு செல்ல முடியவில்லை என்று மலையக இளைஞர்கள் தெரிவிக் கின்றனர். என்னதான் காரணம் கூறப்பட்டாலும், பாரம்பரியமாக கொண்டாடப்படும் பண்டிகைகளை கட்டாதது கவலை தரும் விடயமாகும். (ச)

## இலவசக் கல்வி முறையிலுள்ள குறைபாடுகளால் மாணவர்களுக்கு முழுப்பயன் கிடைப்பதில்லை

### அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிப்பு

கண்டி,ஒக்.29

இலவசக்கல்வி முறையில் தற்போதுள்ள குறைபாடுகள் காரணமாக மாணவர்கள் இன்று முழுமையானபயன் பெற முடியாதுள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கண்டி புஷ்பதான வித்தியாலயம், பூஜாபிட்டிய மத்திய கல்லூரி, கட்டுகாஸ்தோட்டை ஸ்ரீராகுலா கல்லூரி ஆகிய பாடசாலைகளில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற பரிசளிப்பு விழாக்களில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

சீ.டபிள்யூ.டபிள்யூ.கன்னங்கர கொண்டுவந்த இலவசக் கல்வித் திட்டத்தில் தொழிற்கல்வி முறையிருந்தது. அன்றைய மத்திய மகா வித்தியாலயங்களில் [illegible] பின்னர் வந்த கல்வித் திட்டங்களில் அவை மாற்றப்பட்டதன் விளைவாக இன்று பரீட்சையைக் கல்வியில் அதிக சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற 300,000 மாணவர்களில் பல்கலைகழகம் செல்வது 22,000 பேர் மாத்திரமே. ஏனையவர்களுடைய நிலைமை குறித்து நாம் சிந்திப்பதில்லை.

கொழும்பிலுள்ள வசதி படைத்தவர்களுக்கு இதுவொரு பிரச்சினையே அல்ல. அவர்கள் தமது பிள்ளைகளைச் சர்வதேசப் பாடசாலைகளுக்கு அனுப்பி உயர்தரத்தில் ஓரளவில் சித்தியடைச் செய்து விட்டு வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்தியர்களாக, பொறியியலாளர்களாக உருவாக்குகின்றனர். இதற்கு அதிகளவு பணம் செலவழிப்பதில்லை. ஒரு பிள்ளைக்கு 50 முதல் 100 லட்சம் ரூபாய்களே செலவாகின்றன.

ஆனால் இங்குள்ள வறிய பிள்ளைகளின் நிலைமை குறித்தே நாங்கள் சிந்திக்கின்றோம். அதற்காகவே 1000 பாடசாலைகளை அனைத்துவசதிகளுமுடைய பாடசாலைகளாக உருவாக்கும் திட்டத்தைப் பொறுப்புள்ள அரசு என்ற முறையில் நாம் கொண்டுவந்துள்ளோம்.



2012ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை 1000 இடைநிலைப் பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும். 1000 பாடசாலைகளுக்கு 2012ஆம் ஆண்டு இருமாடிக் கட்டடம் அமைத்துக் கொடுக்கப்படும்.

அதில் ஒரு பகுதியில் 50 கணினிகளைக்கொண்ட ஆய்வு கூடம் இருக்கும். அனைத்து வசதிகளும் அங்கு காணப்படும்- என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்குலக நாடகத்தின் ஒரு சுருக்கமான வரலாறு



கலாபூஷணம் அராலியூர்
ந.சுந்தரம்பிள்ளை

(சென்றவாரத் தொடர்ச்சி)

நோர்வே சுவீடனுக்கு அயலில் உள்ள ஒரு சிறிய நாடு. இத்தகைய சிறிய நாட்டு நாடகாசிரியருக்கு நோபல் பரிசு வழங்குவதா என்ற பொறாமையால்தான் அவர்கள் இப்சனுக்குப் பரிசு வழங்கவில்லை. அவர்கள் பெரிய நாடுகளின் எழுத்தாளர்களுக்குப் பரிசில்கள் வழங்கி, அந்த நாடுகளில் செல்வாக்குப் பெறவே விரும்பினர். சுவீடிஷ் அக்கடமியினர் புறக்கணித்ததால் இப்சனது புகழ் மங்கிவிட்டதா? அவரது பெயர் சுடச்சுடரும் பொன்போல் உலகம் முழுவதிலும் பிரகாசிக்கின்றது!

**தமிழ் மொழியில்.....**

நாடகத்தை தமிழ் மொழியில் நவீன நாடகம், இயல்பு நாடகம், மண்வாசனை நாடகம் என்று பல பெயர்களால் நாம் அழைக்கின்றோம். இந்தியாவில் ஏதேதோ நாடக வகைகளையெல்லாம் போற்றி வளர்க்கிறார்கள். ஆனால் நவீன நாடகம் நன்றாக வளர்ந்ததாகத் தெரியவில்லை.

இலங்கையில் பேராசிரியர் கணபதிப்பிள்ளையே முதன் முதலாகத் தமிழ் மொழியில் நவீன நாடகங்கள் எழுதினார். அவர் எழுதிய நாடகங்கள் எட்டு. நான் எழுதிய நவீன நாடகங்கள் 512. இலங்கை வானொலியின் தமிழ்ச் சேவையும் முஸ்லிம் சேவையும் ஒவ்வொரு வாரமும் புதிய நவீன நாடகங்களைத் தயாரித்து ஒலிபரப்பி வருகின்றன. இருந்தாலும் இலங்கையிலும் நவீன நாடகம் நன்கு வளரவில்லை. தமிழ் மக்களுக்கு அந்த நாடகத்தின் சிறப்புத் தெரியவில்லை.

இலங்கைத் தமிழ்பேசும் பிள்ளைகளுக்கு நவீன நாடகம் கட்டாயம் கற்பிக்கப்பட வேண்டும் என்று தீவிரமாகப் பிரசாரம் செய்து வருகிறேன். பிரசுரத்தின் ஓர் அங்கமாகப் பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் எழுதியும் நூல்கள் வெளியிட்டும் உள்ளேன்.

**பெர்னாட் ஷவின் நாடகங்கள் (1856 1950)**

பெர்னாட்ஷா முதலில் நாடகங்களைப் படித்தார். அந்தக் காலத்தில் உலகின் தலைசிறந்த நாடகங்களையெல்லாம் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வைத்திருந்தார்கள். அதனால் அவருக்கு ஷேக்ஸ்பியரையும் விட அதிக நாடகங்கள் படிப்பதற்கு வாய்ப்புக் கிடைத்தது.

பின்பு பத்திரிகைகளுக்கு நாடக விமர்சனங்கள் எழுதத் தொடங்கினர்.

சினிமாப் படம் வருவதற்கு முந்திய காலமாகையால் இங்கிலாந்து முழுவதிலும் பல நாடகங்கள் அரங்கேறிக் கொண்டிருந்தன. தனக்குப் பிடித்த இப்சனது கொள்கைகளை வைத்துக்கொண்டு, அந்த நாடகங்களையெல்லாம் காரசாரமாக விமர்சித்தார். அவற்றின் மூலம் பல நாடகாசிரியர்கள் நாடகத் தயாரிப்பாளரது வெறுப்பையும் சம்பாதித்துக் கொண்டார். அவர்கள் முதலில் அவரைத் திட்டினாலும் காலக் கிரமத்தில் பலர் ஷாவின் விமர்சனங்களையும் சரி என ஏற்றுக் கொண்டனர்.

படிப்பினாலும் நாடக விமர்சனங்கள் எழுதியதனாலும் ஷாவின் நாடகத்துறை அறிவு நன்றாக வளர்ந்திருந்தது. அவர் இப்சனைப் பின்பற்றி சமூக நாடகங்களையே எழுதினார். தனக்குப் பிடித்த கருத்துக்களை நாடகப் பாத்திரங்களை உரையாட வைத்தார். குடும்ப வாழ்க்கை, பொருளாதார ஏற்றத்தாழ்வு, தொழிலாளரது பிரச்சினைகள், வர்க்க பேதங்கள், ஒழுக்கம், அரசியல் என்று பல விடயங்கள் அவரது நாடகங்களில் வாதிக்கப்பட்டன. அவர் தொடாத சமூகப் பிரச்சினைகளே இல்லை எனலாம். அதன்மூலம் கருத்து நாடகம் (Plays of I Deas) என்றொரு புதிய நாடக வகையையே ஆங்கில மொழியில் தோற்றுவித்தார். அவரது நாடகங்கள் வெறும் கலந்துரையாடல்களே. மேடையில் நடக்கும் விவாதங்களே!'' என்று பலர் அவற்றைக் கண்டித்தனர். அந்தக் கண்டனங்களில் சிறிதளவு உண்மையும் உண்டு. அவரது நாடகங்களில் செயல்களும் நடமாட்டங்களும் குறைவு. தொடக்கத்தில் தோற்றுவாய் வரும். சிக்கலையும் புகுத்துவார். சிக்கல் வளர்ந்து இறுதி உச்சக்கட்டத்தை அடையும். அதன் பிறகு சிக்கல் அவிழ்ப்பு, வீழ்ச்சி, சமநிலை ஆகிய கட்டங்கள் வர வாய்ப்பில்லை. மேடையில் பாத்திரங்கள் தொடர்ந்து கருத்துக்களை விவாதித்துக் கொண்டிருக்கும். இங்கிலாந்தில் கல்விகற்ற ''ஓடியன்'' கதிரைகளில் அசையாமல் இருந்து அந்த விவாதங்களை ரசிக்கும்!

கண்டனங்களை அவர் பொருட்படுத்தவில்லை. தொடர்ந்து அந்தவகை நாடகங்களையே எழுதி வெற்றியும் பெற்றார்.

(தொடரும்)

# “நடக்கும் கதைதான் நடக்குதப்பா”

*சில சமயங்களில் 785, 789 இலக்கங்களைக் கொண்ட பேருந்தில் பயணம் செய்ய வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படுவதுண்டு. 789 இலக்க பேருந்தில் போகும் பயணத்தில் அராலி வெளி தாண்டிப் போகும் நேரம் மனதுக்கு சந்தோஷமாய் இருக்கும். தூரத்தே தெரியும் பனைமரங்களும் மக்கள் செறிந்து வாழும் வீடுகளும், வானில் கூட்டமாகப் பறந்து செல்லும் பெயர் தெரியாத பறவைகளும், பேருந்தைக் கண்டு பதைபதைப்புடன் அது தவறிப் போய் விடுமோ என்ற அச்சத்துடன் தனது கனத்த சரீரத்தை தூக்கியபடி ஓடிவரும் அந்தப் பெண்மணியும் கண்களுக்குத் தெரியும் தூரத்தில் மேய்ந்து கொண்டிருக்கும் மாடுகளும் எல்லோருக்கும் மகிழ்ச்சியைத் தருவதாக உள்ளன.*

*இன்னும் சற்று உற்றுப் பார்த்தால், தரையில் முளைத்திருக்கும் புற்களை ''சாவகாசமாய்'' மேய்ந்து கொண்டிருக்கும் மாடுகளுக்குப் பின்னால் கொக்கு இனத்தைச் சேர்ந்த பறவையொன்று அதுவும் தூயவெண்ணிறத்தில் (தனது வெண்ணிறத்துக்கு என்ன ''சொட்டு நீலம்'' உபயோகிக்கின்றதோ? சற்று மாட்டுக்கு பின்னால் அதுவும் இரை தேடிக் கொண்டிருக்கும். அதிகம் இவர்கள் சோடியாக தமக்குரிய உணவைத் தேடிக் கொண்டிருப்பதை அநேக தடவைகள் பார்த்திருக்கிறேன். நீங்களும் இது போன்ற பயணத்தில் பார்த்திருப்பீர்கள்.*

*மாடானது வாலை ஆட்டியபடி மேய்ந்து கொண்டிருக்க இந்த வெண்ணிறப் பறவை ''அபிநய சரஸ்வதி சரோஜா தேவி'' போல் தனது நீண்ட குச்சிக் கால்களைத் தூக்கித் தூக்கி வைத்து நடக்கும் அழகே அழகு. சரி விடயத்துக்கு வருவோம். எனக்கு இந்த நிகழ்வில் ஏற்படும் சந்தேகம் என்னவென்றால் இவற்றுக்கிடையே என்ன உறவு தொடர்ச்சியாக இருக்கின்றது? எந்த நட்புறவில் இரண்டும் பகையுணர்ச்சி இல்லாமல் வாழ்ந்து கொண்டு இருக்கின்றன. இந்த உணவு தேடும் ''வேட்டையில்'' இரண்டும் என்ன நன்மை கிடைக்கின்றது? மாடு தாவரப்பட்சணி. பறவை இதற்கு எதிர்மாறு. இரண்டுக்கும் வெவ்வேறு பழக்கங்கள், இருந்தும் எப்படி உறவு தொடர்ந்து பேணப்படுகின்றது. இந்த இரண்டு இனங்களும் எப்படி ஒற்றுமையாய் பூமியில் வாழ்ந்து கொண்டு இருக்கின்றன. எனக்கும் உங்களைப் போல் பல கேள்விகள் எழுகின்றன. என்ன செய்வது கேவலம் அவைகளின் ''பாஷை'' தெரிந்தால் உறவாடிக் கதைக்கலாம். உங்கள் இருவருக்கும் அப்படியென்ன ஒருத்தர் மேல் ஒருத்தர் காதல் (எங்களைப் போன்ற மனிதர்களுக்கு இரண்டு பேர் கதைத்தால் காதல் என்று தானே முடிவு செய்கிறோம்)*

*அங்கே அவைகள் இரண்டும் தமது வேலையில் மூழ்கிக் கிடந்தன. சிலவேளைகளில் மாடும் அந்தப் பறவை நண்பனும் எங்களுக்குத் தெரியாமல் அவர்கள் தங்களுக்குத் தெரிந்த மொழியில் பேசிக் கொள்ளலாம் யாருக்கு தெரியும்? ''நண்பா! யார் இந்த மனிதப்பிறவி? ''எனக்கு தெரியாது நீண்ட நேரமாக எங்களைப் பார்த்தபடி இருக்கிறான். ''நாங்கள் இருவரும் இப்படி ஒற்றுமையாய் இருப்பதை பார்த்து யோசிக்கிறானோ.*

*''சரிதான்-அதுதான் அவன் எங்களை அவதானிக்கின்றான். மனிதனுக்கு எப்போதும் சந்தேகம் தான். யாரையும் நம்ப மாட்டார்கள், பாவப்பிறவிகள் பூமியில் வாழுதல் பற்றி தெரியாதவர்கள்.*

*''நண்பா! நீ புல் மேயும் போது புல் உனக்கு உணவு ஆகின்றது. அதிலிருந்து மறைந்து இருந்த பூச்சியினங்கள் வெளியே வந்து எனக்கு உணவாகின்றன. இது தான் எமது [illegible]*

*''சரி [illegible] நாங்கள் இருவரும் இந்த மண்ணில் பிறந்த உயிர்களாகவே நினைத்துக் கொண்டு இருக்கிறோம்.*

தொல்புரம்
சி.கதிர்காமநாதன்

*''இவர்கள் எம்மை, விலங்கினம், பறவை இனம் என்று பிரிந்து வைத்திருக்கிறார்கள்.*

*''எமக்கு இதெல்லாம் தெரியாது என்ற ''நினைப்பு இவர்களுக்கு. கதைத்தபடி இருவரும் பெரிதாக சிரித்தார்கள். நண்பா ! பார்த்தியா இவர்களது இனப்பிரச்சினை இன்னும் தீர்ந்தபாடில்லை. ''எப்போது தீரும்?... பேச்சுக்கு போகிறார்கள். நம்பிக்கையுடன் போவதாகக் கூறிக் கொள்கிறார்கள், பிறகு சரிவராது என திரும்பி வருகிறார்கள். மறுபடியும் பேச்சுக்கு நாள் குறிக்கின்றார்கள். ''இருப்பதோ இரண்டு இனம்தான்... ''இந்த மக்கள் என்ன கேக்கிறார்கள்?*

*''நாங்களும் உங்களைப் போல கௌரவமாய் சொந்த இடங்களில் வாழ வேண்டுமென்று கேக்கிறார்கள். சிரிப்பாய் இருக்கு. எங்களை விட அறிவில் உயர்ந்தவர்கள் என்று சொல்லிக் கொள்கிறார்கள். ஏன் இந்த இழுபறி''*

*''அட... இந்தப் பிரச்சினைக்கு உதவி செய்ய அயல் நாட்டிலிருந்து ''பெரியாக்கள் வாறவையெல்லே''*

*''நான் மறந்து போனன். போன கிழமை மட்டில் இந்தியாவின் புதிய வெளிவிவகாரச் செயலாளர் இங்கு வந்தெல்லே போயிருக்கிறார். அட இனியென்ன நண்பா பிரச்சினை தீர்ந்த மாதிரித்தான் ''நாங்கள் சும்மா இல்லாத கற்பனை எல்லாம் பண்ணிக் கொண்டு இருக்கிறம். அவர் எதுக்கு வந்தவரோ?*

*''அவர் இந்தியா கட்டிக் கொடுக்கிற வீட்டுத் திட்டத்தைப் பார்க்க வந்தவர்... கிளிநொச்சி போய் வீடுகளை பார்த்து அவருக்கு திருப்தியில்லையாம்? காரணம் கட்டின வீடுகளுக்கு சமையற்கூடத்துக்கு புகைபோக்கி கிடையாதாம். சனங்கள் இந்த நிலையில் நாங்கள் சமைப்பது எப்படி என்று கேட்டார்களாம். ''நண்பா நான் நினைக்கிறன் உந்த புகை போக்கி இல்லாமல் வீடு கட்டின ஆக்கள் முந்தி எங்களுக்கு ''தீர்வுத் திட்டத்துக்கு உதவி செய்த ஆக்களாய் இருப்பினமோ?*

# அவனருளின்...
# தாழ்தல்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுக்குரிய நிகழ்வுகள்

வி.சிவசுப்பிரமணியம்

**...வுண் வீதி**

இந்த வீதி வண்ணார் பண்ணையின் தெற்கே நாவலர் வீதியிலிருந்து வடக்கே கொக்குவில் வரை நீண்டுள்ளது. வண்ணார்பண்ணையில் புகழ்பெற்ற கல்விசார் குடும்பத்தைச் சேர்ந்த அம்பிகைபாகர் வள்ளியம்மை தம்பதியரின் பத்துப் பிள்ளைகளில் ஒருவரே சின்னத்தம்பியாவார். Batticota Seminary யில் ஆங்கிலக் கல்வியின் போது Brown Sinnathamby யானார். இவரும் இவரது மாணவரான Meckenstry Kanagaratnam மும் ஆறுமுகநாவலர் ஆசிரியராக இருந்த யாழ்.மத்திய கல்லூரியில், முன்னவர் தலைமையாசிரியராகவும் பின்னர் ஆசிரியராகவும் பணியாற்றினர். இருவரும் நாவலரின் சைவக் கல்விக் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு முறையே யாழ்.இந்துக் கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அமைய வழி வகுத்தனர். பிறவுண் சின்னத்தம்பி யாழ்ப்பாணத்து Crown Procror ஆக நியமனம் பெற்றார். இவரது மகன் அப்புக்காத்து நாகலிங்கம் என்ற பிரபல வழக்கறிஞர், பசுபதிச் செட்டியாருடன் இணைந்து சைவ பரிபாலன சபையின் ஆதரவில் சிறிய பள்ளிக்கூடத்தைப் பொறுப்பேற்றுத் தற்போதைய யாழ்.இந்துக் கல்லூரியை நிறுவிய பெருமைக்குரியவராவர்.நாகலிங்கம் சேர். பொன். இராமநாதனுடன் இணைந்து யாழ்.புகையிரத சேவையை 1905 இல் ஆரம்பிப்பதற்கு பெரும் பாடுபட்டார். பிரபல சமய சமூகக் கல்விச் சேவையாளரான இவர் தனது 42 ஆவது வயதில் சிவபதமடைந்தார். பசுபதிச் செட்டியார் சிதைவுற்றிருந்த திருக்கேதீஸ்வர ஆலயத்தை புனர் நிர்மாணிப்பதற்கு ஆரம்ப காலத்தில் அரும்பாடுபட்ட பெருந்தகையாவார். பிறவுண் சின்னத்தம்பியவர்கள் நினைவாக பிறவுண் வீதி என்றும் நினைவில் நிற்கும்.

**கலைப்புலவர் வீதி**

இந்த வீதி வண்ணை வெங்கடேசப் பெருமாள் கோயிலுக்கு முன்னால் சன்மார்க்க வித்தியாலயத்துக்கு அண்மித்த கலைப்புலவர் கே.நவரத்தினம் நினைவாகவுள்ளது. அவர் பல வருடங்களாக வர்த்தகத் துறைப் பொறுப்பாசிரியராக யாழ்.மத்திய கல்லூரியில் விளங்கி அங்கிருந்தே ஓய்வு பெற்றார். இவரது பிரப்பங்குளம் வீதி இல்லம் ஒரு கலை மையமாக பல கல்விமான்களையும் கலை ஆர்வலர்களையும் என்றும் காணக்கூடியதாக இருக்கும். 1930 இல் அங்கு ஆரம்பிக்கப்பட்ட ''கலா நிலையத்துக்கு'' ஆரம்ப செயலாளராக விளங்கி ''ஞாயிறு'' என்ற பத்திரிகையை வெளியிட்டார். இவரது குடும்பமே தமிழ்த் தொண்டு கலைத் தொண்டுக்கு முற்று முழுதாக தம்மை அர்ப்பணித்த குடும்பமாகும். இவரது துணைவியார் மகேஸ்வரியின் தந்தையார் மாசிலாமணி, தமிழ் நாட்டில் பல காலம் வாழ்ந்து, கலையின் மையநகரமான மயிலாப்பூர் தொகுதிக்குத் தெரிவாகி உள்ளூராட்சி மன்றில் பெரும் பணியாற்றினார். இவரது மாமியார் திருமதி மங்களம்மா மாசிலாமணி B.A சின்னத்தம்பியின் பதினாறு பிள்ளைகளில் ஒருவர் பெண்கள் முன்னேற்றப்பணியில் ஈடுபட்டு முப்பது, நாற்பதுகளில் ''தமிழ் மகள்'' என்ற மலரைத் தொடராக வெளியிட்டார்கள் யாழ்.கலை வளர்ச்சிக்கு கலா நிலையத்தினூடாக கலைப்புலவர் நவரத்தினத்தின் பங்கு அளப்பரியது அவரது நினைவு கலை உலகில் என்றும் நினைவில் இருக்கும்.

**நாவலர் வீதி**


இது யாழ்.ஐந்து சந்தியிலிருந்து அரியாலை வரை நீண்டு செல்லும் வீதியாகும். நல்லை நகர் ஆறுமுகநாவலர் நினைவாக இந்த வீதி பெயரிடப்பட்டுள்ளது. நாவர் சைவ மறுமலர்ச்சியின் உந்து சக்தியாக; வசன நடையின் தந்தையாக ஆலய சீர்திருத்தங்களுக்கு முன்னோடியாக; சைவ மற்றும் தூய தமிழ் நடையின் நூலாசிரியராக யாழ்ப்பாணத்திலும் சிதம்பரத்திலும் பல சைவப்பள்ளிக் கூடங்களை நிறுவியவராகவும் தமிழுக்கும் சைவத்துக்கும் பெருமை சேர்த்த பெரியாராய் விளங்குகிறார்.1834 இல் நிறுவப்பெற்ற யாழ். மத்திய கல்லூரியின் ஆசிரியராக இருந்தவேளை அதிபர் மதபோதகர் பீற்றர் போலின் வேண்டுகோளுக்கமைய விவிலிய (Holy Bible) நூலை அழகு தமிழில் மொழிமாற்றம் செய்து பெருமதிப்பைப் பெற்ற பெருந்தகையாவார். நாவலர் வீதி, நாவலர் மகா வித்தியாலயம், நாவலர் மணிமண்டபம், நாவலர் உருவச்சிலை முதலியன இவரை என்றும் ஞாபகப்படுத்தும் சிறந்த வரலாற்று சின்னங்களாகும். இவ்வீதியில் அமைந்துள்ள முன்னைய அரச பாடசாலை அந்நாள் தேசாதிபதியின் நினைவாக ஸ்ரான்லி கல்லூரியாகி தற்போது அதன் நிறுவுனர் நினைவாக ''கனகரத்தினம் மகாவித்தியாலயமாக'' விளங்குகின்றது.

(வளரும்)




# ...ன்றி அவனடி ...ல் அரிது

- மணி



(சென்றவாரத் தொடர்ச்சி)

இத்தகைய சிறப்பு வாய்ந்த அருணா
லஸ்வரரைத் தரிசித்து, பின் 14 (பதின்
ன்கு) கிலோ மீற்றர் தூரம் கொண்ட
ருவெண்ணாமலையை நான்கு மணித்தி
லத்தில் கிரிவலம் செய்யக்கூடிய பேறும்
மக்குக் கிடைத்தது. அதிகாலை 4.45
ணியளவில் ''ஓம் நமச்சிவாய'' என்ற மந்திர
லியுடன் எமது கிரிவலம் ஆரம்பமாகியது.
ரிவலப் பாதையெங்கும் கூடுதலாகச்
த்தர்களையும் சாதுக்களையும் காணக்கூடிய
க இருந்தது. எங்கும் ''ஓம் நமசிவாய''
ன்ற ஒலியே எதிரொலித்தமை ஆன்ம
லத்தைத் தந்தது. எல்லாம் அவன் செயலே!
ந்தக் கிரிவலப் பாதையில் நாம் அஷ்ட
ங்கங்களான இந்திரலிங்கம், அக்கினிலிங்
ம்,யமலிங்கம், நிருதிலிங்கம், வருணலிங்
ம், வாயுலிங்கம், குபேரலிங்கம், ஈசான்ய
ங்கம் ஆகியவற்றையும் இந்திர நந்தீஸ்
ரர், கற்பகவிநாயகர், காமாட்சியம்பாள்,
ளியம்பாள், தட்சணாமூர்த்தி, ஆறுமுகப்
பருமான்,ஜோதிவிநாயகர், மாரியம்பாள்,
ருதேர் அண்ணாமலை, வீர ஆஞ்சநேயர்,
கவேந்திரர், கண்ணப்பனார், பழனியாண்
அடி அ... ணாமலையான், லட்சுமி
ாராயணர், குபேரப்பெருமாள் , இடுக்கிப்
ள்ளையார், பஞ்சமுக தரிசனம், சீனிவாசகப்
பருமான், பச்சையப்பன் வடவீதிச் சுப்பிர
ணிய சுவாமி, துர்க்கையம்மன் பெரிய
ஆஞ்சநேயர், பவளக்குன்று மலைக்கோவில், இரட்டைப்பிள்ளையார் ஆகிய சுற்றுக் கோவில்களையும் தரிசித்து வணங்கி வழிபட்டுச்செல்லும் வாய்ப்புப் பெற்றோம். இவற்றுள் குபேரலிங்கத்துக்கு அருகேயுள்ள இடுக்குப் பிள்ளையார் கோயிலின் குறுகிய வாயில் வழியாக நுழைந்து வெளியே வந்ததால் உடலில் உள்ள நோய்கள், பில்லி சூனியம் ஆகியவை நீங்கும் என்றும், புத்திர பேறு இல்லாத தம்பதிகளுக்கு குழந்தைப் பேறு கிடைக்கும் என்றும் கூறப்படுகின்றது. அது மட்டுமல்லாமல் மாலைக்கண் நோய் உள்ளவர்கள் மாலை வேளையில் இந்தக்கோயிலினுள் நுழைந்து வந்தால் அந்த நோய் நீங்குவதாகவும் கூறுகின்றார்கள்.

இவற்றை எல்லாம் தரிசித்து அண்ணாமலையானின் அருட்கடாட்சத்துடன் அங்கிருந்து புறப்பட்டு வேலூர் ஊடாக ஏழு கிலோமீற்றர் துரத்திலுள்ள ஸ்ரீபுரம் என்ற இடத்தில் அரியூர்மலைக்கோடி நாராயணி சித்தர்பீடம் சார்பாக சக்தி அம்மாவினால் கட்டப்பெற்றுள்ள வேலூர் பொற்கோவிலைத் தரிசித்தோம். இந்தப் பொற்கோவில் 100 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளதுடன் 1500 கிலோ தங்கத்தினால் ரூபா 300 கோடி (இந்தியரூபா) செலவில் கட்டப்பட்டுள்ளது. பார்க்கின்ற அனைவரும் பிரமிக்கத்தக்கவகையில் கலை நுணுக்கங்களுடன் இந்தத் தங்கக்கோவில் பிரமாண்டமாகக் கட்டப்பட்டுள்ளது. செல்வங்களின் அதிதேவதையான மகாலட்சுமி, லட்சுமி நாராயணி என்ற பெயரில் ஒன்பது(9) அடி உயரச்சிலை வடிவில் மூலவராகக் காட்சி தந்து அருள் பாலிக்கின்றார். தாமரை இதழ்களைப் போன்ற வடிவத்தில் பீடம் அமைத்து நாராயணி சிலை அதன் மேல் வைக்கப்பட்டுள்ளது. இந்தக் கோயிலில் ராஜகோபுரம் 48 அடி உயரத்தில் 5 நிலைகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. இதில் கருவறை, மகாமண்டபம், வசந்தமண்டபம் என்பனவும் உள்ளன. இந்த மூன்று மண்டபங்களையும் கலைநயம்மிக்க சிற்பங்களுடன் கூடிய 50 இற்கு மேற்பட்ட தூண்கள் தாங்கி நிற்கின்றன. தங்கக் கோவிலைச் சுற்றி 9 அடி ஆழத்தில் அகழிவெட்டப்பட்டு, அதில் நீர் நிரப்பப்பட்டு இரவில் மின்னொளியில் தங்கக் கோவிலின் விம்பம் தகதகவென மின்னுவது ரம்மியமான அழகாகும். இந்தக் கோவிலைத் தரிசிக்க செல்லும் நாம் நட்சத்திர வடிவில் 13 வளைவுகளுடன் அமைந்துள்ள ஒன்றரைக் கிலோ மீற்றர் நீளமான நடைபாதையால் நடந்து சன்னிதானத்தைச் சென்றடையலாம். இந்தப் பாதையின் இரு மருங்கிலும் 200 இற்கு மேற்பட்ட சுவாமி சிலைகள் அழகாகக் காட்சி தருகின்றன. இவற்றைவிட அனைவரும் அறிந்து கொள்ள வேண்டிய அடிப்படைத் தர்மங்கள் பற்றிய பொன்மொழிகள் நூற்றுக்கணக்கான பலகைகளில் பொறிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தன. இவற்றைவிட பசுமையான நீரோடைகள், பூஞ்சோலைகள், ஆயிரக்கணக்கான தெய்வீக மரங்கள் அமைந்த இயற்கைச் சூழல் மனதுக்கு அமைதியைத் தருகின்றன.

லட்சுமி நாராயணியைத் தரிசித்தபின்னர் காஞ்சி காமாட்சி, மயிலாப்பூர் கபாலீஸ்வரர் ஆகிய ஆலயங்களைத் தரிசித்தபின்னர் எமது இமாலய யாத்திரையை மேற்கொண்டோம்.

''எர்ணாகுளத்திலிருந்து வந்த ''ரெக்தி சாகர் என்ற'' ரயில் மூலம் சென்னை சென்றல் ரயில் நிலையத்திலிருந்து புறப்பட்டு 42 மணித்தியாலங்கள் பிரயாணம் செய்து வட இந்தியா-நேபாளம் எல்லையிலுள்ள கொரக்பூர் ரயில் நிலையத்தைச் சென்றடைந்தோம்.

அங்கிருந்து எம்மால் முன்கூட்டியே ஒழுங்குசெய்யப்பட்டுத் தயாராக இருந்த மோட்டார் வாகனம் மூலம் நேபாளத்தின் தலை நகரமான காத்மண்டுவை நோக்கிப் பிரயாணம் மேற்கொண்டு போக்ரா நகரை அடைந்து அங்கு ஹோட்டல் ஹோர்க் காலிடி என்ற விடுதியில் இரவு தங்கினோம்.

எமது வழிகாட்டியான முகேஷ் என்பவரின் முன்னறிவிப்பின் பிரகாரம் மறுநாள் அதிகாலை 4.30 மணிக்கு நாசர்கோட் என்ற இடத்துக்குச் சூரியோதயம் பார்ப்பதற்காகக் கடும் பனிக் குளிரையும் பொருட்படுத்தாமல் சென்று மலைத்தொடர்களின் இடையே காலைக்கதிரவனைத் தரிசித்து வணங்கினோம்.


(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
29 ஒக்ரோபர் 2011 சனிக்கிழமை

# தமிழர் பிரச்சினை உள்நாட்டு விவகாரம் அல்ல; அவ்வாறு கணிப்பது உண்மையை மறைப்பதே

## இதனை 37 வருடங்களின் முன்னரே இடித்துரைத்தவர் தந்தை செல்வா



1949 இல் இலங்கை (நாடாளுமன்ற) தேர்தல் திருத்தச்சட்டம் 48 நிறைவேற்றப்பட்டது. அதன் பிரகாரம் தமிழர்களின் ஒரு சாராரின் நிலை மீண்டும் பரிதாபத்துக்கு உள்ளாகி வாக்களிக்கும் உரிமையை இழந்தனர். இலங்கை அரச சபையின் அமைச்சர்கள்சபை (முற்றாக சிங்களவர்கள்) பிரித்தானிய அரசுடன் சுதந்திரத்துக்கான பேரத்தில் ஈடுபட்டிருந்த சமயம் கொடுத்த சகல வாக்குறுதிகளும், இணக்கங்களும் காற்றில் பறக்கவிடப்பட்டு கிட்டத்தட்ட இலங்கையின் அரைவாசித் தமிழர்கள் வாக்குரிமையை இழக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை உருவானது.

மறுபுறம் அரசமைப்பு மறுசீரமைப்பு பற்றி அமைச்சர்கள்சபை Whitchall இற்கு சமர்ப்பித்த ஒப்பந்தப் பத்திரத்தில் தமிழ், சிங்கள பிரதிநிதித்துவம் பற்றிய திட்டமொன்றைத் தந்தனர். அதன்படி, சிங்களவர்களுக்கு 58 ஆசனங்களும், இலங்கைத் தமிழர்களுக்கு 15 ஆசனங்களும், இந்தியத் தமிழர்களுக்கு 14 ஆசனங்களும் பரிந்துரை செய்யப்பட்டது. முறைகேடான இந்த நிலையைப் பின்வரும் அட்டவணை விளக்குகிறது.

இனரீதியில் நாடாளுமன்ற ஆசனங்களின் ஒதுக்கீடு (சதவீதத்தில்)

| | 1947 | 1952 | 1956 | 1960 மார்ச் | 1960ஜூலை |
|---|---|---|---|---|---|
| சிங்களவர்கள் | 67 | 73 | 73 | 78 | 77 |
| இலங்கைத் தமிழர் | 13 | 12 | 12 | 11 | 11 |
| இந்தியத் தமிழர் | 07 | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |
| முஸ்லிம்கள் | 06 | 07 | 07 | 06 | 07 |

மேலே தரப்பட்ட அட்டவணையில் இருந்து பெரும்பான்மையினரின் பலத்தை அதிகரிக்கவும் சிறுபான்மையினரைப் பலவீனப்படுத்தவும் வழிசெய்யும் வகையில் அரசமைப்பு அமைந்தது தெளிவாகிறது.

**தமிழ்ப் பிரதேசங்களில் ஊடுருவல்**

பாரம்பரிய தமிழ்ப் பிரதேசங்களில் அரச உதவியுடன் சிங்களக் குடியேற்றங்கள் அதிகரிக்கப்பட்டன. அதன்மூலம் தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களவர்களின் வாக்களிக்கும் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. சுதந்திரம் பெற்ற ஒருசில வருடங்களில் தமிழ்ப் பிரதேசமான கிழக்கு மாகாணத்தில் சிங்களக் குடியேற்றங்கள் துரிதமாக அதிகரிக்கப்பட்டு 1950 இறுதியில் அம்மாகாணத்திலிருந்து நாடாளுமன்றத்துக்கு சிங்கள உறுப்பினர் ஒருவரை சிங்களவர்கள் தேர்ந்தெடுக்கக்கூடிய வாய்ப்பு உருவாக்கப்பட்டது.

அத்துடன், தமிழ்ப் பிரதேசங்களில் காணிகளைப் பெற்றுக்கொள்ள விசேட அனுதிப்பத்திரங்கள் சிங்களவர்களுக்கு வழங்கப்பட்டன.

தமிழ்ப் பிரதேசங்களில் வாழ்ந்த தமிழ் மக்கள் தண்டிக்கப்பட்டும், இம்சைப்படுத்தப்பட்டும், விரட்டியடிக்கப்பட்டும் சிங்களக் குடியேற்றம் மும்முரமாக நடைபெற்றது. இவ்வாறான சட்டவிரோதக் குடியேற்றங்கள் அரசின் பூரண ஆதரவுடனேயே நடைபெற்றன.

**மொழி:**

தங்களது மொழியை ஏனைய சமூகத்தினருடன் பகிர்ந்துகொள்வதில் தமிழினம் எப்போதும் பெரும் அவமானத்தைப் பெற்றுள்ளது. 1955வரை சிங்களவர்களும், தமிழர்களும் ஒரே அணியில் சமமான நடையில் முன்செல்வார்கள் என்பதில் எவ்வித ஐயமும் இருக்கவில்லை. உண்மையில் அரச கவுன்ஸிலில் சிங்களமும் தமிழும் அரசமொழிகளாகும் என்ற தீர்மானம் முன்வைக்கப்பட்டதுடன் பெரும்பான்மைப் பலத்துடன் அது நிறைவேற்றப்பட்டது. அந்தச் சமயத்தில் உரையாற்றிய அமரர் எஸ்.டபிள்யூ.ஆர். டீ. பண்டாரநாயக்க கூறியவை வருமாறு:-

"பொதுவாகக் கூறப்போனால் தேசிய ஒற்றுமையின் மிக முக்கிய அங்கங்கள் மொழிகளே என்பதில் சந்தேகமில்லை. மொழி பரிமாற்றத்தின் மூலமே மக்களின் சரியான தொடர்பாடல்களும், அபிலாஷைகளும், சாதனைகளும் நிறைவேறும். இது பல நூற்றண்டுகளாகவே பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது. ஒரு நாட்டின் உளரீதியான, உணர்வுபூர்வமான, கலாசார ரீதியிலான தொடர்புகளுக்கு மொழிப் பரிமாற்றம் மிகவும் முக்கியமானது. அதன் காரணமாகவே தேசியத்தின் மிக முக்கிய அங்கங்களாக மொழிகள் கணிக்கப்படுகின்றன."

அப்படியானால் சிங்களம் மட்டுமே தேசிய மொழி என்பதன் தாற்பரியம் என்ன? தேசிய மொழியாக ஒரு மொழி மட்டுமே இருக்கமுடியும் என்பது அந்தத் தாற்பரியம் என்றால் பல நாடுகளில் இரண்டுக்கு மேற்பட்ட மொழிகள் தேசிய மொழிகளாக இருப்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். தமிழ் மொழியையும் தேசிய மொழியாக அங்கீகரிப்பதில் எந்தவித பாதகமும் ஏற்படும் என நான் நினைக்கவில்லை. சகல சமூகங்களுக்கும் இடையில் சுமுகமான உறவொன்று நிலைக்கவேண்டும் என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பு. எனவே, இரண்டு மொழிகளையும் தேசியமொழிகளாக்குவதில் எனக்குத் தனிப்பட்ட விரோதம் கிடையாது. அத்துடன், இருமொழிகளும் தேசிய மொழிகள் ஆவதில் எந்தவித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை எனவும் நான் கருதுகிறேன்." (உத்தியோகபூர்வ அறிக்கை அரச கவுன்ஸில், 25 மே 1944, அங்கம் IC 809)

எனினும், 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க உத்தியோகபூர்வ மொழிச்சட்டத்தின் கீழ் 'சிங்களம் மட்டுமே இலங்கையின் உத்தியோகபூர்வ மொழி' என வரையறுக்கப்பட்டுள்ளது: இந்த வரைவிலக்கணத்தைத் தமிழர்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட பெரிய அநீதி எனத் தெரிவித்ததுடன், தமிழ் மொழிக்கும் சமமான அந்தஸ்து வழங்கப்படவேண்டும் என விடாப்பிடியாக இருந்துள்ளனர்.

1961 இல் பிரதான தமிழ்ப் பிரதேசங்களான மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகியவற்றின் பிரதான அரச காரியாலயங்களின்முன் தமிழர்கள் தொடர்ந்து 57 நாள்கள் நடத்திய சத்தியாக்கிரகத்தில் அப்பிரதேசங்களின் நாளாந்த செயற்பாடுகள் அனைத்தும் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்தன.

அதனையடுத்து, அரசு அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தி ஆயுதப்படைகள் மூலம் சத்தியாக்கிரகங்களில் ஈடுபட்டவர்களைத் தாக்கியது. பல்வேறு வன்முறைகளும் அங்கு கட்டவிழ்த்து விடப்பட்டன. தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும், பிரபல தமிழரான சேர். கந்தையா வைத்தியநாதன் போன்றவர்களும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர். அதனையடுத்து தமிழ்மொழியை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பயன்படுத்த அரசமைப்பில் சில மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. எனினும், அரச நிறுவனங்களிலும், ஏனைய இடங்களிலும் சிங்களமே பூரண ஆதிக்கம் செலுத்தியதால் தமிழர்கள் சொல்லொணாத் துன்பங்களையும், அவமானங்களையும், கேலிகளையும் அனுபவித்து வந்தனர்.

**கல்வி:**

கல்வியில் பலத்த பாகுபாடு காட்டப்பட்ட சில முக்கிய பகுதிகளைக் கீழே தருகிறோம்.

1. 1960 ஆம் ஆண்டின் கல்விச் சீர்திருத்தச்சட்டம் 5 மற்றும் 1961 இன் 8 ஆம் இலக்க ஷரத்துகளின் கீழ் தமிழர்களாலும் கிறிஸ்தவர்களாலும் நிர்வகிக்கப்பட்ட பாடசாலைகள் அரசால் சுவீகரிக்கப்பட்டன. எனினும், புத்தபிரிவென பாடசாலைகள் அரச உதவியுடன் தன்னார்வப் பாடசாலைகளாகத் தொடர்ந்தும் நடந்தன.

2. தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் கல்விகற்ற தோட்டப்பாடசாலைகள் சுவீகரிக்கப்படவில்லை. ஏழைத் தொழிலாளர்களின் பிள்ளைகள் அந்த இருண்ட யுகத்தில் இருந்து மீள வா[illegible]வில்லை.

3. தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள தமிழ்ப் பாடசாலைகள் சிங்களப் பாடசாலைகளாக மாற்றப்பட்டன. அதன்மூலம் தமிழ் மாணவர்கள் சிங்களம் கற்க நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

4. அரசு பாடசாலைகளைச் சுவீகரித்த பின்னர் தென்னிலங்கையில் உள்ள சில தமிழ்ப் பாடசாலைகள் முற்றுமுழுதாக சிங்களப் பாடசாலைகளாக்கப்பட்டன. எனினும், அங்கிருந்த தமிழ் மாணவர்களுக்கு எந்தவித மாற்று ஏற்பாடும் செய்யப்படவில்லை.

5. வடக்கிலிருந்த நான்கு தமிழ்ப் பாடசாலைகளின் கற்கைமொழி தமிழில் இருந்து சிங்களமாக மாற்றப்பட்டது.

6. இந்த அரசு பதவிக்கு வந்தபின்னர் 1970 இல் உயர்கல்வி அனுமதியில் பாரிய பாகுபாடு காட்டப்பட்டது. தமிழ் மாணவர்களுக்கு உயர் புள்ளிகள் கோரப்பட்டன. திறமை அடிப்படைத் தேர்வு புறக்கணிக்கப்பட்டதுடன், பின்தங்கிய பகுதிகளில் உள்ள மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்குவதாகக் காரணம் காட்டப்பட்டது. உயர்கல்வி அனுமதியில் அரசு இனரீதியாகப் பாரிய பாகுபாட்டைக் காட்டியுள்ளது.

தமிழ், சிங்கள மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதிக்காகத் தேவைப்பட்ட வெட்டுப்புள்ளிகளைக் கீழே தருகிறோம்.

| பல்கலைக்கழகங்கள் - பாட நெறிகள் | தமிழர்கள் | சிங்களவர்கள் |
|---|---|---|
| பேராதனை - பொறியியல் | 250 | 225 |
| கட்டுபெத்தை - பொறியியல் | 232 | 212 |
| மருத்துவம் - பல்மருத்துவம் | 250 | 229 |
| விவசாயம் - கால்நடை - உயிரியல் விஞ்ஞானம் | 184 | 174 |
| பௌதிக விஞ்ஞானம் | 204 | 183 |
| கட்டிடக்கலை | 194 | 180 |

அன்று தொடக்கம் அரசு இது ஒரு தவறு என ஒப்புக்கொண்டபோதும் இன்றும் அது இரகசியதிட்டமாகத் தொடர்ந்து செல்கிறது. மொழிமூலம், பிரதேச ரீதி என்ற கோதாவில் தரப்படுத்தல் முறை அதேரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. தகுதி அடிப்படையில் மட்டுமே உயர்கல்விக்கு முன்னுரிமை கொடுக்கப்படவேண்டிய தமிழ் மாணவர்களைப் புறக்கணிக்க மேற்கொள்ளப்படும் உபாயமே இது.

**தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள்**

1956, 1957, 1958, 1961, 1974 ஆம் ஆண்டுகளில் தமிழர்கள் பல்வேறு வன்முறைகளுக்கு ஆளாகினர். 1958 இல் தமிழ்ப் பிரதேசங்களுக்கு அப்பால் வாழ்ந்த தமிழர்கள் சிங்களக் குழுக்களின் கோரமான வன்முறைகளுக்கு உள்ளாகினர். கொலைகள், சித்திரவதைகள், கற்பழிப்புகள், சூறையாடல்கள் எனக் கொடூரமான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. 1961 இல் சத்தியாக்கிரகிகள் வன்முறைகளுக்கு உள்ளாகினர். 1974 இல் அரசியல் சார்பற்ற சொற்பொழிவு ஒன்றைக் கேட்டுக்கொண்டிருந்த பிரமாண்டமான கூட்டத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டதில் ஒன்பதுபேர் கொல்லப்பட்டனர். பொலிஸாரும் இராணுவத்தினரும் வழக்கமாகச் சம்பவம் நடந்த இடத்துக்கு அப்பாலும் வெறிகொண்டு அலைந்து வன்முறைகளுக்குத் தூபமிட்டனர்.

**பட்டினியும் சாவும்**

தேயிலை, இறப்பர், தென்னை ஆகிய பெருந்தோட்டங்கள் இந்நாட்டுப் பொருளாதாரத்தின் முதுகெலும்புகள். பொருளாதாரத்தின் உயிர்நாடிகளாக விளங்கும் இந்தத் தோட்டத் தொழிலாளர்கள் சுதந்திரம் கிடைத்தது முதல் அரசியல் சட்டங்கள் மூலம் அரசியல், சமூக, பொருளாதார ரீதியில் நசுக்கப்பட்ட பலிக்கடாக்களாக ஆக்கப்பட்டுள்ளனர். வேலை வாய்ப்பின்மை, குறைந்த ஊதியம், அவர்களுக்கு வழங்கப்படும் உணவுப் பொருட்களில் பலத்த வெட்டுகள் போன்றவற்றால் பசி, பட்டினிக்கு ஆளாக்கப்பட்டு பூண்டோடு அழிக்கப்படுகிறார்கள்.

இந்த நிலைமை காரணமாகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் இறப்பு வீதம் தீவிரமாக அதிகரித்துச் செல்கின்றது. தோட்டத் தொழிலாளர்கள் குடும்பத்துடன் பக்கத்து நகரங்களுக்குச் சென்று பிச்சையெடுத்து வயிறு வளர்க்கவேண்டிய பரிதாபநிலை தோன்றியுள்ளமை கசப்பான உண்மை.

முடிவாக, தமிழர்கள் பல்வேறு இக்கட்டுகளுக்கும், அசௌகரியங்களுக்கும் முகம் கொடுக்கும் ஏனைய விடயங்களை முன்வைக்க விரும்புகிறோம்.

1. அரச துறையிலும், அரசால் நிர்வகிக்கப்படும் நிறுவனங்களிலும் தமிழர்களுக்கு சமதொழில் வாய்ப்புக்கு மறுப்பு.

2. அரசால் அங்கீகரிக்கப்பட்ட பாடப் புத்தகங்களில் தமிழர்களுக்கு எதிரான பிரசாரம்.

3. தமிழ்ப் பிரதேசங்களில் தொடர்ந்தும் பொலிஸ், இராணுவ நடவடிக்கைகள்.

4. அமைதியான கூட்டங்களுக்குத் தடை.

5. தமிழ்த் தலைவர்களுக்கும், தமிழர்களுக்கும் நாட்டைவிட்டு வெளியேறும் உரிமைக்குத் தடை.

6. சிறுபான்மையினரின் அடிப்படை மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஆக்கபூர்வமான வரைவிலக்கணங்கள் அரசமைப்பில் இல்லாமை.

7. தன்னிச்சையான கைதுகளும், தடுத்து வைப்பும். (தற்சமயம் 42 தமிழர்கள் அவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.)

8. கைதுசெய்யப்படும்போதும் தடுத்து வைக்கப்படும்போதும் கொடூர சித்திரவதைகள்.

9. பௌத்த மதத்துக்கு முதலிடம் கொடுத்து அதனைப் பாதுகாத்து சீராட்டி வளர்ப்பதற்கான சட்டவரைவிலக்கணங்கள்.

10. காங்கேசன்துறைத் தேர்தல் தொகுதியில் 50 ஆயிரம் பேர் தங்கள் நாடாளுமன்றப் பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்க முடியாதவாறு கடந்த இரண்டு வருடங்களாக, இடைத்தேர்தலை நடத்தாமை.

**பொதுநலவாயமும் தமிழர்களும்**

இலங்கை இன்று இரண்டு தேசங்களைக் கொண்ட நாடு. அதில் தமிழ்த் தேசம் தனது சுயநிர்ணய உரிமையைக் கோருகிறது. இலங்கைத் தமிழ்ப் பிரச்சினை ஒரு உள்நாட்டு விவகாரம் மட்டுமல்ல சர்வதேசப் பிரச்சினையல்ல. இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல் ஸ்ரீ. இராஜகோபாலச்சாரியாரின் கூற்று, கீழ்க்கண்டாவறு அமைகிறது "தனிப்பட்ட தவறுகள் பெரும்பாலும் வீட்டுச்சுவர்களுக்குள் நடக்கின்றன. பெரும்பாலான பகிரங்கத் தவறுகள் அரச எல்லைகளுக்குள் நடக்கின்றன. உலகத்தின் ஒரே நோக்கம் நாட்டு எல்லைகளை வகுப்பது மட்டுமானால், உலகம் ஒருமித்து முன்னேற முடியாது. அப்படியானால் உலகத்தில் கொடுங்கோலாட்சியே நடைபெறும்."

எனவே, இலங்கைத் தமிழர் பிரச்சினையை உள்நாட்டு விவகார்ம் எனக் கணிப்பது நாட்டின் அரசியல் சமூக உண்மை நிலைகளை மறைப்பதாக எடுத்துக்கொள்ளப்படலாம்.

எல்லாக் கோணங்களிலும் இலங்கைத் தமிழர்கள் கலந்துரையாடல்கள், விட்டுக்கொடுத்தல், சமாதான வழி போன்றவை மூலம் தங்களது உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முனைகிறார்கள்.

இந்தநிலை மென்மேலும் கைநழுவிப் போவதுடன் ஒருகட்டத்தில் மீளமுடியாத நிலைக்குச் சென்றுவிடலாமோ என்ற சந்தேகம் தோன்றுகிறது.

இலங்கையில் இன்று நிலவும் நிலையை மாற்ற உடனடி நடவடிக்கைகள் அவசியம். தவறினால் நிலைமை மேலும் மோசமடையலாம். பொதுநலவாய நாடுகளின் உச்சிமாநாட்டு நிகழ்ச்சிநிரலில் இல்லாதபோதும் அந்நாடுகளின் சிறுபான்மை இனத்தவர் பற்றிக் கலந்துரையாடலாம் என்ற கருத்து நிலவுகிறது. நிகழ்ச்சிநிரலில் இல்லாதபோதும் காஷ்மீர் மற்றும் இன ஒதுக்கல் பிரச்சினைகள் முன்னைய மாநாடுகளில் விவாதிக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் மேன்மேலும் மோசமாகி வரும் தமிழர்களின் நிலைமையை மனிதாபிமான ரீதியில் தீர்த்துவைக்க 20 ஆவது மாநாட்டில் இவ்விடயம் எடுக்கப்படவேண்டும். அண்மைய சரித்திரத்தில் உலக நாடுகள் ஆபத்தில் உள்ள சிறிய நாடுகளுக்கு உதவிக்கரம் நீட்ட முன்வந்துள்ளமை பதிவாகியுள்ளது. எனினும், தங்களின் சட்டபூர்வ உரிமைகளுக்காகப் பல்லாயிரக் கணக்கான உயிர்கள் பலியான பின்னரே இந்த உதவி கிடைத்துள்ளது. ✸

தமிழில் 'மணி'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருவது வித்தியா — இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
முக்கியமான பிரச்சினை ஒன்றைப் பற்றி குடும்ப உறுப்பினர்களுடன் கலந்து ஆலோசிப்பீர்கள். நண்பர்கள் சிலரைப் பாராட்டி பேசி காரியம் சாதிப்பீர்கள். கூட்டு முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. பழைய கடன் மிகுதிகள் வசூலாகும். பெண்கள், பிறந்த வீட்டின் உதவிகளைப் பெற்று மகிழ்ச்சி அடைவர். வேலைப்பளு அதிகரிக்கும்.

**இடபம்:**
கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். தெய்வ வழிபாட்டில் நாட்டம் செல்லும். சகோதரர்கள் வழியில் முக்கியமான செய்திகளைக் கேட்கலாம். அரசு தொடர்பான காரியங்கள், அனுகூலமாக முடிவுக்கு வரலாம். மதிப்பு, கௌரவம் பார்த்து சில வேலைகளைச் செய்வீர்கள். உறவினர் ஒருவருக்காக நண்பர்களிடம் உதவி கேட்கலாம்.

**மிதுனம்:**
வாழ்க்கைத் துணை வழியே சந்தோஷமான செய்தியைக் கேட்கலாம். கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்வீர்கள். உறவினர்கள் வழியில் சிறு பிணக்குகள் ஏற்பட்டு பின்னர் சரியாகும். பிள்ளைகளுக்காக சிறு தொகையைச் செலவு செய்யலாம். எதிர்பார்த்த விடயம் ஒன்றில், ஏமாற்றத்தைச் சந்திக்கலாம். மறதியால் அவதியுண்டு.

**கடகம்:**
திடீரென நடக்கும் நிகழ்ச்சிகளால் வியப்படையலாம். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். ஆதாயம் இருக்காது என தெரிந்தும், சில வேலைகளுக்காக அலைவீர்கள். தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் கடிந்து கொள்ளலாம். முக்கியமான ஒரு நபரைப் பற்றி பலரிடம் விமர்சிப்பீர்கள். பயணங்களில் மாற்றம் நேரும்.

**சிங்கம்:**
கடினமான வேலைகளையும், சாமர்த்தியமாகச் செய்து முடிப்பீர்கள். காலை முதல் மாலை வரை உற்சாகமாகச் செயற்படுவீர்கள். நாளை வரும் என நினைத்த பணவரவு ஒன்று, இன்றே வந்து விடலாம். நிலம், பூமி தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை அவசியம். புதிய இடங்கள் சிலவற்றுக்குச் செல்லும் சூழ்நிலை உருவாகலாம்.

**கன்னி:**
குடும்பத்தில் மகிழ்ச்சி, சந்தோஷம் அதிகரிக்கும் நாள். சிலர் உங்களிடம் கொடுத்த வாக்கை காப்பாற்றாமல் தவிக்க விடலாம். நீண்ட நாள்களாகத் திட்டமிட்ட வெளியூர் பயணம் ஒன்றை மேற்கொள்ளலாம். எதிர்பாராமல் உறவினர் ஒருவரை, வழியில் சந்திக்கலாம். சிலரிடம் வீண் பேச்சுக்கள், பழங்கதைகள் பேசி நேரத்தை வீணடிப்பீர்கள்.

**துலாம்:**
கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள். மற்றவர்கள் செய்ய முடியாத காரியம் ஒன்றை நீங்கள் செய்வீர்கள். கடினமான பொருள்களைக் கையாளும் போது, கவனம் அவசியம். எதிர்பாராத சில உதவிகள் கிடைக்கலாம். நண்பர்கள் உங்களைப் பாராட்டி பேசி, காரியம் சாதிக்கலாம். சிலர் உங்களுக்காகச் செலவு செய்யலாம்.

**விருச்சிகம்:**
குடும்ப உறுப்பினர்களின் கோரிக்கையை நிறைவேற்றுவீர்கள். புதிய வாகனங்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறலாம். தொலைபேசி வழியில், சங்கடம் தரும் அல்லது சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம். நீண்ட நாள்களாக பிற்போட்டு வைத்த காரியம் ஒன்றை, இன்று பெரிய மனிதர் ஒருவரின் உதவியுடன் முடிப்பீர்கள்.

**தனுசு:**
அயலாரின் அன்பைப் பெறுவீர்கள். ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்ட சிலர் மனம் மாறி உதவி செய்வர். எடுத்த காரியங்களில் எதிர்பாராத வெற்றி கிட்டும். வியாபாரிகளுக்கு கடன் மிகுதிகள் வசூலாகும். பகட்டான ஆடை, ஆபரணங்கள் அணிவீர்கள். நீண்ட நாள்களாக வராத உறவினர் ஒருவர் உங்களின் வீட்டிற்கு வரலாம்.

**மகரம்:**
எந்த விடயத்திலும் உறுதியோடு செயற்பட்டு நினைத்ததை முடிப்பீர்கள். குடும்பத் தேவைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். தந்தை தொடர்பான விடயங்களில் அதிக அக்கறை காட்ட நேரிடலாம். நெஞ்சை விட்டு அகலாத சம்பவங்கள் நடக்கலாம். கணவன், மனைவி இடையேயான பாசம் அதிகரிக்கும். சிலர் உங்களுக்கு நல்ல யோசனை சொல்வர்.

**கும்பம்:**
புதியவர் ஒருவரின் நட்பைப் பெறுவீர்கள். மாற்று மதத்தினர் வழியில், முக்கியமான உதவிகள் கிடைக்கும். சொத்து வாங்கல், கொடுக்கல் விவகாரங்களில் முன்னேற்றம் உண்டு. தேக ஆரோக்கிய குறைவுகளால் செலவுகள் ஏற்படலாம். அரசியல்வாதிகள் வெளியூர் பயணங்கள் செல்லலாம். சேமிப்பு கரையும் நாள்.

**மீனம்:**
சிந்தித்து பொறுமையுடன் செயற்பட வேண்டிய நாள். கடனாக வாங்கிய பணத்தை, உடனே திருப்பிக் கொடுக்க வேண்டிய கட்டாயம் உருவாகும். சில வேலைகளை நீங்கள் செய்ய முடியாமல் மற்றவர்களை நம்பி ஒப்படைக்கலாம். உங்களின் மனம் நோகும் வகையில் சிலர் பேசலாம். சக ஊழியர்கள் அல்லது நண்பர்கள் சிலருடன் சண்டை போடலாம்.

# வடக்கில் அபிவிருத்தி தொடர்பாக மூன்று திட்டங்கள் நிறைவேறின

## வலி.மேற்குப் பிரதேச சபையின் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம்,ஒக்.29

வடக்குப்பிரதேசத்தின் அபிவிருத்திக்கும்- வளர்ச்சிக்குமான மூன்று அபிவிருத்தித்திட்டங்கள் வலி. மேற்கு சுழிபுரம் பிரதேச சபையில் நிறைவேறின.

வலி.மேற்கு பிரதேச சபையின் 2 ஆவது சபைக் கூட்டம் தலைவர் திருமதி.நா. ஐங்கரன் தலைமையில் இடம்பெற்றது. இதில் வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் தர்மலிங்கம் நடனேந்திரனால் முன்மொழியப்பட்ட மூன்று அபிவிருத்தித் திட்டங்களையும் ஆளும் தரப்பு-அரச தரப்பு உறுப்பினர்கள் வரவேற்றனர்.

வடக்கு பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பாக நேற்று முன்தினம் முன்மொழியப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான விவரம் வருமாறு :

வடமாகாணம் 34 உள்ளூராட்சிச் சபைகளை கொண்ட பரந்த வெளிப் பிரதேசம். அதிலும் வடக்கு மாகாணத்துக்கான சிறுவர் வைத்தியசாலை அமைப்பதற்கு வலி.மேற்கு பிரதேசத்தில் உள்ள சங்கானை பிரதேசம் முன்மொழியப்பட்டுள்ளது. இந்தத்திட்டம் தொடர்பாக நான் சுகாதார அமைச்சிடம் தொடர்பு கொண்டபோது இவ்வாறான வைத்தியசாலை உருவாக்குவதாயின் விசேட கவனத்தின் கீழ் அமைக்கப்படவேண்டும். ஆரம்ப கட்டத்தில் 200 முதல் 500 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்படவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

எனவே இந்த சிறுவர் வைத்தியசாலை தொடர்பாக அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்று பலதரப்பட்டோரும் இதைப்பற்றி ஆராய்கின்றனர்.

இதற்கான முன்மொழிவுப் பத்திரம் அரச அதிபர் ஊடாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பப்படும். அதன் பிரதியை யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளருக்கும் அனுப்ப வேண்டுமென்று நடனேந்திரனால் முன் மொழியப்பட்ட முதலாவது தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அடுத்து கடந்த 30 ஆண்டுகாலமாக மீள்புனரமைப்பு இன்றி அழிவடைந்து வரும் வேலணை- அராலி கடல்பாதை புனரமைப்பு தொடர்பாக முன்னாள் அரச அதிபரால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் மதிப்பீடு பெற்று 50 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டபோதும் அபிவிருத்தி இடம்பெறவில்லை. இந்த அபிவிருத்தி தடைப்பட்டதால் தீவகத்துக்கும்-வலிகாமத்துக்கும் இடையிலான வியாபார, விவசாய கொடுக்கல் வாங்கல், சமூகமயமாக்கல் செயற்பாடு யாவும் பின்னோக்கி செல்கின்றன.

எனவே ஆளுநருக்கும், அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கும் இதற்கான நினைவூட்டல் முன்மொழிவை முன்வைத்து அவசர கடிதங்களை அனுப்புதல் வேண்டும். இதன் பிரதிகளை வேலணை பிரதேச சபை,வேலணை பிரதேச செயலர், வலி.மேற்கு பிரதேச செயலர், வேலணை வர்த்தகசங்க தலைவர், பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்க தலைவர் ஆகியோருக்கும் அனுப்பவேண்டும் என்று கூறப்பட்டது.

மூன்றாவதாக சங்கானை மத்தி, அராலி ஊரத்தியில் கடந்த 50 ஆண்டுகளாக பிரதேச சபை காணியில் குடியேறியுள்ள 70 இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு காணி உறுதிப்பத்திரங்களை வழங்குமாறு ஜனாதிபதி செயலகமும், வடக்கு மாகாணத்தின் முன்னாள் ஆளுநரின் செயலாளர் சி.ரங்கராஜன், வடமாகாண காணி ஆணையாளர், அரச அதிபர் ஆகியோர் வழங்க கோரியும் கடந்த காலங்களில் சபை இல்லாததால் காணி பகிர்ந்து வழங்கப்படவில்லை.

ஆனால் பிரதேச சபையின் செயலாளர் காணி உறுதி வழங்குவதற்கான சகல ஆயத்தங்களையும் மேற்கொண்டு கோவையில் வைத்துள்ளார்.

தற்போது சபை அமைந்து மக்கள் முன் பகிரங்கமாக செயற்படுகின்றது. எனவே அராலி மத்தி ஊரத்தி சங்கானை மத்தியில் உள்ள 70 குடும்பங்களுக்குமான காணி உறுதிப் பத்திரம் வழங்கும் தீர்மானமும் முன்வைக்கப்பட்டு சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்த மூன்று தீர்மானங்களையும் உடன்நடைமுறைக்கு கொண்டு வருமாறும் அதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு உபதலைவர் நவரட்ணம் சிவரஞ்சன் தலைவரைக் கேட்டுள்ளார். (ம-302)

# புத்தகசாலை

## நூல்: விடியலைத் தேடி




ஈழத் தமிழர் தமது அரசியல் உரிமைகளை வென்றெடுக்கக் காலத்துக்குக் காலம் மேற்கொண்ட சாத்வீக அரசியல் முன்னெடுப்புகள் எதிர்பார்த்த வெற்றிகளை தரவில்லை. அதைத் தொடர்ந்து ஆயுதப் போராட்டம் முகிழ்ந்தெழுந்தது.

கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழ் நிலங்களிலும் நாடு முழுவதும் ஏற்பட்ட அழிவுகள் அர்த்தமற்றவைகளாக ஆக்கப்பட்டன.

தமிழர்களின் உரிமைக் குரல்கள் ஓங்கி ஒலிக்காதபடி ஒடுக்கும் வகையில் அரசும், அதுசார்ந்த அயல் நாடுகளும் தமிழர்களை மௌனிக்கச் செய்ய முயன்று வருகின்றன. ஈழத்தமிழரின் போராட்ட வரலாறும், அந்த வரலாற்றுக் காலத்தில் மக்கள் அடைந்த துன்ப துயரங்கள் மறக்கடிக்கப்படுவதன் மூலம் ஈழத்தமிழரின் போராட்ட வரலாறு ஈழ மக்களுக்குச் சரியான பாடத்தைக் கற்பிக்கத் தவறிவிடக் கூடும். அத்தகைய ஓர் எதிர்காலம் ஏற்படாதிருக்க இறுதிப் போரின் துன்ப துயரங்களைச் சம்பவக் கோவைகளாக்கி போராட்ட வரலாற்றை ''விடியலைத் தேடி'' எனும் நாவல் வடிவில் தந்துள்ளார் சாகித்ய ரத்னா. செங்கை ஆழியான் அவர்கள்.

சிறந்ததோர் புகழ்பெற்ற எழுத்தாளர். அவரது இலக்கிய வடிவங்கள் காலத்தையும், பிரதேசத்தையும் மக்கள் வாழ்வையும் காட்டும் வகையில் அமைந்திருப்பவை என்ற வகையில் ''விடியலைத் தேடி'' எனும் நாவலும் அந்த வகைக்குள் பல உண்மைகளை வெளிப்படுத்திச் செல்லுகின்றன. புவியியல், வரலாறு, என்பவை பாடங்களாகப் பகுத்துரைக்கப்படாமல் காட்சிப் படங்களாக விரித்தளிக்கப்பட்டுள்ளன. வாசகனுக்கு நாவல் வடிவில் தரப்பட்டுள்ள கடந்த கால உண்மைகள் பல இடங்களில் மனதை உறுத்துகின்றன. ஈழத் தமிழர்களின் எதிர்கால அரசியலுக்குப் புதிய [illegible] நாசூக்காகச் [illegible] முடிவும் நாம் எதிர்பார்ப்பதைப் போல் அமைவதில்லை ஏமாற்றங்களே எஞ்சுகின்றன. அவற்றை விதி என்பதா? அல்லது நாம் செய்த வினை என்பதா என்ற கேள்வி மயக்கத்தோடு. நாவல் நிறைவு செய்யப்பட்டுள்ளது. உண்மைகள் பலவேளைகளில் கசப்பானவையாக இருப்பினும் இன்றைய காலகட்டத்தில் நாவலின் வருகை ஈழத்தமிழரின் துயர வரலாற்றை மனதிற் பதிக்கும் என்பது நிலைத்திருக்கும் உண்மையாகும்.

மகேஷ்

## நூல்: சைவ சமய தரிசனம்




சிவநெறிக்கலாநிதி, இராசையா ஸ்ரீதரன் எழுதிய ''சைவ சமய தரிசனம்'' நூல் திருத்திய புதிய பதிப்பாக அழகிய அட்டைப் படத்துடன் வெளி வந்துள்ளது. சைவ சமயத்தை ஏற்றுப் போற்றி வாழும் மக்களின் வாழ்வாதாரப் பணிகளுக்கு மென்மேலும் சிறப்பூட்டும் முயற்சியாக சைவசமய விரதங்களின் மகிமையை விளக்கும் கட்டுரைகள் நிறையவே உள்ளன. அவற்றோடு திருவாசகம், தேவார திருமுறைகள் பற்றியும் பிரார்த்தனைக்கு உறுதுணையாகும் மந்திரங்கள் பற்றியும் விளக்கியுள்ளார்.

சைவத்துக்குத் தொண்டாற்றிய ஆறுமுக நாவலர், நல்லை ஆதீன குருமுதல்வர் ஆகியோருடன் அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் ஆகியோர் பற்றியும் நூலின் பக்கங்கள் சிறப்புரைக்கின்றன. மீள் பதிப்பாயினும் இன்றைய தேவைக்கும் சைவப் பெருமக்களின் வாழ்வுக்கும் இது பெரிதும் உதவும் நன்னூலாகும்.

மகேஷ்

புத்தகசாலைப் பகுதிக்கு இரண்டு புத்தகங்கள் அனுப்பி வைத்தால் அவை தொடர்பான விவரம் இப்பகுதியில் பிரசுரிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தவறிவிட்டது

சாவகச்சேரி வடக்கு மீசாலையைச் சேர்ந்த நல்லதம்பி கௌரி மனோகரி என்பவரது தே.அ.அ (825214372 V) மற்றும் அடைவுச் சீட்டுக்கள் என்பன கொடிகாமத்துக்கும் மீசாலைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்துதவவும்.

T.P- 0770475945 ,
0774258326

### பணியாளர்கள் தேவை

காசாளர் (ஆண் / பெண்)
தாதியர் (ஆண் / பெண்)
தாதி பயிலுனர் (ஆண் / பெண்)
சுத்திகரிப்பாளர் (ஆண் / பெண்)
காலம்:- ஞாயிற்றுக்கிழமை (30.10.2011)
நேரம்:- முற்பகல் 10.00 மணி
இடம்:- நியூ யாழ்.வைத்தியசாலை, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.

தொ.பே.இல:-
0212221011, 0212223533

நிர்வாகி.


# சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் ஆண்டு நிறைவும் மலர் வெளியீடும்

யாழ்ப்பாணம், ஒக்.29

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் 135 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் சிறப்பு மலர் வெளியீடும் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் கல்லூரி அதிபர் வ.ஸ்ரீகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ. இராஜேந்திரனும், கௌரவ விருந்தினராக ஓய்வு நிலை அதிபர் திருமதி அ.வேலுப்பிள்ளையும் கலந்து கொள்வர்.

இந்த நிகழ்வில் நூலின் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக சமூகவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி பகீரதி ஜீவேஸ்வரராசனும் ஆய்வுரையை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியர் ந.குகபரனும் வழங்கவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து நாட்டிய நாடகமும் இடம்பெறவுள்ளது. (ம-313)


### கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான No.1 புறோயிலர் கோழிக் குஞ்சுகள் விநியோகம் செய்யப்படுகின்றன, பெற்றுக் கொள்ள விரும்புவோர் பதிவுகளை மேற்கொள்ளவும்.

சிற்றிபாம் ரேடேர்ஸ்,
ஆடியபாதம் வீதி,கல்வியங்காடு,
0212221158.

### ஓட்டோ விற்பனைக்கு

RE 205 - WPYL - xxxx தொடர் இலக்கமுடைய Bajaj பச்சை நிற ஓட்டோ விற்பனைக்குண்டு.

தொடர்பு:0775572453
0758014934


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 22 - 11 - 1934 | 31 - 10 - 2008 |

### திருமதி தம்பிராசா சுந்தரகாந்தா (மல்லி)

திதி : திருதியை 29.10.2011

மூன்றாண்டுகள் இமைப் பொழுதில் கடந்ததம்மா;
தீராது எம் கவலை தேம்புகின்றோம்
உமை நினைத்து
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை இறைஞ்சி நிற்கும்;

கோணாவளை ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு
கொக்குவில்.

அன்புக் கணவர்,
சி.தம்பிராசா

(9846)

## Computer Express
### Institute of Information Technology

பாடசாலை மாணவர்களுக்கும், கணனி ஆர்வலர்களுக்குமான தொழில்சார் கற்கைநெறிகள் ஆரம்பமாகின்றன....

| | | |
|---|---|---|
| * Dip. in MicroSoft Office. | 3Months | 2000/= |
| * Dip. in web page Designing. | 4Months | 2000/= |
| * Dip. in Graphic Designing. | 4Months | 2000/= |
| * Dip. in Desk top publishing. | 4Months | 2000/= |
| * Dip. in Hardware Engineering. | 3Months | 2000/= |
| * Dip. in Auto CAD. | 3Months | 2000/= |
| * Dip.in Programming Language | 3Months | 2000/= |
| * Dip. in Acc.Package. (MYOB,Accpac,Q Book) | 3Months | 3000/= |
| * Dip. in Computer Science | 4Months | 2500/= |
| * Honours Dip. in computer science | 5Months | 2500/= |

**Advances Courses**
Diploma in Video Editing 4Months 3000/=
Diploma in Multimedia 4Months 3000/=

பதிவுகளுக்கு முந்துங்கள்

Diploma in Computerized Accounting
1 week/3Months Course புதிய பிரிவுகள் ஆரம்பம்.

C,C++,Java,Java Script,VB,Html, ஆகிய Programming Language வகுப்புகள் நடைபெறும்
University of Madras Bsc பட்டதாரிகளுக்கான விரிவுரைகள் நடைபெறும்

Batch I -29.10.2011:- 11am or 3Pm Batch III 02.11.2011:- 9 am or 3Pm
Batch II -30.10.2011:- 11am or 3Pm Batch IV 04.11.2011:- 9 am or 3Pm

No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
021 222 8250, 0777222422, 0774907444

# விழிப்புணர்வுக் கருத்தரங்கு

தென்மராட்சி, ஒக்.29

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரின் ஏற்பாட்டில் எயிட்ஸ் மற்றும் எச்ஐவி தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் விஞ்ஞானம், மனைப் பொருளியல், சுகாதாரம், ஆரம்பக் கல்வி ஆகிய பாடங்கள் கற்பிக்கும் 100 ஆசிரியர்கள் இந்தக் கருத்தரங்கில் பங்குப்றறினர்.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி க.தயாளன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சிவசங்கர், யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய அதிகாரி ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டனர். (ம-207)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம்
## விஞ்ஞான பீடம்
## அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம் மற்றும் விஞ்ஞான பீடம் ஆகியவற்றுக்குப் புதிதாக அனுமதிக்கப்பட்டுள்ள முதலாம் வருட மாணவர்களுக்கான 2010/2011 கல்வியாண்டுக்கான அறிமுக நிகழ்வு 02.11.2011 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு மீள ஆரம்பமாகும். அறிமுக நிகழ்வில் தவறாது கலந்து கொள்ளுமாறு புதிய மாணவர்கள் அனைவரும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மேற்படி பீடங்களின் ஏனைய மாணவர்களுக்கான கல்விச் செயற்பாடுகளும் 02.11.2011 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகும்.

பதிவாளர்
28.10.2011

# மரண அறிவித்தல்

## திருமதி நாகலிங்கம் பூரணம்



சுருவிலைப் பிறப்பிடமாகவும் 5 ஆம் வட்டாரம் சுருவிலை வதிவிடமாவும் கொண்ட திருமதி நாகலிங்கம் பூரணம் நேற்று (28.10.2011) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாரிமுத்தர் - ஐயாத்தை தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற கந்தையா - கதிராசிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற நாகலிங்கத்தின் அன்பு மனைவியும், பரமேஸ்வரி காலஞ்சென்றவர்களான புவனேஸ் வரி, இராஜேஸ்வரி மற்றும் நாகேஸ்வரி, நாகராசா, நந்தகுமார் (கொழும்பு) ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற சொக்கலிங்கம் மற்றும் மகாலிங்கம், ஏரம்பமூர்த்தி மதிவதனி, புஸ்பம் ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம், பொன்னுச்சாமி, கைலாயப்பிள்ளை, பாக்கியம் மற்றும் மார்க்கண்டு, சோமு, கந்தசாமி, புஸ்பம் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான ஆனந்தராசா, காந்தன் மற்றும் கேதீஸ்வரி, மதுசன், கோகுலன், ஜீவராசா - புவனேஸ்வரி (சுவிஸ்), கௌரி - அண்ணாத்துரை, கருணாகரன் - ஆனந்தி, புனிதா - அம்பிகைபாகன், காலஞ்சென்றவர்களான அனித்தா காந்தரூபன் மற்றும் கோசலாதேவி - தவராசா, சகிலா - மயூரன், மஞ்சுளா - சசிகரன், தயானந்தி, நந்தகுமார், விஜிதா, பாமினி - குமணன் ஆகியோரின் பேர்த்தியும். விதுசன், விதுனா, ஆகாஷ், மோகனா, டிலக்சன் அபிவர்சினி, லோஜிதன், சிந்துகன், சிந்துஜா, தர்மிலன், தர்மசீலன், தனுசியா, சிவறூபி மாதுளன், கீர்த்திகா, பதுசன், தனுசன், நிதுசன், சிவானுஜா, தர்சிகா, கஜவர்ஷன் ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.10.2011) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சுருவில் இந்து மயானத்துக்கு எடுத்து செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

5 ஆம் வட்டாரம்,
சுருவில்.

தகவல்:
நா.நாகராசா (மகன்)

# நீங்காத நினைவலைகள்

முதலாமாண்டு



தோற்றம்:
28.06.1931
மறைவு:
08.11.2010

இரண்டாமாண்டு



தோற்றம்:
28.01.1941
மறைவு:
06.10.2009

அமரர் சபாபதிப்பிள்ளை
சுப்பிரமணியம்
திதி: திருதியை

அமரர் சுப்பிரமணியம்
பாக்கியம் (நாகம்மா)
திதி: துதியை

அம்மாவின் ஈராண்டு பூர்த்தியுடன் அப்பாவின் ஓராண்டு பூர்த்தியிலும்
ஆற்றுவதற்கு அம்மாவும் அப்பாவும் இன்றி ஆறாத்துயரினை
எமதாக்கித் கொண்ட பிள்ளைகள் நாங்கள்
உங்கள் மருமக்களுடனும், பேரப்பிள்ளைகளுடனும்
எங்கள் உயிர் தெய்வங்கள் உங்கள் ஆத்மா சாந்தி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.
நல்லூரான் தாழ் பணிந்து

கம் வீதி.
திருநெல்வேலி கிழக்கு. திருநெல்வேலி.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தத் தராசுகளைத் தூர எறியுங்கள்...



மனிதர்கள் பலரும் மனசில் ஒரு தராசைத் தூக்கிக்கொண்டே அலைகிறார்கள். பிறரை, பிறரது பேச்சை, அங்க அசைவுகளை செயல்களை ஒவ்வொரு கணமும் அந்தத் தராசில் போட்டு நிறுத்துக்கொண்டே இருக்கிறார்கள். பழகும்போதே இவன் நல்லவனா? கெட்டவனா? என்று எடை போட்டுக் கொண்டே இருக்கிறார்கள். பிறரை நிறுத்துப் பார்ப்பதிலேயே தங்கள் வாழ்நாளை வீணாக்குகிறார்கள். ஒவ்வொருவருக்கும் இறைவன் இறுதிநாளில் தீர்ப்பு எழுதுவான் என்று இஸ்லாமும், கிறிஸ்துவமும் அறிவிக்கின்றன. ஆனால் அந்த இறைவனுக்கும் முன்பாகவே மற்றவர்களைப் பற்றி இவர்கள் தீர்ப்பெழுதுகிறார்கள். இவன் நல்லபடி இருப்பானா, நாசமாகி விடுவானா என்றெல்லாம் இவர்களாகவே தீர்ப்பளித்து வரங்களையும் சாபங்களையும் வாரி வழங்கி கடவுளின் வேலையையும் இவர்களே செய்கிறார்கள். இதுசரியா? கொஞ்சம் சிந்தியுங்கள்.

எப்போதும், எதையாவது, எவரையாவது எடைபோட்டுத் தீர்மானிக்கிற இயல்பை விட்டுவிடுவது அவசியம். வெகு அவசியம். இதன் மூலம் நாமும் துன்பப்படுகிறோம். பிறரையும் துன்புறுத்துகிறோம். பிறரைப் பற்றி தீர்மானிக்க, பிறர் செயல் பற்றி தீர்ப்பளிக்க நாம் யார்? அது இறைவனின் வேலை.... தப்பும் தவறுமாக அந்த இறைவனின் வேலையை நாம் செய்யத் தொடங்கி உலகையே நரகமாக்கிக் கொள்ள வேண்டாம். அது நம்முடைய வேலை இல்லை.

ஏசுவின் வாழ்வில் நடந்த புகழ்மிக்க சம்பவம். அதில் பாதி புரிந்து கொள்ளப்பட்டது. ஆனால் மீதியும் புரிந்து கொள்ளப்பட வேண்டும் என்பதற்காக கூறுகிறேன். உடலை விற்று வாழும் ஒருத்தியை ஊரே கல்லால் அடித்துக் கொல்ல முயன்றது. தங்கள் பழைய வேதப் புத்தகங்களில் இருந்தது இத்தகைய தவறுக்கு இதுதான் தண்டனை என்கிற அறிவிப்பை எடுத்துக்காட்டி கொலை வெறியுடன் உறுமினார்கள் பலர். இவ்வளவும் ஏசுவின் முன்பாக நடக்கிறது.

இந்தப் பெண்ணை அடிக்காதீர்கள் என்று ஏசு சொன்னால் அவர் பழைய வேத நெறிகளுக்கு முற்றிலும் எதிரானவர் என்று அவரைப் பழிக்கு உள்ளாக்கிவிடலாம் என்று சிலர் துடித்தனர். 'அடியுங்கள்' என்று சொன்னாலோ இத்தனை காலம் ஏசு போதித்த கருணை, இரக்கம், மன்னிப்பு போன்ற எல்லாமே பொய் முழக்கம் என்று அப்போதும் ஏசுவைப் பழி தூற்ற முடியும்... என்று சந்தோஷப்பட்டனர். இப்படி ஒரு இக்கட்டான நிலையை ஏசுவின் மீது திணித்தது வெறி பிடித்த கூட்டம். ஆனால் உண்மை ஞானிக்கு இக்கட்டு என்று எதுவுமே கிடையாது என்பதை ஏசு உடனடியாக நிரூபித்தார்.

அடித்துக் கொல்வதா? கூடாதா? என்று இருபுறமும் கூரான வாள் போன்ற கேள்வியை ஏசுவை நோக்கி சமூகம் வீசியது. ஏசு சொன்னார். "அடியுங்கள்... ஆனால் இதுவரை உடலாலும் மனதாலும் ஒரு பாவமும் செய்யாதவன் எவனோ அவன் கல்லெறியட்டும்" என்றார். உலகம் திகைத்தது. அப்படி எவனுமே இல்லாததால் கூட்டம் கலையத் தொடங்கியது. இந்தக் கதையை இதுவரை நம்மில் பலர் அறிவோம். ஆனால் அறியவேண்டிய பகுதி இன்னும் உண்டு. அது ஆழமானது. அதிக அர்த்தம் உள்ளது.

நடுங்கியபடி நின்று கொண்டிருந்த பெண் ஏசுவின் காலடிகளில் வீழ்ந்து, "நான் பாவம் செய்தவளே... பிழை செய்தவளே... கல்லால் அடித்துக் கொல்லத்தக்கவளே... இத்தனை மேன்மைமிக்கவராகிய தாங்கள் என்னைத் தண்டியுங்கள்" என்று கதறினாள்.

"நீ யார் என்று தீர்மானிக்கவோ... தண்டிக்கவோ இங்கு நான் யார்? அது என் வேலை அல்ல. அது தேவனுக்குரியது. அதை அவர் தீர்மானிப்பார். உனக்கும் கடவுளுக்கும் இடையில் நான் புகுந்து கொள்வது அவசியமற்றது" என்கிற கருத்தில் பதில் கூறுகிறார் ஏசு. இது உலக மனிதர்கள் அனைவரையும் உலுக்கி இருக்க வேண்டிய செய்தி.

பிறரைப் பற்றி ஓயாது தீர்மானிக்கும் வேலையில் இருந்து உலகம் விடுபட வேண்டும். விலகிவிட வேண்டும் தன்னைப் பற்றியே தீர்மானிக்கத் தகுதியற்ற மனிதன் பிறரைப் பற்றி எப்படி தீர்மானிக்க முடியும்.

ஒரு பெண்ணை அழகு என்கிறோம். இன்னொரு பெண்ணை அசிங்கம் என்கிறோம். இப்படிச் சொல்ல நாம் யார். ஒன்றை மிக உயர்வானது என்று புகழ்கிறோம். மற்றொன்றை மகா மட்டம் என்று இகழ்கிறோம். இப்படிச் செய்ய நமக்கு என்ன உரிமை இருக்கிறது. இப்படிப்பட்ட நமது தீர்ப்புகளின் மூலம் கடவுளின் படைப்பை ஓயாமல் களங்கப்படுத்திக் கொண்டே இருக்கிறோம்.

உண்மையை உடைத்துச் சொல்லட்டுமா? பலமுறை நாம் பார்த்த பெண், நேற்று வரை நமக்கு அழகாகத் தெரியாத பெண் இன்று திடீர் என்று அழகாகத் தெரிகிறாள் என்றால் அதற்கு அவள் அழகு காரணமல்ல. இப்போது நம் மனம் அவளை விரும்புவதால்தான் அவள் அழகாகவே தெரிகிறாள் என்பதை உணர வேண்டும். நம் மனம் தான் அழகை அவள் மீது ஏற்றுகிறது. நாம் அழகானவர்களை விரும்புவதாகச் சொல்வது பொய். யாரை விரும்புகிறோமோ அவர்களை அழகானவர்களாகக் காண்கிறோம்.

எப்போதுமே நாம் நேசிக்கிறவர்கள் அழகாகத் தெரிகிறார்கள் என்பது தான் உளவியல் உண்மை. பல சமயங்களில் பிறருக்கு அழகாகத் தெரியாதவர்கள் உங்களுக்கு மட்டுமே அழகாகத் தெரிகிறார்கள் என்பதை ஒரு நிமிடம் உணர்ந்து பாருங்கள். அப்போது இந்த உண்மை புரியும். சீனாவில் அழகாக இருப்பவள் ஆப்பிரிக்காவில் அசிங்கம். ஆப்பிரிக்காவில் அழகாக இருப்பவள் ஐரோப்பாவில் அசிங்கம். மனிதர்கள் தான் அழகு, அசிங்கம் என்று அவசர அவசரமான அபிப்பிராயங்களை வீசுகிறார்கள். அதன் மூலம்தானும் துன்பப்பட்டு பிறரையும் துன்புறுத்துகிறார்கள்.

சுகி. சிவம்

# வாசகர் திருமுகம்

## முல்லை மக்களின் தொழில் ரீதியான வேண்டுகோள்

முல்லைத்தீவு மக்களால் தொழில்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இக்காலத்தில் உழவு இயந்திரங்கள் மூலமும் பல தொழில்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இருப்பினும் முல்லை வாழ் தொழிலாளர்கள் முற்றுமுழுதாக மண் வியாபரத்தை நம்பியே லீசிங் முறையில் உழவு இயந்திரங்களைக் கொள்வனவு செய்துள்ளனர். இவ்வாறான வேளையில் எதிர்பாராமல் துரதிஷ்டமான சம்பவங்கள் அன்றாடம் நிகழ்கின்றன. அது யாராலும் கண்டுணரப்படுவதில்லை. இவ்வாறான சம்பவங்களைத் தடுத்து நிறுத்த முல்லைத்தீவு அரச அதிபர் நடவடிக்கை எடுக்கும்போதிலும் அது சில கையாள்களால் சாத்தியமற்றதாகவே போய்விடுகின்றது.

இது ஏன் இவ்வாறு நடைபெறுகின்றது. உதாரணமாகக் கூறினால் கருப்பட்ட முறிப்பு, மாங்குளம், கனகராயன்குளம், புளியங்குளம், பழைய முருகண்டி, புத்துவெட்டுவான் ஆகிய பிரதேசங்களில் ஒரு லோட் மண் யாட்டுக்கு 2 கிலோ மீற்றருக்கு 2000 ரூபாவாக உள்ளது. அதேநேரம் முள்ளியவளை, தண்ணீரூற்று, வற்றாப்பளை, முல்லைத்தீவு பிரதேசங்களில் யாட்டுக்கு 12 கிலோ மீற் றருக்கு 2000 ரூபாவாகவே இருக்கின்றது. ஏன் இந்தக் கொடூர நிலை?

மக்களின் வருமானத்தைத் தட்டிப்பறித்து சுரண்டுவது ஏன்? இந்த நிலையில் உண்மை நிலையை நோக்குகையில் முள்ளியவளை, தண்ணீரூற்று, வற்றாப்பளை பிரதேசங்களில் ஏறக்குறைய 200-250 உழவு இயந்திரங்கள் மண் வியாபாரத்தை நம்பியே தொழிலில் ஈடுபடுகின்றன. இந்த மக்களுக்காக வருகின்ற மண் அனுமதிகளை அரச அதிபர் யாட் உரிமையாளர்களுக்கு விற்கும் சம்பவங்களும் இடம்பெறுகின்றன ஏன்? முல்லைத்தீவு பிரதேசத்தில் யாட் உரிமையாளரும் அரச ஊழியராக இருக்கும் போதிலும் ஏன் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறவேண்டும்?

இந்த நிலையிலிருந்து மாற முடியாதோ? இதற்கு ஒரு முடிவு வாராதோ? இந்த நிலையை மாற்றியமைத்து சுதந்திரமாகத் தொழில் செய்யும் உரிமையைப் பெற்றுக் கொள்வதே ஒவ்வொரு தொழிலாளரதும் மன. ஆதங்கமாக இருக்கின்றது. நாட்டின் பிரச்சினையிலிருந்தும் இனப்பிரச்சினையிலிருந்தும் மக்களுக்குச் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்ததாகக் கூறும் ஜனாதிபதி எமது இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுத் தருவாரா?

முல்லை மக்கள்.

## மற்றவர்களையும் மனிதர்களாக நினைத்துப் பாருங்கள்

ஆசிரிய இடமாற்றம் என்பது மாகாணத்தில், வலயத்தில் உள்ள மேலதிகாரிகளின் இஷ்டம் போலச் செய்யும் போக்காகி விட்டது. யாழ். மாவட்டத்தில் நியமனம்பெற்ற ஆசிரியர்களுக்கு மட்டும் 2 வருடங்கள் வெளி மாவட்டம் செய்தால் போதும் என்னும் போது, வெளி மாவட்டத்தில் நியமனம் பெற்ற ஆசிரியர்கள் தமது நியமனக் கடிதத்தின்படி 5 வருடங்கள் அல்லது 4 வருடங்களும் மிகுதி மாதக்கணக்கில் உள்ளபோதும் இந்த ஆசிரியர்களுக்கு மட்டும் நாள் கணக்கு, மாதக் கணக்கு, பார்த்து அவர்களது வதி விட மாவட்டங்களுக்கு மாற்றுவதற்கு உரிய வலயங்கள் மறுக்கின்றன. அது மட்டுமன்றி இப்பொழுது வேறு ஒரு புதுச் சட்டமும் முன் வைத்துள்ளது. ஏ-9 வீதியில் உள்ள பாடசாலை ஆசிரியர்களுக்கு 6 வருடம் பூர்த்தியாக்க வேண்டுமாம். இது மிகவும் வேதனைக்குரிய விடயம். இந்த ஆசிரியர்கள் ஏ-9 பாடசாலைக்கு குறித்த மாகாணத்தினால் 5 வருடங்கள் சேவையாற்ற வேண்டும் என நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த வருடம் இந்த நிபந்தனையே பின்பற்றப்பட்டது. ஆனால் இந்த வருடம் புது நடைமுறை ஏன்? ஏ-9 பாதையில் உள்ள பாடசாலை என்றால் மட்டும் அந்த ஆசிரியர்களுக்கு அவர்களது குடும்பக் கஷ்டங்கள், வேலைகள், சுமைகள் என்று இல்லையா? ஏன் இவ்வாறு குறிப்பாக வெளி மாவட்ட ஆசிரியர்களை இடமாற்றம் எனும் ஆயுதத்தால் பழிவாங்குகிறார்கள், பாவப்பட்ட ஜென்மங்களா? இத்தகைய செயல்களால் 'ஆசிரியத்துவம்' என்ற மகத்துவ தொழிலையே வெறுக்கும் நிலைக்குட்படுகின்றனர். மேலிடத்தில் இருக்கும் மேலதிகாரிகளே! உங்களைப் போல் மற்றவர்களையும் மனிதர்களாக நினைத்துக்கொள்ளுங்கள்.

பாதிக்கப்பட்ட ஆசிரியர்.

## பஸ் தரிப்பிடம் நிறுவப்பட வேண்டும்

நெடுந்தீவு மத்தி புனித யாகப்பர் தேவாலயத்துக்குப் போகும் நெடுந்தீவு மத்தி, மேற்கு பிரதான வீதி முச்சந்தியில், ஓர் பஸ் தரிப்பிடம் நிறுவப்பட வேண்டும் என்பதில் நெடுந்தீவு மக்கள் மிகவும் ஆவலாக இருக்கிறார்கள்.

வெயில் நேரங்களில் பூவரசு மரம், புளி மர நிழல்களில் பஸ்களின் வருகைக்காக காத்திருக்கும் பயணிகள் மழை நேரங்களில் அருகில் உள்ள வீடுகளில் இருந்து கொண்டு கல் வேலிகளால் எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருக்கும் நிலைமைகளும் இங்கு உண்டு. சில சமயங்களில் பஸ் நிறுத்தாது போனால் யாழ்.செல்ல இருக்கும் பிரயாணி கள் ஏமாற்றத்துடன் வீடு நோக்கித் திரும்பும் நிலையும் உண்டு.எனவே இது விடயமாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டால் மிகவும் நன்மை கிடைக்கும்.

ஜி.எஸ்.டானியல், நெடுந்தீவு.

## கவனிப்பார்களா நடாளுமன்ற உறுப்பினர்கள்

யாழ். மாவட்டத்தில் இந்திய அரசின் நிதியுதவியுடன் 5,250 வீடுகளை புதிதாக அமைப்பதற்குப் பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்தப் பயனாளிகளைத் தெரிவுசெய்வதற்குப் பல்வேறு நிபந்தனைகளை அரச அதிபர் விதித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. போராலும் 2004ஆம் ஆண்டு டிசம்பர் 26 இல் ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தாலும் வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவு முற்றாகவே அழிவடைந்திருந்தது.

சுனாமிக்குப் பின் சேதங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு சேத மதிப்பீட்டுப் படிவம் வழங்கப்பட்டுள்ளது. கடற்கரையிலிருந்து 500 மீற்றர் பிரதேசம் மீள்குடியமரத் தடைசெய்யப்பட்டுள்ளது. 500 மீற்றருக்கு அப்பால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தலா 2 பரப்பு அரச காணிக்கு உத்தரவுப் பத்திரமும் வழங்கப்பட்டது.

வடமராட்சி கிழக்கு முழுவதும் பல்வேறு தன்னார்வத் தொண்டர் நிறுவனங்களால் வீடமைப்புத் திட்டம் தொடங்கப்பட்டு சில வீடுகள் முடியும் தறுவாயில் இருந்தன.

2006ஆம் ஆண்டு ஓகஸ்டில் ஏற்பட்ட யுத்த அனர்த்தம் காரணமாக பத்துக் கிராம சேவையாளர் பிரிவில் உள்ள மக்கள் கிராமங்களை விட்டு வெளியேறினர்.

2010 ஆம் ஆண்டு இந்த மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டனர். கட்டிய வீடுகள் அனைத்தும் சேதமடைந்துள்ளன. தற்போது வீட்டுத் திட்டம் ஆரம்பிக்கப்படும் போது பல்வேறு நிபந்தனைகளை விதிப்பது எந்தளவு நியாயமானதாகும்? குடத்தனைக் கிராம அலுவலர் பிரிவில் வலிக்கண்டி என்ற கிராமத்தில் எந்த நிபந்தனைகளும் இல்லாமலேயே வீடுகள் வழங்கப்பட்டன.

மாமுனை, செம்பியன்பற்று தெற்கு தாழையடி போன்ற கிராமங்களில் வீட்டுத் திட்டத்துக்குப் பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்ட போது மேற்படி எந்த நிபந்தனைகளும் விதிக்கப்படவில்லை. ஓர் உதவி அரச அதிபர் பிரிவில் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் ஒவ்வொரு நடைமுறை பின்பற்றப்படுவது ஏற்க முடியாததாகும்.

அனைவருக்கும் எந்தவித நிபந்தனைகளுமின்றி வீடுகள் கிடைக்க உரிய அதிகாரிகளிடம் பேசி ஆவன செய்வார்களா நாடாளுமன்ற உறுப்பினர்கள்.

வடமராட்சி கிழக்கு மக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
29 ஒக்ரோபர் 2011 சனிக்கிழமை

# சட்டவிரோத கட்டடங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை

## கடலோர பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் கூறுகின்றார்


கொழும்பு, ஒக். 29

கடற்கரை பரப்பில் சட்ட விரோதமாக நிர்மாணிக்கப்பட்டுள்ள 1029 கட்டடங்களும், வீடுகளும் உடைத்து அப்புறப் படுத்தப்படவுள்ளன என்று கடலோர பாதுகாப்புத் திணைக் களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி அணில் பிரேமரத்ன தெரிவித்துள்ளார்.

முதற்கட்டமாக இத்தகைய 300 கட்டடங்களும் வீடுகளும் அப்புறப்படுத்தப்படும் எனவும் இவை சிற்றுண்டிச்சாலைகள், தங்கும் விடுதிகள், சிறிய அளவிலான ஹோட்டல்கள் போல் செயற்படுபவை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடலில் இருந்து 10 மீற்றர் தூரத்துக்குள் நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டடங்களும் வீடுகளும் உடைக்கப்படும். இத்தகைய சட்டவிரோதக் கட்டடங்களும் வீடுகளும் 1981 ஆம் ஆண்டுகளுக்குப் பின் கட்டப்பட்டவை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் கடலோரப் பாதுகாப்புக்கு பாதகம் விளைவிக்கக்கூடிய எந்தவித நிர் மாணத்துக்கும் அனுமதி வழங்கப்படமாட்டது எனவும் கடலில் இருந்து 300 மீற்றர் தூரம் கடலோரப் பாதுகாப்பு வலயமாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-5)



புத்தூர் வளர்மதி முன்பள்ளிச் சிறார்களின் வருடாந்த விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலையின் அதிபர் இ.கோகுலராஜன் சிறுமிக்கு பரிசில் வழங்குகின்றார். (11)

## புதிய பொலிஸ் வாகனங்களில் பிரத்தியேகப் பயணத்துக்குத் தடை

கொழும்பு, ஒக். 29

பொலிஸ் பொறுப்பதிகாரிகளுக்குப் புதிதாக வழங்கப்பட்ட ஜீப்களில் பிரத்தியேகப் பிரயாணம் செல்வதற்கும், குறிப்பிட்ட பொலிஸ் வலயத்தைவிட்டு வெளியிடங்களுக்குச் செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பொதுமக்களின் சேவைக்கென வழங்கப்பட்டுள்ள இந்த வாகனங்களைப் பிரத்தியேகப் பாவனைக்கு பயன்படுத்த முடியாதென்று பொலிஸ்மா அதிபர் பிராந்திய பிரதிப்பொலிஸ்மா அதிபர்கள் மூலம் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் சுற்று நிருபமொன்றின் மூலம் அறிவித்துள்ளார். (ச-5)

## அஞ்சல் தின நிகழ்வுகள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 29

எதிர்வரும் ஆறாம் திகதி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற இருந்த சர்வதேச அஞ்சல் தின நிகழ்வுகள் அன்றைய தினம் நடைபெறமாட்டா என்று யாழ். பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.ஜெபரெட்ணம் தெரிவித்துள்ளார்.

இந்த சர்வதேச அஞ்சல் தின நிகழ்வுகள் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

அன்றைய தினம் பொது விடுமுறை மற்றும் வெசாக் பெருநாள் விடுமுறை என்பதால் இந்த நிகழ்வு பிற்போடப்பட் டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ச-26)

## மதுபோதையில் வாகனம் செலுத்தியவருக்கு அபராதம்

தென்மராட்சி,ஒக். 29

மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய சாவகச்சேரி வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 6 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. சாவகச்சேரிப் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த நீதிவான் எதிரிக்கு 6 ஆயிரம் ரூபா அப ராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் மூன்று மாத சாதா ரண சிறைத் தண்டனை அனு பவிக்குமாறு உத்தரவிட்டார்.(த-207)

## அனுமதிப் பத்திரமின்றி தீராந்தி ஏற்றி வந்தவருக்கு அபராதம்

தென்மராட்சி,ஒக். 29

அனுமதிப் பத்திரமின்றி வேப்ப மர தீராந்திகள் ஏற்றி வந்த வாகனச் சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸார் சங்கானை வாசிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கடந்த 27 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

சாரதி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்த நீதிவான் மா.கணேசராஜா அபராதத் தொகை செலுத்தத் தவறின் ஆறு மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். (த-207)


### 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் ராஜேந்திரன் விஜிதரன்
(சதீஸ்)

அன்பின் சுடராய்
அருளின் இருப்பிடமாய்
எம் உள்ளத்தில் வீற்றிருக்கும்
அன்பு மகனே
ஆண்டுகள் நான்கு ஆனாலும்
மாறாது எம்துயர்
அண்ணா என்ற குமுறலுடன்
இங்கு உன் உடன் பிறப்புக்கள்
ஐயா ஏழேழு ஜென்மம்
ஆனாலும் மாறாது எம் துயர்

அன்னையின் மடியில்:
26.10.1987
ஆண்டவன் மடியில்:
29.10.2007

என்றும் உம் நினைவுடன் குடும்பத்தினர்
தேவிபுரம் (ஆ) பகுதி, புதுக்குடியிருப்பு.

### 2ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
26.04.1947
மறைவு
20.10.2009
திதி :29.10.2011
பூர்வபக்க
திருதியை

அமரர்
சரவணமுத்து பாக்கியவதி

உறவுகளில் உயிர்ப்பாகி
உணர்வுகளில் உறைந்திருக்கும்
அன்புத் தாயே
நெஞ்சம் நெக்குருக
நினைந்து வாழ்கின்றோம்.

தெணியகம்,
பொலிகண்டி. T.P - 0776219225
குடும்பத்தினர்.

### பிளாஸ்ரிக் வார்ப்புத் தொழிலகம்

ஸ்பிறே பெயின்ரிங், பிளேற்றிங் (மொப்பிங்), கண்ணாடி வகைகள்-பொலிசிங், பைவர் மோல்டிங் என்பன நவீன தொழில் நுட்ப முறைமூலம் செய்து கொடுக்கப்படும்.

வரலட்சுமி பிளாஸ்ரிக்
வார்ப்புத் தொழிலகம்
இல.286/2, அரசடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
Tel:0773512591

### காணி விற்பனைக்கு

சுண்டிக்குழி, விதானையார் வீதியில் சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கும்,பரியோவான் கல்லூரிக்கும் (St Johns College)அண்மையில் 3 பரப்பும் 1 ½ குளி விஸ்தீரணமுடைய காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு:0774951662

### விற்பனைக்கு

56 அச்சுக்கூட லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவிலில் மேல்மாடி வீடு மற்றும் கச்சாய் வெளிப்பிள்ளையார் கோயில் அருகில் 6 ஏக்கர் தென்னங் காணி மற்றும் புலோப்பளை பிரதான வீதிக்கு அருகில் 5 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0779592051

### காணி விற்பனைக்கு/வாடகைக்கு

குப்பிளான் வடக்கு, கேணியடி வைரவர் கோயிலடியில் உள்ள 4 பரப்புக் காணியுடன் சேர்ந்த வீடு உடன் விற்பனைக்கு அல்லது வாடகைக்கு

திருமதி. Y. விஜய்
தொடர்புகளுக்கு:- 0776636469

### ஒத்துமாறல்

மத்திய மாகாணத்தில் நாவலப்பிட்டி நகரப் பாடசாலையில் ஆரம்பக் கல்வி [illegible] கிறார். தொடர்புகளுக்கு:0718126591

### i-Spoken English (3 M)

நீங்கள் ஏற்கனவே நன்கு அறிந்த கே.யு வின் சிறப்பு பயிற்சி நெறி. தனிப்பட்ட விசேட நவீன கல்வி முறையில்.... IELTS

Knowledge Universe
Professional Education by Graduate Professionals
No 75,Temple Road,Jaffna.
www.kugroup.info
K.U Education -"Practical and Result Oriented." Tel:0776458253

### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்:
06.07.1940





மறைவு:
30.09.2011

கடந்த 30.09.2011 அன்று இறைபதமடைந்த மயிலிட்டி தெற்கு, கட்டுவனைப் பிறப்பிடமாகவும், முல்லைத்தீவு, உணப்புலவை வசிப்பிடமாகவும் கொண்ட எமது குடும்பத்தலைவர்

அமரர் சின்னத்துரை சிவநேசன்

அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய கிரியைகள் 30.10.2011 ஞாயிற்றுக்கிழமை வவுனியா வைத்தியர் விடுதியில் (No.3A) நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அன்றைய தினம் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

No.3A, வைத்தியர் விடுதி,
பொது வைத்தியசாலை, வவுனியா.
T.P: 0776635959

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், சகோதரர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜீவ் கொலைக் குற்றவாளிகளின் வழக்கு விசாரணை நவம்பர் 29 இற்கு ஒத்தி வைப்பு



சென்னை, ஒக்.29

ராஜீவ் கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகிய மூவர் தங் களது தண்டனையை ரத்து செய்யக் கோரி தாக்கல் செய்த மனு மீதான விசாரணையை அடுத்த மாதம் 29 ஆம் திக திக்கு ஒத்திவைத்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட வழக்கில் 3 பேருக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனை தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை அடுத்த மாதம் 29 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

அதுவரை 3 பேரின் தூக்குத் தண்டனைக்கும் விதிக்கப்பட்டுள்ள தடை தொடரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதனிடையே தண்டனையை ரத்து செய்யக் கோரி 3 பேர் சார்பிலும் தாக்கல் செய்யப்பட்ட கருணை மனுக்களுக்கு மத்திய அரசு கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

ராஜீவ்காந்தி கொலை கைதிகளுக்கு மரண தண்டனை அளிக்க தடை கேட்டு தொடரப்பட்ட வழக்கு நேற்று சென்னை உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. இந்த வழக்கில் முருகன், சாந்தன், பேறறிவாளன் ஆகியோருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. அதை உச்ச நீதிமன்றம் உறுதி செய்தது. மரண தண்டனையை ரத்து செய்யக் கோரி ஜனாதிபதியிடம் முருகன் உட்பட 3 பேரும் 2000 ஆம் ஆண்டில் கருணைமனு கொடுத்தனர். இந்த கருணை மனு 2011 ஆம் ஆண்டு ஜனாதிபதியால் நிராகரிக்கப்பட்டது.

இதையடுத்து சென்னை உயர் நீதிமன்றத்தில் 3 பேரும் தனித் தனியாக மனுக்கள் தாக்கல் செய்தனர். அதில், "11 ஆண்டுகள் கால தாமதமாக கருணை மனுவை ஜனாதிபதி நிராகரித்துள்ளார். நாங்கள் 20 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் அடைக்கப்பட்டு இருக்கிறோம். ஆயுள் தண்டனையையும் தாண்டி சிறையில் இருப்பதால் எங்களுக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை ரத்து செய்ய வேண்டும்" என்று கூறியிருந்தனர்.

கடந்த மாதம் இந்த மனுவை உயர் நீதிமன்ற நீதிபதிகள் சி.நாகப்பன், எம்.சத்ய நாராயணன் ஆகியோர் விசாரித்தனர். 3 பேருக்கும் மரண தண்டனையை நிறைவேற்ற இடைக்காலத் தடை விதித்து நீதிபதிகள் உத்தரவிட்டனர். மேலும், இவர்களது மனுக்களுக்கு பதிலளிக்கும்படி மத்திய, மாநில அரசுகளுக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டனர்.

இந்தநிலையில் மத்திய அரசு சார்பில் உயர்நீதிமன்றத்தில் பதில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது, அந்த மனுவில் மூன்று பேரின் கருணை மனுவை இந்திய ஜனாதிபதி ஏற்கனவே நிராகரித்து விட்டார். கருணை மனு நிராகரிக்கப்பட்ட பின் தூக்கில் போடுவது தான் சரியான நடைமுறை.

ஆகவே இவர்களின் தூக்கு தண்டனையை உடனே நிறைவேற்ற வேண்டும் என கூறியிருந்தனர். உச்சநீதிமன்றத்தில் இவ்வழக்கு நிலுவையில் இருப்பதால் வழக்கை ஒத்தி வைக்க வேண்டும் எனவும் கோரிக்கை வைத்தனர். சட்டத்தரணிகளின் கோரிக்கையை ஏற்று இந்த வழக்கை அடுத்த மாதம் 29ஆம் தேதிக்கு சென்னை உயர் நீதிமன்றம் ஒத்திவைத்தது. (வ)

## நடிகை மனோரமா வைத்தியசாலையில்



பிரபல நடிகை மனோரமா சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முழங்கால் வலி காரணமாக முன்பு சத்திர சிகிச்சை செய்து கொண்டார். அதன்பின்னர் அவர் சினிமாவில் நடிக்கவில்லை.

வீட்டிலேயே ஓய்வு எடுத்து வந்தார். இந்தநிலையில் நேற்று முன்தினம் அவர் குளியலறைக்குச் சென்றபோது வழுக்கி விழுந்தார். அதில் அவருடைய தலையில் பலத்த அடிபட்டது. உடனடியாக அவர் சென்னையில் உள்ள ஒரு தனியார் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஆஸ்பத்திரியில் அவ்ருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. (வ)

# மூவரின் கருணை மனுவை பரிசீலனை செய்ய வேண்டும்

## வைகோ வேண்டுகோள்



இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகிய மூவரின் கருணை மனுவை பரிசீலிக்க வேண்டும் என்று ம.தி.மு.க. செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

சென்னை உயர்நீதிமன்றத்தில் நேற்று நடந்த வழக்கு விசாரணையின் போது ராஜீவ் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட 3 பேரில் ஒருவரான பேரறிவாளன் சார்பில் வைகோ ஆஜரானார்.

பின்னர் வெளியே வந்த வைகோ செய்தியாளர்களிடம் கூறுகையில்:

முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோரின் கருணை மனுவை மீள்பரிசீலனை செய்ய வேண்டும். அவர்கள் விடுதலை செய்யபடவேண்டும்.

தமிழக அமைச்சரவை 3 பேரின் தூக்கு தண்ட னையை ரத்து செய்யக் கோரி தீர்மானம் நிறைவேற்றிட வேண்டும். அரசியலமைப்பு சட்டம் பிரிவு 161-ஐ பயன்படுத்தி ஆளுநருக்கு பரிந்துரை செய்வதன் மூலம் இந்த 3 பேரின் தூக்கு தண்டனையை ரத்து செய்ய முடியும்.

மத்திய அரசு அனுப்பிய சுற்றறிக்கை சட்டப்பூர்வமானது அல்ல. அதை மீறி முடிவு எடுக்கும் அதிகாரம் தமிழக அரசுக்கு உள்ளது. இந்த 3 பேரின் கருணை மனுவை மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் - என்றார் அவர். (வ)



பா.ஜ., சார்பில் மதுரையில் நடந்த மக்கள் விழிப்புணர்வு யாத்திரை பொதுக்கூட்டத்தில், மூத்த தலைவர் எல்.கே.அத்வானிக்கு, நகர் தலைவர் ராஜரத்தினம் வீரவாள் வழங்கினார். இடமிருந்து, மாநில செயலாளர் சுரேந்திரன், மாநில தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன், அகில இந்திய நிர்வாகி ரவிசங்கர் பிரசாத் ஆகியோர் நிற்கின்றனர்.

## இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறிய பாகிஸ்தானியர்கள் கைது

இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி படகில் நுழைந்த ஆறு பாகிஸ்தானியர்கள் கைது செய்யப்பட்டனர். இந்திய கடல் எல்லையில் இந்திய கடலோர காவல்படையினர் ரோந்துப் பணியில் ஈடுபட்டனர்.

அப்போது இந்திய கடல் எல்லைக்குள் ஆறு பாகிஸ்தானியர்கள் அல்- ஹசன் என்ற படகில் நுழைந்தனர். அந்த ஆறு பேரையும் கைது செய்த இந்திய கடலோர காவல் படையினர் படகை பறிமுதல் செய்தனர். அந்த ஆறு பேரும் ஓஹா பகுதியில் உள்ள பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு பின்னர் பூஜ் என்ற பகுதியில் உள்ள கூட்டு விசாரணை மையத்துக்கு கொண்டு செல்லப்படவுள்ளனர். (வ)

# அத்வானியின் ரத யாத்திரை செல்லும் பாதையில் குண்டு!

மதுரை, ஒக்.29

மதுரை திருமங்களம் அருகே அத்வானி யாத்திரை பாதையில் வெடிகுண்டு மீட்கப்பட்டுள்ளது. பா.ஜ.க. மூத்த தலைவர் அத்வானி ரதயாத்திரை செய்து வருகிறார். நேற்று முன்தினம் மதுரை வந்த அத்வானி, பொதுக்கூட்டத்தில் பேசினார்.

நேற்று முன்தினம் காலை மதுரையில் இருந்து புறப்பட்டு விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையத்தில் பிரசாரத்தை முடித்துக் கொண்டு, மதிய உணவுக்கு நெல்லை மாவட்டம் தரணி சுகர் ஆலை விருந்தினர் விடுதிக்குச் செல்கிறார்.

பின்னர், அங்கிருந்து புறப்பட்டு புளியங் குடியில் 2.30 மணி அளவில், கடையநல்லூர், தென்காசி, செங்கோட்டை ஆகிய இடங்களில் பிரசாரத்தை முடித்துக்கொண்டு, ஐந்து மணிக்கு மேல் தமிழக பாடரான குளியறை வழியாக கேரளாவுக்குள் செல்லும் அத்வானி ஆரியங்காவூர், குளத்துப்புழா, நெடுமங்காடு, வழியாக திருவனந்தபுரம் செல்கிறார்.

இந்தநிலையில், ஆலப்பட்டி தரைப்பாலத்தில் இருந்து 8 அடி நீள குழாய் வெடிகுண்டு கண்டெடுக்கப்பட்டுள்ளது. வெடிகுண்டு வைத்திருந்த பாலம் வழியாகத்தான் அத்வானி யாத்திரை மேற்கொள்கிறார். (வ)

## சாதிக் பாட்சா மரணம் நீடிக்கிறது மர்மம்

முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.ராசாவின் நண்பர் சாதிக் பாட்சாவின் மரணத்தில் இன்னும் மர்மம் விலகவில்லை. அவர் கொலை செய்யப்பட்டார் என்பதை உறுதிப்படுத்த எந்த ஆதாரங்களும் இல்லை என்று சி.பி.ஐ. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எனினும் சாதிக் பாட்சா கொலை செய்யப் படவில்லை என்பதை முற்றிலும் உறுதிப் படுத்துவதற்காக, 'எய்ம்ஸ்' வைத்தியசாலை டாக்டர்கள் குழுவின் உதவியை சி.பி.ஐ. நாடியுள்ளது. அவர் தற்கொலை செய்து கொண்டிருக்கலாமோ என்ற கண்ணோட்டத்துக்கும் தற்போது சி.பி.ஐ. முக்கியத்துவம் அளித்து வருகிறது.

ஏனென்றால், சந்தர்ப்ப சாட்சியங்கள், அவர் தற்கொலை செய்து கொண்டதை உறுதிப்படுத்துவது போல இருப்பதால், அந்த கோணத்தில் சி.பி.ஐ. பார்வை செல்லத் தொடங்கி உள்ளது. (வ)

# வாழ்நாள் சாதனையாளர் விருதை ஜேசுதாசுக்கு வழங்க கேரளா மறுப்பு



பாடகர் கே.ஜே.ஜேசுதாசுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்க வேண்டும் என்று காங்கிரஸ் சட்ட பேரவை உறுப்பினர் விடுத்த வேண்டுகோளை கேரள அரசு நிராகரித்தது.

அவர் பாடகராக 50 ஆண்டுகளை அவர் நிறைவு செய்யும் போது தான் வழங்க முடியும் என்று அரசு கூறியிருப்பது ரசிகர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

பிரபல பாடகர் கே.ஜே.ஜேசுதாஸ் 1962 ஆம் ஆண்டு திரையுலகில் பாடகராக அடியெடுத்து வைத்தார். அவர் திரையுலக்கு நுழைந்து 50 வருடம் ஆவதையொட்டி வாழ்நாள் சாதனை விருது வழங்கிக் கௌரவிக்க வேண்டும் என்று கேரள சட்டசபையில் காங்கிரஸ் சட்டப்பேரவை உறுப்பினர் ஹிபி ஈடன் கோரிக்கை வைத்தார். அவரது கோரிக்கையை கலாசார துறை அமைச்சர் கே.சி.ஜோசப் நிராகரித்தார். அரசு சட்ட விதிப்படி தனிப்பட்ட யாருக்கும் சிறப்பு பட்டம் தர இயலாது. அதனால் அவரை கௌரவிக்க வாய்ப்பில்லை. ஆனால் அவர் தொழில் ரீதியிலான பாடகராக 50 ஆண்டு நிறைவு செய்யும் போது வாழ்நாள் சாதனை விருது வழங்குவது குறித்து அரசு பரிசீலிக்கும். அதுவரை அவர் காத்திருக்க வேண்டும் என்று அமைச்சர் தெரிவித்தார். இது அவரது ரசிகர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வூதிய திருத்தச் சட்டமூலம் நடைமுறையில் சுற்று நிருபத்தை வெளியிட்டது திணைக்களம்

2010 ஆம் ஆண்டின் இலக்கம் 08ஐக் கொண்ட விதவைகள் மற்றும் அநாதைகள் நிதியத் திருத்தச் சட்டம் மற்றும் 2010 ஆம் ஆண்டின் இலக்கம் 09 ஐக் கொண்ட தபு தாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திருத்தச் சட்டம் என்பன கடந்த ஒகஸ்ட் 17ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வந்திருப்பதாக ஓய்வூதியத் திணைக்களம் அறிவித்திருக்கிறது.

இதன்படி திருத்தச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கடந்த ஒகஸ்ட் 17 ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வூதியம் தொடர்பான விடயங்களை எதிர்வரும் டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் உரிமை கோரலாமென் றும் ஓய்வூதியத் திணைக் களம் சுட்டிக் காட்டியுள்ளது.

ஓய்வூதியத் திணைக்களம் இது தொடர்பான சுற்று நிருபத்தை அனைத்து அமைச்சுகளின் செயலாளர்கள், மாகாணசபை பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், முப்படைத் தளபதிகள், ஆகியோருக்கும் அனுப்பி வைத்துள்ளது.

இதன் பிரகாரம், பயங்கரவாதக் காரணங்கள் மற்றும் இலங்கை அனர்த்தங்களால் உயிரிழக்கின்ற, உரித்துகளுடைய அரச அலுவலர்களுக்காக வேண்டி இறுதியாக வழங்கப்பட்ட சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு விதவைகள்/ தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியம் திருத்தி அமைக்கப் பட்டுள்ளது.

அதேபோல், அமைய மற்றும் தற்காலிக பதவிதாரிகள், பயங்கரவாத காரணங்கள் மற்றும் இயற்கை அனர்த்தங்களின் மூலம் உயிரிழக்கையில் துணைவர்களுக்கு மற்றும் அநாதைப் பிள்ளைகளுக்கு விதவைகள் தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய உரிமம் பெற்றுக் கொடுக்கப்படும்.

அத்துடன், ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் உப அட்டவணையில் திடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள ஓய்வூதிய உரித்துள்ள அதிகாரிகளின் துணைவர்களுக்கு விதவைகள் / தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியம் வழங்கப் படவுள்ளது.

மேலும் 26 வயதுக்குக் குறைந்த அநாதைப் பிள்ளைகளுக்கு (ஆண்/ பெண் இருபாலர்) விவாகத்தைக் கருத்திற்கொள்ளாது அநாதைகள் ஓய்வூதியம் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளது.

பதவி வழக்கொழிதல் மூலம் ஓய்வு பெறச் செய்யப்பட்ட அலுவலர்கள் 55 வயது வரை செய்துகொண்ட விவாகங்களை அடிப்படையாகக் கொண்டு விதவைகள்/ தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய உரிமையும் பெற்றுக் கொடுக்கப்படும்.

அதேபோல், நிரந்தர ஓய்வூதிய உரித்துடைய 10 வருடங்களுக்கு மேற்பட்ட சேவைக் காலத்தைப் பூரணப் படுத்தி இருப்பினும், ஓய்வூதிய உரிமையை இழக்கும் அலுவலர்களுக்கு விதவைகள்/ தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய உரித்து கிடைக்கும்.

அத்துடன், மீள் விவாகம் செய்து கொள்ளும் விதவைகள் மற்றும் தபுதாரர்களுக்கு விதவைகள்/ தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத்தின் 50 சதவீதத்தை (சரிபாதி)வழங்கவும் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

17.08.2010 ஆம் திகதிக்கு முன்னரான குறித்த விடயங்கள் தொடர்பாக உரிமை கோரும் நபர்கள் தமது எழுத்து மூலமான வேண்டுகோள்களை 31.12. 2011 ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வூதியத் திணைக்களத்திடம் அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேற்படி திகதியின் பின்னர் இடம் பெறுகின்ற குறித்த நிகழ்வுகள் தொடர்பாகக் கோவைகளைத் தயாரிக்கையில் மற்றும் அனுகூலங்களை உரித்தாக்குகையில், நிறுவனத் தலைவர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய செயற்படுதல் வேண்டும்.

அனுகூலங்களை உரித்தாக்குகையில், பின்பற்றப்படவேண்டிய செயற்பாடுகள் பற்றிய அறிவுறுத்தல்கள் இணைப்பு(1) என பிரதேச செயலாளர்களிடம் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படுமென்று ஓய்வூதியத் திணைக்களம் விடுத்துள்ள சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## குடி தண்ணீர் திட்டங்கள் குறித்து விளக்கமளிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.29

வவுனியாவில் இடம்பெறும் உள்ளூராட்சி மகாநாடு மற்றும் கண் காட்சியில் இரண்டு பெரிய குடி தண்ணீர்த் திட்டம் தொடர்பாக விவரணப் படமூலமும் விளக்கப்படவுள்ளது.

தேசிய நீர்வழங்கல் சபையின் யாழ்-கிளிநொச்சி குடிதண்ணீர் விநியோக திட்டப் பணிப்பாளர் எந்திரி தி.பாரதிதாசன் தலைமையிலான குழு இதில் பங்கேற்கவுள்ளது. இதில் கிளிநொச்சி இரணைமடு குளத்தில் இருந்து யாழ்.குடாநாட்டுக்குக் குடிதண்ணீர் கொண்டு வருவது தொடர்பாக விளக்கப்படவுள்ளது. அத்துடன் கரைச்சி, சண்டிலிப்பாய், நெடுந்தீவு ஆகிய பிரதேசங்களுக்கான கிராம சமூக குடிதண்ணீர் விநியோக திட்டம் குறித்தும் விளக்கப்படவுள்ளது. நாளை தொடக்கம் மூன்று தினங்களிலும் இந்தக் கண்காட்சி இடம் பெறும்போது இந்தத்திட்டம் குறித்து திட்டப்பொறியியலாளர் தலைமையிலான குழு செயற்படும் என்று எந்திரி தி.பாரதிதாசன் தெரிவித்தார். (ம-302)

## ஹஜ் பெருநாளிலாவது ரிஷானாவை விடுவியுங்கள்! உருக்கமாகக் கோருகிறார் ரஞ்சன் ராமநாயக்க எம்.பி.

கருணை உள்ளம் கொண்டதாக மார்தட்டிக்கொள்ளும் அரசு, எதிர்வரும் ஹஜ் பெருநாளை முன்னிட்டாவது சவூதி அரேபியாவில் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள மாணவி ரிஷானாவை விடுவித்து அழைத்துவர நடவடிக்கை எடுக்கவேண்டும் அல்லது இந்த வருடத்திற்குள் அவரை விடுவிக்க நடவடிக்கை ,எடுக்க வேண்டும்.

- இவ்வாறு அரசிடம் அழுத்தமான கோரிக்கையை விடுத்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க.

1982ஆம்ஆண்டு பிறந்த ரிஷானா நபீக் என்ற பாடசாலை மாணவியின் வயதை மாற்றி திருட்டுத்தனமாக சவூதி அரேபியாவுக்கு அனுப்பி வைத்த மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலானஇலங்கை அரசு இப்போது திருட்டுத்தனம் அம்பலமாகிவிட்டமையால் தடுமாற்றமடைந்து மாற்றுக் கருத்துகளை வெளியிட்டுவருகிறது.

உண்மையில் சர்யா சட்டத்தின் படி ரிஷானா நபீக்கிற்கு மரணதண்டனை விதிக்கப் படவில்லை. இந்தச் சட்டத்தின்படி இவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதாக அரசு கதை பரப்பியிருக்கிறது.

ரிஷானா நபீக்கிற்கு மரணதண்டனை விதிக்கப் பட்டு ஆறரை வருடங்களாகின்றன. அண்மையில் நாடாளுமன்றில் நான் [illegible] கேள்வி எழுப்பியபோதே தூக்கத்திலிருந்து துள்ளி எழுந்தவரைப் போல நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ''விரைந்து நடவடிக்கை எடுப்போம்; சவூதி அரேபியாவுக்குச் சென்றே பேசுவோம்'' - என்றார். ஆனால், இன்றுவரை எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.


### கண்ணீர் அஞ்சலி



தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன்
அவர்களின் அன்புத் தந்தை
வைரமுத்து குலவீரசிங்கம்
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்வதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பாடசாலை சமூகம்,
யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்.



### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
28 ★ 09 ★ 1940



மறைவு
29 ★ 09 ★ 2011

அமரர் வீரகத்தி நாகமுத்து
(திருநிறைவு)

அன்பாலும் பண்பாலும் எம் எல்லோரையும்
அரவணைத்த எம் அன்புத் தெய்வமே!
மீளாத்துயில் கொண்ட போதிலும்
உங்கள் நினைவுகள் எங்கள் நினைவில் அகலவில்லை

கடந்த 29.09.2011 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று 29.10.2011 சனிக்கிழமை மு.ப . 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சண்டிலிப்பாய் மத்தி, சண்டிலிப்பாய். — குடும்பத்தினர்.



# IELTS

BRITISH COUNCIL

## IELTS FOR UK STUDENT VISA APPLICANTS

### What is IELTS?

IELTS is the international English Language Testing System, the world's proven English language test. Over 1.5 million candidates took the test evetry year to start their journeys into international education and employment.



We Provide

1. A Placement test which determines to which level of English you belong Updated course modules
2. Materials approved by British Council which are quite new including Cambridge 8
3. 40 Practice test.
4. Free IELTS pack & Mock Exams

British Council Trained Trainers



நீங்கள் எங்கு IELTS படித்திருந்தாலும் எமது நிலையத்தில் வந்து பதிவு செய்து பரீட்சை எடுக்க முடியும்.

IELTS Registration Centre For British Council

| | |
|---|---|
| Course Schedule | Sat & Sun |
| Duration | 10 Weeks |
| Time | 8.30 to 11.30 |

வகுப்புக்கள் ஆரம்பம் 05.11.2011

For registration and further details contact

CITY COLLEGE OF ENGLISH

No.143, Adiyapatham Road, Thirunelvely - Jaffna.

Tel. 021 3216027, 077 8803887

(திருநெல்வேலிச் சந்திக்கும் கல்வியங்காட்டுச் சந்திக்கும் [illegible])


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிபியாவிலிருந்து நேட்டோ படைகள் 31ஆம் திகதியுடன் வெளியேற வேண்டும்

## ஐ.நா.பாதுகாப்பு கவுன்சில் தீர்மானம்

லிபியாவுக்கு எதிரான சர்வதேச படையினரின் யுத்த நடவடிக்கைகளை முடிவுக்கு கொண்டு வந்துள்ளதாக ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவை அறிவித்துள்ளது.

இதற்கான வாக்கெடுப்பு ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு பேரவையில் நடத்தப்பட்டுள்ளது. இதனையடுத்து எதிர் நாளை மறுதினத்துடன் யுத்த நடவடிக்கைகள் நிறுத்தப்படுவதாக பாதுகாப்புப் பேரவை அறிவித்துள்ளது..

கடந்த 20ஆம் திகதி கடாபி புரட்சிப் படையினரால் கொல்லப்பட்டார். அதை தொடர்ந்து தற்போது அங்கு போர் முடிவுக்கு வந்தது. எனவே இனி லிபியாவில் இருந்து நேட்டோ படைகள் வெளியேற வேண்டும் என சர்வதேச அளவில் கருத்து எழுந்தது.

அதையடுத்து லிபியாவில் இருந்து நேட்டோ படைகள் வெளியேற வேண்டும் என ஐ.நா.சபையின் பாதுகாப்பு கவுன்சில் உத்தரவிட்டுள்ளது. அதற்கான தீர்மானம் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டது.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் இடம் பெற்றுள்ள 15 நாடுகளின் உறுப்பினர்கள் ஒன்று கூடி இந்தத் தீர்மானத்தை ஏக மனதாக நிறைவேற்றினார்கள்.

லிபியாவின் எதிர்காலத்தையும் ஜனநாயகத்தையும் பாதுகாப்பதில் இந்த முடிவு முக்கிய இடத் தைப் பிடித்துள்ளதாக பிரிட் டன் வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹேக் குறிப்பிட் டுள்ளார். முன்னாள் தலைவர் மும்மர் கடாபிக்கு எதிரான போராட்டங்களுக்காக சர்வதேச படைகளுக்கு ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவை அனுமதி வழங்கியிருந்தது. இந்த நிலையில் கடாபி கொல்லப்பட்டதன் பின்னர், லிபியாவுக்கு எதிரான யுத்த நடவடிக்கைகள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. (ந)

# லிபியப் புரட்சிப் படையினருக்கு உதவியது சூடான் இராணுவம்



## அதிபர் பஷீர் தகவல்

சர்வாதிகாரியான கடாபியை லிபியப் படைகள் வென்றதற்குக் காரணம், போராட்டக்காரர்களுடன் தங்கள் நாட்டு ராணுவம் இணைந்து செயற்பட்டதே என்று சூடான் அதிபர் ஓமர்-அல்-பஷீர் கூறியுள்ளார்.

தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் பஷீர் மேலும் கூறியதாவது;

கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன் நீதி மற்றும் நடுநிலை இயக்கத்தின் டர்பரி போராட்டக் குழுவானது கர்டூம்மை தாக்கியது. அப்போது கடாபி போராட்டக்காரர் களுக்கு ஆதரவு தெரிவித்தார்.

எனினும் சூடானுக்கு லிபிய புரட்சிப் படையிர் வாகனங்கள், ஆயுதங்கள், யுத்த தளபாடங்கள், பணம் மற்றும் மனித நேய ஆதரவு வழங்கினர் லிபியா செய்த உதவிக்கு கைமாறாக சூடான் இப்பொழுது உதவியது எனக் கூறினார்.

அதுமட்டுமன்றி புதிதாக அமையவிருக்கும் லிபிய அரசுடன் உறவு கொள்ள விரும்புவதாகவும், அந்த நாட்டின் எல்லைப் பகுதியான டர்பரியில் ஏற்படும் சண்டைகளுக்கு லிபியா ஆயுத உதவி வழங்குவதை சூடான் அதிகாரிகள் விரும்புவதாகவும் பஷீர் மேலும் தெரிவித்தார். (ந)

# பக்தாத்தில் குண்டுத் தாக்குதல்; 18 பேர் சாவு

ஈராக்கின் தலைநகர் பக்தாத்தில் நேற்று நடத்தப்பட்ட இரட்டைக் குண்டுத் தாக்குதலில் 18 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 36 பேர் காயமடைந்துள்ளதாகத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

இந்தத் தாக்குதலுக்கு எந்தவொரு அமைப்பும் உரிமை கோராத நிலையில், அல்குவைதா இயக்கத்தினர்தான் தாக்குதல் நடத்தியிருக்கலாம் என அதிகாரிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இந்த வருடத்தின் இறுதிப் பகுதிக்குள், அமெரிக்கப் படையினர் முழுமையாக ஈராக்கை விட்டு வெளியேறவுள்ள நிலையில் தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன.



அனைத்து மதத் தலைவர்கள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் இத்தாலியின் சாண்ட் மரியாவில் நடந்தது. இதில் போப் பெனிடிக், இந்து மதத்தைச் சேர்ந்த ஸ்ரீவத் சகோஸ்வாணி உள்பட அனைத்து மதத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# செயற்கை இரத்தம் தயாரித்து பிரிட்டன் விஞ்ஞானிகள் சாதனை

லண்டன், ஒக். 29

செயற்கை முறையில் ரத்தம் தயாரித்து பிரிட்டன் விஞ்ஞானிகள் சாதனை படைத்துள்ளனர்.

பிரிட்டனின் எடின்பர்க் மற்றும் பிரிஸ்டல் பல்கலைக் கழக விஞ்ஞானிகள் இதற்கான ஆய்வை மேற்கொண்டனர். ஸ்டெம்செல்களில் இருந்து ஆயிரக்கணக்கான மில்லியன் சிவப்பு அணுக்களை உருவாக்கினர். அதைப் பரிசோதனை கூடத்தில் வைத்து செயற்கை ரத்தத்தை உருவாக்கினர்.

இந்த ரத்தம் 25 லட்சம் சிவப்பு அணுக்களை கொண்டது. இவற்றை மனித உடலில் செலுத்த முடியும். எந்தவிதமான நோய்த் தொற்றும் ஏற்படாது.இவை இன்னும் 2 ஆண்டுகளில் பயன்பாட்டுக்கு வர இருக்கிறது. இவற்றை இருதய, இருதய மாற்று சத்திர சிகிச்சையின் போது மற்றும் புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்கள் பயன்படுத்தலாம். இதன் மூலம் லட்சக்கணக்கான மக்களின் உயிர் பாதுகாக்கப்படும் என வைத்தியர்கள் கருதுகின்றனர். (ந)

# சோமாலிய மக்களுக்கு உதவும் அரச தம்பதி

வில்லியம், கேத்மிடில் டன் தம்பதிகள் பட்டினியால் வாடிக் கொண்டிருக்கும் 13 பில்லியன் கென்ய மற்றும் சோமாலிய மக்களுக்கு உதவிபுரியவுள்ளார்கள்

கிழக்கு ஆபிரிக்காவில் ஏற்பட்ட வரட்சியால் மூன்று லட்சத்துக்கும் அதிகமான குழந்தைகள் மரணிக்கும் நிலையில் இருக்கின்றனர் அவர்களுக்கு உதவும் முகமாக இந்த றோயல் தம்பதிகள் மனிதநேய அமைப்பான யூனிசெப்பின் பொருள்கள் வழங்கும் மையமான கோபன் கோஹெனுக்கு செல்லவுள்ளனர். (ந)

# அல்-ஷபாப் தீவிரவாதிகளை கென்யா வேட்டையாடுவது சரியானதே

## சோமாலிய பிரதமர்

அல் - ஷபாப் தீவிரவாதிகளை கென்ய ராணுவம் வேட்டையாடுவது சரியானதே என சோமாலியப் பிரதமர் கூறியுள்ளார்.

அல் - ஷபாப்பின் படைகளை எதிர்ப்பதற்காக கென்ய படைகள் 12 நாள்களுக்கு முன்பாகவே ஆபிரிக்காவில் உள்ள அனார்சிக் ஹார்ன் என்ற பகுதியில் தங்கியுள்ளன.

இந்தநிலையில் சோமாலிய பிரதமர் முகமது அலி கூறுகையில்:

கென்யா தன் பாதுகாப்பிற்காக அல்ஷபாப்பின் மீது எடுக்கும் எந்த நடவடிக்கைக்கும் சோமாலியா ஆதரவாக இருக்கும். சோமாலியாவின் உள்ளிருந்து கென்யா நடத்தும் இந்தத் தாக்குதலுக்கு நாங்கள் ஆதரவு தருகிறோம். ஆனால் அல்-ஷபாப்பைத் தோற்கடிப்பதற்கு எங்கள் படைகளுக்கு கென்ய ரயில் போக்குவரத்து வசதி, மற்ற இராணுவ வசதிகளை செய்து தரவேண்டும். அத்துடன் எங்கள் இராணுவம் இந்தத் தாக்குதலுக்கு தலைமை ஏற்கும் எனத் தெரிவித்தார்.

தங்கள் சொந்த மண்ணில் அவர்கள் செய்த கடத்தல் குற்றங்களும், அடிக்கடி நடத்திய தாக்குதல்களுமே அல்ஷாபாவை கென்யா எதிர்ப்பதற்கு காரணம். (ந)

# பாங்கொக்கில் ஆறுகள் உடைப்பெடுக்கும் அபாயம்

## மக்கள் வெளியேற அரசு காலக்கெடு விதிப்பு

பாங்கொக்,ஒக்.29

தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கில் இருந்து மக்கள் வெளியேறுவதற்கு அந்த நாட்டு அரசு ஐந்துநாள் விடுமுறையை அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக பாங்கொக்கிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேறத்துடித்துக் கொண்டிருப்பதால் வீதிகள் யாவும் வாகனங்களினால் நிறைந்து, ஒன்றோடு ஒன்று முட்டி மோதிக் கொண்டிருக்கின்றன. மாதக்கணக்கில் பெய்து வரும் கடும் மழையால் உயர் வெள்ளப் பெருக்கு ஒன்று ஏற்படும் அபாயம் இருப்பதாக வெளியாகியுள்ள செய்தியினாலேயே மக்கள் தலைநகரிலிருந்து வெளியேறத் துடிக்கின்றனர்.

ஏற்கனவே ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கும் இன்னும் மோசமடையலாம் என்று எதிர்பார்க்கப்பட்டுள்ள நிலையில் அரசு வெளியேற்றும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. வட பிராந்திய மாவட்டங்களில் 90 வீதமான பகுதிகள் வீதியில் மூழ்கியுள்ள நிலையில் மக்களை உடனடியாக வெளியேறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கில் பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருக்கும் சாஓ பிறேயா ஆறு எந்த நேரத்திலும் கரைகள் உடைப் பெடுத்து அனர்த்தம் விளையலாம் என்ற அச்சமும் எழுந்துள்ளது.

இதேவேளை பாங்கொக்கில் உள்ள பெரும்பாலான கட்டடங்களுக்கு மணல் சாக்குகளால் அணைபோடப்பட்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆபத்தானவை என்று கருதப்படும் வீதிகள் பெரும்பாலும் மக்கள் சந்தடி இல்லாமல் காணப்படுகின்றன.

கடந்த அரை நூற்றாண்டு காலத்தில் இவ்வாறு மோசமான மழையும் வெள்ளளம் ஏற்பட்டத்தில்லையென்று கூறப்படுகின்றது. வழக்கத்துக்கு மாறான மழையும் காற்றுமே இதற்குக் காரணம். கடந்த ஜூலை மாதம் நடுப்பகுதியிலிருந்து தாய்லாந்து வெள்ளப் பெருக்கில் 377 பேர் பலியாகியுள்ளனர். 2 லட்சத்து 20 ஆயிரம் மக்கள் வாழ்வாதாரத்தை இழந்துள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ப)

# 5 நாள்களில் 700 கோடியை எட்டவுள்ள உலக சனத் தொகை

நியூயோர்க், ஒக்.29

இன்னும் ஐந்து தினங்களில் உலக மக்கள் தொகை 700 கோடியைத் தொடும் என்று ஐ.நா. தெரிவித்துள்ளது.

ஐ.நா. சார்பில் புதன்கிழமை வெளியிடப்பட்ட உலக மக்கள் தொகை தொடர்பான அறிக்கையில் இந்தத் தகவல் கூறப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது;

மருத்துவத்துறையின் வளர்ச்சியால் உலகம் முழுவதும் மனிதர்களின் ஆயுள் காலம் நீடித்துள்ளது. மக்கள் தொகைப் பெருக்கமே இதைக் காட்டுகிறது. மக்கள் தொகைப் பெருக்கத்தால் மனித சமுதாயத்துக்கு பல சாதகமும், பாதகமும் உள்ளன.

இதுகுறித்து உலக மக்கள் எடுக்கும் தெளிவான முடிவைப் பொறுத்தே நாளைய சமுதாயம் அமையும். இல்லையேல் உலக நாடுகள் ... போது பீடித்துள்ள ... தாரப் பின்னடைவு உள்ளிட்ட பிரச்சினைகள் அகல வாய்ப்பில்லை; தொடர்கதையாகவே இருக்கும். மக்கள் தொகைப் பெருக்கத்தால் நாம் ஏராளமான சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. ஏற்கெனவே மக்களிடையே ஏற்றத்தாழ்வுகள், ஆண்-பெண்களுக்கு உரிமை அளிப்பதில் பாகுபாடு நிலவுகிறது. எதிர்வரும் காலங்களில் இந்தப் பிரச்சினைகள் மேலும் ... தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# துருக்கியில் மீண்டும் நிலநடுக்கம்

துருக்கியின் தென்கிழக்குப் பகுதியில் நேற்றுமுன் தினம் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ஈராக் அருகே யுக்செகோவா நகரில் உணரப்பட்டது. 5.4 என்ற ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. எனினும் புதிதாகப் பாதிப்பு எதுவும் ஏற்பட்டதாகத் தகவல் இல்லை. கடந்த ஞாயிற்றுக்கிழமை 7.2 என்ற ரிச்டர் அளவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 523 பேர் உயிரிழந்தனர். (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணக் கராத்தே சுற்றுப் போட்டி சென்.ஜோன்ஸுக்கு 25 பதக்கங்கள்

யாழ்ப்பாணம், ஒக்.29

இலங்கைக் கராத்தே சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட வடமாகாணத்துக்கான கராத்தே சுற்றுப்போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி 11 தங்கப் பதக்கம், 6 வெள்ளிப் பதக்கம், 8 வெண்கலப்பதக்கம் அடங்கலாக 25 பதக்கங்களைப் பெற்றுள்ளது.



**தனிப்பிரிவில் தங்கப்பதக்கம் பெற்றோர்**

வி.நிவேதன் - குமித்தே - காட்டா போட்டியில் முதலாம் இடம் (தங்கப்பதக்கம்), எஸ். சாந்தரூபன் - காட்டா போட்டியில் முதலிடம் (தங்கப்பதக்கம்), எஸ்.சஜீத்- குமித்தே போட்டியில் முதலிடம் (தங்கப் பதக்கம்), ஆர். தனேஸ் - குமித்தே போட்டியில் முதலிடம் (தங்கப் பதக்கம்), ஏ.தனுஷன் காட்டாப் போட்டியில் முதலிடம் (தங்கப்பதக்கம்).

**தனிப்பிரிவில் வெள்ளிப் பதக்கம் பெற்றோர்**

ஆர். தனுஷன் காட்டா - குமித்தே போட்டியில் வெள்ளிப்பதக்கம், ஏ.இளங்கீரன் காட்டா போட்டியில் வெள்ளிப் பதக்கம், ஏ.தனுஷன் குமித்தே போட்டியில் வெள்ளிப்பதக்கம்.

**தனிப்பிரிவில் வெண்கலப்பதக்கம் பெற்றோர்**

எஸ்.சஜித்- காட்டா போட்டியில் வெண்கலப்பதக்கம், ஜே.கிருபவன் - குமித்தே போட்டியில் வெண்கலப்பதக்கம், ஆ.துஷியந்தன் - காட்டா போட்டியில் வெண்கலப்பதக்கம், எஸ்.யவிகரன் காட்டா போட்டியில் வெண்கலப்பதக்கம், பி.சாம்சன் - குமித்தே போட்டியில் வெண்கலப் பதக்கம், ஆர்.தனேஸ் - காட்டா போட்டியில் வெண்கலப்பதக்கம், ஏ.சாம்துஷாந்தன் - காட்டா போட்டியில் வெண்கலப்பதக்கம்.

**குழுப் போட்டியில் தங்கம் பெற்றோர்**

வி.நிவேதன் - குழு காட்டா போட்டியில் தங்கப்பதக்கம், பி.சாம்சன் - குழு காட்டா போட்டியில் தங்கப்பதக்கம், ஆர். தனேஸ் குழு காட்டா போட்டியில் தங்கப்பதக்கம், ஏ.இளங்கீரன் குழு காட்டா போட்டியில் தங்கப்பதக்கம், ஏ.தனுஷன் - குழு காட்டா போட்டியில் தங்கப்பதக்கம்.

**குழுப் போட்டியில் வெள்ளி பெற்றோர்**

ஏ.துஷியந்தன் குழு காட்டா போட்டியில் வெள்ளிப் பதக்கம், ரீ.தமரிசெல்வன் குழு காட்டா போட்டியில் வெள்ளிப் பதக்கம்.

**குழுப் போட்டியில் வெண்கலம் பெற்றோர்**

எஸ்.யவிகரன் - குழுப் போட்டி வெண்கலப் பதக்கம்.

(த-23)

# இரண்டாம் சுற்றுக்கு தகுதிபெற்ற அணிகள்

யாழ்ப்பாணம், ஒக்.29

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் 16, 18 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையே இடம்பெற்ற லீக் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் வெற்றியீட்டி இரண்டாம் சுற்றுக்குத் தகுதி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:

**16 வயதுப் பிரிவு**

நெல்லியடி மத்திய கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, கரவெட்டி விக்கினேஸ்வரக் கல்லூரி, தேவரையாளி இந்துக் கல்லூரி, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, இமையாணன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி, கொற்றவத்தை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை.

**18 வயதுப் பிரிவு**

உடுத்துறை மகா வித்தியாலயம், தொண்டைமானாறு வீரகத்தி மகா வித்தியாலயம், நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, தேவரையாளி இந்துக் கல்லூரி, கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி.

(த-23)

# வயாவிளான் சம்பியன்

யாழ்ப்பாணம், ஒக்.29

தெல்லிப்பழை கல்விக் கோட்ட மட்ட பாடசாலைகளுக்கு இடையில் 16 வயது பிரிவு அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் வயாவிளான் மத்திய மகா வித்தியாலய அணி வெற்றி பெற்று சம்பியன் ஆனது.



இளவாலை சென் ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணியை எதிர்த்து வயாவிளான் மத்திய மகா வித்தியாலய அணி மோதிக்கொண்டது. இதில் வயாவிளான் மத்திய மகா வித்தியாலய அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது. (23)



# கராத்தேயில் இருவருக்கு கௌரவம்

யாழ்ப்பாணம், ஒக்.29

இலங்கை கல்வி அமைச்சின் அனுசரணையுடன் இலங்கைப் பாடசாலைகள் கராத்தே சங்கத்தினால் நடத்தப்பட்ட அகில இலங்கை ரீதியிலான 11 வயது முதல் 19 வயதுப் பிரிவுகளுக்கான கராத்தே சுற்றுப் போட்டி கடந்த வாரம் கொழும்பில் இடம் பெற்றது.

இதில் 14 வயதுப் பிரிவு சண்டைப் போட்டியில் பருத்தித்துறை தும்பளை சைவப்பிரகாச பாடசாலை மாணவன் எஸ்.தமிழ்ச்செல்வன் மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தை வென்றார். 13 வயதுப் பிரிவு சண்டைப் போட்டியில் சிறந்த 8 வீரர்களில் ஒருவராக பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய மாணவன் இ.ஆழிக்குமரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (த-23)



இலங்கை கராத்தே சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட வடமாகாணத்துக்கான கராத்தே சுற்றுப்போட்டியில் 85க்கும் மேற்பட்ட வீரர்களைப் பதக்கம் பெற வைத்த ஆசிரியர் சென்சேய்.கே.எஸ். விஜயராஜ் வடமாகாணக் கராத்தே சம்மேளனத்தால் கௌரவிக்கப்பட்டார். அவருக்கான வெற்றிக் கிண்ணத்தை சென்சேய்.பொஸ்கோ வழங்குகிறார். (த-23)

# சம்பியனானது கோண்டாவில் பரஞ்சோதி



நல்லூர் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 18 வயதுப் பிரிவினருக்கான உதைப்பந்தாட்டப் போட்டியில் கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயமும் மோதிக்கொண்டன. போட்டி ஆரம்பமாகி முடியும் வரை இருஅணிகளும்சோர்வடையாதுவிளையாடி பார்வையாளரின் பாராட்டைப் பெற்றுக்கொண்டனர்.

முதல்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல் பெற முயற்சித்த போதிலும் இரு அணிகளுமே கோல் எதனையும் பெறவில்லை. இரண்டாவது பாதி ஆட்டம் இரு அணிகளுக் கும் பெரும் சவாலாக அமைந்த நிலையில் இரு அணிகளுக்கும் கிடைத்த வாய்ப்பினைத் தவறவிட்ட நிலையில் ஆட்டம் முடிவடையும் 5 நிமிடத்துக்கு முன் கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய மாணவன் றெக்சன் ஒரு கோலைப் போட்ட நிலையில் பரஞ்சோதி வித்தியாலயத்தின் வெற்றி உறுதி செய்யப்பட்டது.

ஆட்ட நிறைவில் கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம் 1:0 என்ற கோல் கணக்கில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியை வென்று கோட்டச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. (த)

# வட மாகாணத்துக்கு 3 பதக்கங்கள்

யாழ்ப்பாணம், ஒக்.29

மகிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 23 ஆவது தேசிய இளைஞர் விழாவின் இரண்டாம் நாள் விளையாட்டு நிகழ்வில் வடமாகாணத்துக்கு இரு வெள்ளிப்பதக்கம், ஒரு வெண்கலப் பதக்கம் கிடைத்துள்ளன.

20 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கான தட்டு எறிதல் போட்டியில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த வி.அனுஷா 40.11 மீற்றர் தூரத்துக்கு தட்டு எறிந்து இரண்டாமிடத்தைப் பெற்று வெள்ளிப்பதக்கம் வென்றார்.

20 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான குண்டு எறிதல் போட்டியில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ஆர்.தர்சிகா 9.20 மீற்றர் தூரத்துக்கு எறிந்து மூன்றாமிடத்தைப் பெற்று வெண்கலப்பதக்கம் வென்றார்.

20 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான தட்டு எறிதல் போட்டியில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த வி.கரிகரன் 37.70 மீற்றர் தூரத்துக்கு எறிந்து இரண்டாமிடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கம் வென்றார்.

இதேவேளை 20 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான குண்டு எறிதல் போட்டியில் ஆர்.விமலேந்திரன் 12.54 மீற்றர் தூரத்துக்கு எறிந்து நான்காமிடத்தைப் பெற்றுள்ளார்.

20 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த எஸ். சதீஸ்கரன் 2 நிமிடம் 04 விநாடிகளில் ஓடிமுடித்து நான்காமிடத்தைப் பெற்றுள்ளார். (த-23)

# முன்னாள் பெண் போராளிகள் இலங்கைக் கரப்பந்து அணியில்

யாழ்ப்பாணம் , ஒக்.29

எதிர்வரும் நவம்பர் மாதம் 17ஆம் திகதி தொடக்கம் 26ஆம் திகதி வரை சீனாவில் ஆசியப் பிராந்திய வலுவிழந்தோருக்கான மகளிர் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி இடம்பெறவுள்ளது.

மேற்படி போட்டியில் பங்கு கொள்ளவுள்ள இலங்கை அணியில் முன்னாள் போராளிகளான செல்வி மலர்விழி பரமலிங்கம், அந்தோனி சாமி மேரி அனிற்ரா, நவேந்திரன் நவலோஜினி ஆகிய மூவரும் இடம்பிடித்துள்ளனர்.

இவர்களுக்கான பயிற்சிகள் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தினால் கொழும்பில் வழங்கப்பட்டு வருகின்றன.

(த-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையைப் பதம் பார்க்கும் பாகிஸ்தான்




இலங்கை அணிக்கும், பாகிஸ்தான் அணிக்குமிடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிவரும் இலங்கை அணி ஒரு இலக்கு நஷ்டத்துக்கு 88 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

முன்னதாகத் தனது முதலாவது இன்னிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி சகல இலக்குகளையும் இழந்து 403 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரின் இரண்டாவது ஆட்டம் டுபாயில் கடந்த புதன் கிழமை ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணியின் தலைவர் டில்ஷான் முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி சகல இலக்குகளையும் இழந்து 239 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. சங்ககார 78 ஓட்டங்களையும், வெலகெதர 2 ஆறு ஓட்டங்கள், 4 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 48 ஓட்டங்களையும், ஹேரத் 29 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் உமர்குல், சயிட் அஜ்மல் தலா 3 இலக்குகளையும், யுனைட் கான், அப்துர் ரெஹிமான் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸை பாகிஸ்தான் அணி தொடங்கியது. நேற்று முன்தினம் ஆட்ட நேர முடிவின் போது 4 இலக்குகள் நஷ்டத்திற்கு 281 ஓட்டங்கள் பெற்றிருந்தது. அணித் தலைவர் மிஷ்பா 40, சயிட் அஜ்மல் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது களத்திலிருந்தனர்.

நேற்றைய ஆட்டம் ஆரம்பமாகி சிறிது நேரத்திலேயே ஐந்தாவது இலக்கு சரிக்கப்பட்டது. அணித் தலைவர் மிஷ்பா 41 ஓட்டங்களுடன் வெளியேறினார். மிஷ்பாவின் ஆட்டமிழப்பைத் தொடர்ந்து அஷாட் சவிக் நுழைந்தார். அஜ்மலுடன் இணைந்து மிகச் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினர். 324 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 6 ஆவது இலக்கு சரிக்கப்பட்டது. அஜ்மல் 20 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

அட்னான் அக்மல் தொடர்ந்து களம் புகுந்தார். 7 ஆவது இலக்குக்காக அக்மல், அஷாட் சவிக் ஜோடி சிறப்பாகத் துடுப்பெடுத்தாடியது. இவர்களது சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் பாகிஸ்தான் மிகச் சிறப்பான இலக்கை அடைந்தது. 7 ஆவது இலக்குக்காக 70 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் அஷாட் சவிக் 59 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அதனைத் தொடர்ந்து பாகிஸ்தானது ஆட்டம் முடிவுக்கு வந்தது. இறுதியில் சகல இலக்குகளையும் பறிகொடுத்து 403 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது. அட்னான் அக்மல் 41 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் இலங்கையின் சார்பில் தம்மிக்க பிரசாத், டில்ஷான் தலா 3 இலக்குகளையும், ஹேரத், வெலகெதர தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

164 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கியது இலங்கை அணி. 22 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் தனது முதலாவது இலக்கினை இழந்தது. திரிமன்னே 8 ஓட்டங்களுடன் மொஹமட் ஹபீஸின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார். தொடர்ந்து நுழைந்த சங்ககார ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் பரனவிதாரனவுடன் இணைந்து ஆட்டத்தை தொடர்ந்தார்.

இந்த ஜோடி நேற்றைய ஆட்டநேர முடிவு வரை இழப்பின்றி தொடர்ந்தது. 66 ஓட்டங்களைப் பகிர்ந்த நிலையில் இந்த ஜோடி துடுப்பெடுத்தாடி வருகின்றது. பரனவிதாரன 42, சங்ககார 29 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றுக் கொண்டுள்ளனர். இறுதியில் ஒரு இலக்கு நஷ்டத்துக்கு 88 ஓட்டங்களை இலங்கை பெற்றுள்ளது. (15)

# சச்சின் அணித் தலைவராய் ஏன் பிரகாசிக்க முடியவில்லை

வயதில் மூத்தவர்களுக்கு சச்சின் மிகுந்த மரியாதை அளிப்பார். அவர்கள் சொல்வதை அமுல்படுத்துவது தனது கடமை என்று நினைத்தார். இதனால் தான் அணித்தலைவராக சச்சினால் பிரகாசிக்க முடியவில்லை என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் (பி.சி.சி.ஐ) முன்னாள் செயலர் தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் நட்சத்திர வீரர் சச்சின். துடுப்பாட்டத்தில் எண்ணற்ற சாதனைகள் படைத்துள்ளார். ஆனால் அணித்தலைவராக ஏமாற்றம் அளித்தார். கடந்த 1996 இல் அணிக்கு தலைமையேற்ற இவர் 25 டெஸ்டில் 9 தோல்வியை சந்தித்தார். 73 ஒரு நாள் ஆட்டங்களில் 43 இல் தோல்வியைத் தழுவினார். இதையடுத்து அணித்தலைவர் பதவியை 2000 இல் ராஜினாமா செய்தார். அணித்தலைவராக இவரது வீழ்ச்சிக்கான காரணம் குறித்து இந்திய கிரிக்கெட் சபையின் (பி.சி.சி.ஐ) முன்னாள் செயலர் ஜெயவந்த் லீலே தனது புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இதில் ஜெயவந்த் லீயே கூறியிருப்பதாவது:

அணித்தலைவர் பதவியில் இருந்து சச்சின் விலகிய போது எனது கண்கள் குளமாகின. அணித்தலைவராக இருந்த காலத்தில் அவருடன் பழகும் அரிய வாய்ப்பு எனக்கு கிடைத்தது. இவரது பிரச்னையே யார் சொன்னாலும் கேட்பது தான். அமைதியான குணம் கொண்ட இவர், 16 வயதில் சர்வதேச கிரிக்கெட்டில் காலடி எடுத்து வைத்தார். அன்று முதல் வயதில் மூத்தவர்களுக்கு மரியாதை கொடுப்பதை வழக்கமாக கொண்டார்.

அவர்கள் சொல்வதை எல்லாம் அமுல்படுத்துவது தனது கடமை என்று நினைத்தார். அப்படி செய்யும் போது தனது சுயபுத்தியை பயன்படுத்த தவறினார். இது சில நேரங்களில் பாதிப்பை ஏற்படுத்த, அணித் தலைவர் பதவிக்கு சிக்கலானது.

இதற்கு உதாரணமாக ஒரு சம்பவத்தை குறிப்பிடலாம். தென்னாபிரிக்காவுக்கு எதிரான அஹமதாபாத் டெஸ்ட் ஆட்டத்தில் பங்கேற்கும் வீரர்களை தேர்வு செய்வதற்கான கூட்டம் நடந்தது. அப்போது யாரோ ஒருவர் சிபாரிசு செய்தார் என்பதற்காக தனக்கு சற்றும் அறிமுகமில்லாத நிலேஷ் குல்கர்னியை தேர்வு செய்ய வேண்டுமென சச்சின் வலியுறுத்தினார்.

உடனே தேர்வுக் குழு தலைவராக இருந்த கிஷண் ருங்தா 'நீங்கள் அவர் பந்துவீச்சு செய்வதை பார்த்திருக்கிறீர்களா ? எனக் கேட்டார். சர்வதேச போட்டியில் மிகவும் 'பிசியாக' இருந்த சச்சின், ரஞ்சி தொடர் போட்டியில் கூட விளையாடவில்லை. இதனால் குல்கர்னியை தெரிய வாய்ப்பு இல்லை. இந்த நிலையில் எனக்கு தெரியாது. ஆனால் குல்கர்னி 26 இலக்குகள் வீழ்த்தியிருக்கிறார். மிகச் சிறந்த பந்துவீச்சாளர் என்று சொன்னார்.

இதற்குப் பதில் அளித்த ருங்தா, குல்கர்னி பந்துவீசுவதை பார்த்திருந்தாலாவது, உங்கள் சிபாரிசை ஏற்றுக் கொண்டிருப்பேன். ரஞ்சி தொடரில் மும்பை அணியே குல்கர்னியை தேர்வு செய்யவில்லை. அவரை நீக்கி விட்டனர். உள்ளூர் அணியிலேயே வாய்ப்பு மறுக்கப்பட்ட ஒரு வீரரை தேசிய அணிக்கு எப்படி தேர்வு செய்ய முடியும், என்றார். இதற்கு பதில் சொல்ல முடியாமல் தவித்த சச்சினின் நிலைமை மிகவும் பரிதாபமாக இருந்தது - என்று குறிப்பிட்டுள்ளார். (15)

# தோற்றதால் கொலை மிரட்டல்

இங்கிலாந்து அண்மையில் இந்தியாவுடனான ஐந்து ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரில் படுதோல்வியைச் சந்தித்தது. இதன் விளைவாக தனக்கு கொலை மிரட்டல் வந்ததாக சுவான் கூறியுள்ளார்.

ருவிட்டர் இணையதளம் வழியே சிலர் அமிலத்தைக் காய்ச்சி ஊற்றுவது போன்ற காரசார மொழிகளால் வசை மாரி பொழிந்துள்ளதாகவும், இருப்பினும் தனக்கு அவர்களின் மனத்தாங்கலும் கோபமும் புரிவதாகவும் சுவான் கூறியுள்ளார்.

ருவிட்டரில் எனக்கு வந்துள்ள கொலைமிரட்டல்களுக்காக நான் எந்தக் கண்டனத்தையும் தெரிவிக்கவில்லை. அந்த செவ்வாய்க்கிழமை ஆட்டத்துக்குப் பிறகு பழிக்குப்பழி வாங்கும் விதமாக இருநூறுக்கும் அதிகமான மக்கள் மிரட்டல் விடுத்திருப்பதை நான் புரிந்து கொள்வேன் என்று கூறியிருக்கிறார்.

கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நடந்த கடைசி ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 95 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோற்றுப் போனது. ஆனால் வெறும் 47 ஓட்டங்களில் தான் 10 இலக்குகளையும் பறிகொடுத்தது.

இணையதள உலகில் கருத்து கூறும் எல்லாருமே சரியான கருத்தைத் தெரிவிப்பவர்கள் என்று எடுத்துக் கொள்ள முடியாது. பார்த்தால் கிரிக்கெட் என்பது சாதாரணமான ஒரு விளையாட்டு தான். ஆனால் இதுவெல்லாம் எப்படி சாதாரண மனிதனை ரணமாக்குகிறது என்பதை கணிக்கவே முடியவில்லை என்றார் அவர்.

இருப்பினும் இன்று சனிக்கிழமை நடக்கவுள்ள 'ரி-20' ஆட்டத்தில் வெற்றி பெறுவோம் என்றார் அவர். மிரட்டல்கள் அதிகம் வந்ததால் ... பெயர்களை ... கூறினார் சுவான். (15)

# கம்பீரின் காதல் கைகூடியது



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி ஆட்டக்காரர் கௌதம் கம்பீர். இவர் நடாஷா ஜெயின் என்ற பெண்ணை காதலித்து வந்தார். நடாஷா டெல்லியைச் சேர்ந்த பெரிய தொழில் அதிபரின் மகள் ஆவார்.

கடந்த ஒரு வருடமாக இருவரும் காதலித்து வந்தனர். இவர்களது காதலுக்கு பெற்றோர் பச்சை கொடி காட்டி விட்டனர்.

6 மாதத்துக்கு முன்பே கம்பீர் - நடாஷா திருமணம் நடப்பதாக இருந்தது. ஆனால் இங்கிலாந்து - இந்திய அணிகள் இடையேயான போட்டியில் விளையாட ஒப்புக் கொண்டிருந்ததால் திருமணம் தள்ளிப் போடப்பட்டது.

நேற்று கம்பீர் - நடாஷா திருமணம் டெல்லி அருகே குர்கானில் உள்ள பண்ணை வீட்டில் கோலாகலமாக நடந்தது. இதில் நெருங்கிய உறவி னர்கள் நண்பர்கள் மட்டும் கலந்து கொண்டனர். கிரிக்கெட் வீரர் சச்சின் , நடிகர் ஷாருக்கான் ஆகியோர் நேரில் வந்து மணமக்களை வாழ்த்தினர். திருமண விழாவில் பிரபல பாடகர் ரகாத் பதே அலிகானின் கச்சேரி நடந்தது.

திருமணம் காரணமாக காம்பீர் இன்று நடைபெறும் 20 ஓவர் ஆட்டத்தில் விளையாடவில்லை. அணி வீரர்களும் கொல்கத்தாவில் பயிற்சியில் ஈடுபட்டு இருப்பதால் திருமணத்தில் பங்கேற்கவில்லை. திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கிரிக்கெட் பிரபலங்கள், நடிகர்- நடிகைகள், பிரமுகர்கள் கலந்துகொள்கிறார்கள். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

அமரர்

## வைரமுத்து குலவீரசிங்கம்

(ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதிபர்)



எமது அலுவலகத்தின்
வலயக் கல்விப்பணிப்பாளர்
**சு.ஸ்ரீரோசகாந்தன்**
அவர்களின் தந்தையாரின்
பிரிவினால் துயருற்று
இருக்கும் அன்னாரின்
குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவித்துக் கொள்கின்றோம்.

நலன்புரிகழகம்,
வலயக்கல்வி
அலுவலகம்,
தென்மராட்சி.

பிரதிக்கல்விப் பணிப்பாளரும்
கோட்டக் கல்விப் பணிப்பாளரும்
உத்தியோகத்தர்களும்
பணியாளர்களும்.

# மரண அறிவித்தல்கள்

## பொன்னு சிவலிங்கம்



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி திருநகரை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னு சிவலிங்கம் 25.10.2011 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னு – முத்து தம்பதியரின் அன்பு மகனும், சீனித்தம்பி – பொன்னம்மா தம்பதியிரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், சுந்தரம், ஜெயசோதி, தவபாக்கியம், காலஞ்சென்ற பவளம் மற்றும் தர்மலிங்கம் ஆகியோரின் அன்பு சகோதரரும், ஜெயகாந்தன் (பிரான்ஸ்), ஜெயர்தினி (கனடா), ஜெயரூபன்(ஆசிரியர்), ஜெயதீபன்(உரிமையாளர், செந்தாளன் கடைச்சல் தொழிலகம்), ஜெயசீலன் (பிரான்ஸ்), நிவேதினி, கஜலட்சுமி (பிரான்ஸ்), நிர்மலதாசன்(கனடா) , மதுரா (ஆசிரியர்), கோபிதா(HNB) முரளிதரன்(செந்தாளன் தொழிலகம்) ஆகியோரின் அன்பு மாமனும், செந்தாளன் (பிரான்ஸ்), செந்தூரன்(பிரான்ஸ்), வானதி (பிரான்ஸ்), பிரியங்கன், சங்கவி, சர்ஜனா(கனடா), ரோசித் (கனடா), சஹானா, லக்சரா, லக்சிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (30.10.2011) ஞாயிற்றுக்கிழமை திருநகர் பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திருநகர் வடக்கு,
கிளிநொச்சி.

தகவல்:
குடும்பத்தினர்.

# நீங்காத நினைவலைகள்

## ஓராண்டு ஈராண்டு



**சங்கரப்பிள்ளை சிவசுப்பிரமணியம்**
தோற்றம்:04✱11✱1924
மறைவு: 08✱11✱2010

**பஞ்சரட்ணேஸ்வரி சிவசுப்பிரமணியம்**
தோற்றம்:07✱04✱1932
மறைவு: 18✱12✱2009

திதி:திருதியை

*தரணியில் எம்மை ஆளாக்கிய அன்புத் தெய்வங்களே!*
*நீங்கள் எம்மை விட்டு அகன்று சென்றாலும்*
*மாறாது எங்களின் மனத்துயரம்*
*அழியாத நினைவுகளால் என்றும் நீங்கள்*
*எம் நெஞ்சமதில் வாழ்வீர்கள்.*

'சகுந்தலம்',
மயிலணி
சுன்னாகம், தொ.பே.0212240605.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மக்கள், பேரப்பிள்ளைகள்
(பேரப்பிள்ளைகள்).

# செய்தித் துளிகள்

## விமானத்தை தரையிறக்கிய பறவை

நெதர்லாந்திலிருந்து இலங்கை நோக்கி வந்துகொண்டிருந்த விமானத்துடன் பறவை ஒன்று மோதியதால் இந்தியாவின் கோவா மாநில விமான நிலையத்தில் குறித்த விமானம் தரையிறக்கப்பட்டது.

விமானத்தின் இயந்திரங்களில் அகப்பட்ட பறவையால் விமானத்தை குறிப்பிட்ட நேரத்தில் இலங்கையில் தரையிறக்க முடியாமல் விமானிகள் கடும் பிரயத்தனத்தில் ஈடுபட்டனர்.

## கொழும்பு தோல்விக்கு கோத்தபாயவே காரணம்

கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் ஆளுங்கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தோல்வியடைவதற்கு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவே முழுக்காரணம் - என்று அதே கட்சியின் கொழும்பு மாநகரசபை உறுப்பினரான மஹிந்த கந்தகம குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொழும்பின் சேரிப்புற வீடுகளை அவர் அகற்றுவதற்கு மேற்கொண்ட தீர்மானத்தின் மூலமே இந்தத் தோல்வி ஆரம்பித்தது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## புதிய பொலிஸ் பிரிவு கிளிநொச்சியில்

பொலிஸாரின் பொதுமக்கள் தொடர்பாடலுக்கான விசேட பிரிவொன்று கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப்பொலிஸ்மா, அதிபர் நீல் தளுவத்த இந்த பொலிஸ் - பொது மக்கள் தொடர்பாடல் பிரிவை உத்தியோக பூர்வமாகத் திறந்து வைத்தார்.

## 200 யானைகள் பலி

இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில்சுமார்200காட்டு யானைகள் உயிரிழந்துள்ளன என வனவிலங்குகள் பாதுகாப்புத்திணைக்களம் தெரிவிக்கின்றது.

அவற்றில் சுமார் 100 காட்டு யானைகள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளன எனத் திணைக்கள பணிப்பாளர் நாயகம் எச்.டி.ரத்நாயக்க தெரிவித்தார்.

## விருப்பு வாக்கு பிணக்கை மறப்போம்

தேர்தல் காலங்களில் காணப்பட்ட விருப்புவாக்கு பிணக்குகளை எதிர் வரும் நான்கு ஆண்டுகளுக்கேனும் மறந்திருக்க வேண்டும் என நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

# கண்ணீர்க் காணிக்கை

யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் தலைவரும், சுதுமலை ஸ்ரீ சுபா பேக்கரி உரிமையாளரும் எமது நண்பரும் ஆகிய இ.பேரின்பநாயகம் அவர்களின் அன்பு மாமியார்

## திருமதி.புவனேஸ்வரி வேலாயுதபிள்ளை

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவர் தம் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கா.பாஸ்கரன் குடும்பத்தினர்,
நந்தினி பேக்கரி உரிமையாளர், கொக்குவில்.

# கண்ணீர் அஞ்சலி



28.10.2011 அன்று இறைபதமடைந்த சுதுமலை வடக்கு, மானிப்பாயை வதிவிடமாகக் கொண்டவரும் எமது பாடசாலையின் பிரதி அதிபர் திருமதி அழகுராணி சிவானந்தம் அவர்களின் அன்புத் தாய்

## திருமதி புவனேஸ்வரி வேலாயுதபிள்ளை

அவர்களுக்கு எமது பாடசாலைச் சமூகத்தின் சார்பில் கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*பாடசாலைச் சமூகம்,*
*வ/கனகராயன் குளம் ம.வி.*

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
கண்ணதாசன்
## கிருஷ்ணரூபன் (கிருஷ்ணா)

கண்மலர்வு
1989.01.10

கண்மூடல்
2011.09.29

எங்கள் அன்புச் செல்வமே கிருஷ்ணா நீ எமைப்பிரிந்து
இன்று 31 நாள்கள் சென்றதுவோ! உன் திருவதனம் எம் கண்ணில்
உன் நினைவுகள் என்றும் எம் நெஞ்சில் கண்டுகொள்ளத்
துடிக்கின்றோம் கண்ணெதிரே வாராயோ சதிசெய்து பிரித்து விட்டான்
ஈரமில்லாக் காலனவன்.

கடந்த (29.09.2011) வியாழக்கிழமை இறைபதமடைந்த எமது அன்புச் செல்வத்தின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (29.10.2011) சனிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*6 ஆம் வட்டாரம்*
*மண்டைதீவு.*

என்றும் நீங்கா நினைவுடன்
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## ஐயாத்துரை சேனாதிராசா

கொக்குவில் கிழக்கு, நாமகள் வீதியைப் பிறப்பிடமாகவும், சங்குவேலி, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை சேனாதிராசா (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், நீர்ப்பாசனத் திணைக்களம்) 27.10.2011 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் கமலாதேவியின் அன்புக் கணவரும், கல்யாணி (ஆசிரியை, யா/ பண்ணாகம் மெய்கண்டான் ம.வி), பார்த்தீபன், மயூரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஸ்ரீதரன் (ஆசிரியர், கிளி/ பரமன்கிராய் அ.த.க பாடசாலை), துர்க்காதரன் (பிராந்திய முகாமையாளர் Micro PC System வவுனியா) ஆகியோரின் மாமனும், காலஞ்சென்றவர்களான கனகமணி, இராமநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், சண்முகானந்தன் (கணக்காளர்), சந்திராதேவி (ஓய்வுபெற்ற அதிபர், யா/ சங்கானை சிவப்பிரகாச ம.வி), வாமதேவன் (மேற்பார்வையாளர்,யா/ கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம்), மங்கையர்க்கரசி(ஜேர்மனி), விக்னேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், சுதாகரன்(ஜேர்மனி), கிரிதரன்(ஜேர்மனி), பூங்குழல் (லண்டன்) ஆகியோரின் மாமனும், ஸ்ரீஜனனி, ஸ்ரீஜனகன், ஸ்ரீஜனார்த்தனி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.10.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கல்யாணி இல்லம்,*
*சங்குவேலி வீதி, மானிப்பாய்.*

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21 ஆம் நாள் கண்ணீர்க் காணிக்கை

வவுனிக்குளம் மாங்குளத்தை நிரந்தர வசிப்பிடமாகவும் 216, குட்செட் வீதி, முதலாம் ஒழுங்கை தோணிக்கல் வவுனியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற திரு.திருமதி பெரியதம்பி பாக்கியம் தம்பதியரின் மகள்

**சரஸ்வதிதேவி பெரியதம்பி**

09.10.2011 அன்று சிவபதமடைந்த செய்தியறிந்து துயரடைகின்றோம். இவரது இழப்பால் துயருற்றிருக்கும் எமது சக ஆசிரியை செல்வி. சுவர்ணதேவி அவர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நண்பர்கள்.

## கண்ணீர் அஞ்சலி



அமரர்

**வைரமுத்து குலவீரசிங்கம்**

(ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதிபர்)

தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகத்தின் வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அவர்களின் அன்புத் தந்தையின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கல்லூரிச் சமூகம்,
யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி,
சாவகச்சேரி.

## கண்ணீர் காணிக்கை



எமது சங்கத்தின் தலைவரும்,
சிறியா பேக்கரி உரிமையாளரும்
ஆகிய இ.பேரின்பநாயகம்
அவர்களின் அன்பு மாமியார்
திருமதி
**புவனேஸ்வரி வேலாயுதபிள்ளை**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அவரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்.
நிர்வாகத்தினரும், அங்கத்தவர்களும், பணியாளர்களும்.

## மரண அறிவித்தல்

### குமாரசாமி ஆனந்தவடிவேல்

[வர்த்தக லிமிட்டெட் உத்தியோகத்தர், ஆசிரியர் (சிறாலியோன்)]



கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, கொட்டாஞ்சேனை VTV தொடர் மாடியை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி ஆனந்த வடிவேல் 27.10.2011 வியாழக் கிழமை நண்பகல் 12 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கோப்பாய் தெற்கு காலஞ்சென்ற ஆசிரியர்களான சுந்தரம்பிள்ளை குமார சாமி - விநாசித்தம்பி செல்லம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும் கட்டுடை மானிப்பாயைச் சேர்ந்த காலஞ் சென்ற Dr.சோதிநாதர் நாகலிங்கம் - நாகம்மா தம் பதியரின் மருமகனும் முன்னாள் ஆசிரியை லிங்கேஸ் வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற திருமதி தங்கராணி அரிராஜசிங்கம் (முன்னாள் வடமாகாண கல்விப் பணிப்பாளர்), திருமதி கனகராணி இரட்ண சபாபதி (முன்னாள் பதில் அதிபர், கோப்பாய் கிறிஸ் தவக் கல்லூரி), திருமதி இந்திராணி பாலச்சந்திரன் (இளைப்பாறிய ஆசிரியை), S.K.தங்கவடிவேல் (இளைப்பாறிய உதவி மாவட்ட மதிப்பீட்டாளர்) ஆகி யோரின் அன்புச் சகோதரனும், மகேஸ்வரன் (இளைப்பாறிய அரச உத்தியோகத்தர் - அமெரிக்கா) நா.சுமுகநாதன் (இளைப் பாறிய MLT), Dr.நா.முருகானந்தன் (லண்டன்), திருமதி யோகேஸ்வரி சந்திரமௌலீசன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.10.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் VTV மன்ற மண்டபத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மாதம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: திருமதி லிங்கேஸ்வரி ஆனந்தவடிவேல் (மனைவி)
112388110


## இலங்கை!....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடுப்பதற்கான பரீட்சார்த்த நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

அதேவேளை, மனித உரிமைகள் துஷ்பிரயோகங்களைத் தடுக்க மேலும் இறுக்கமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்றும் அவர்கள் வலியுறுத்தினார்கள்.

பொதுநலவாய அமைப்பின் 54 நாடுகளின் தலைவர்கள் பங்குபற்றும் மாநாட்டை நேற்று வெள்ளிக்கிழமை, ஆஸ்திரேலியாவில், 85 வயதான பிரிட்டிஷ் மகாராணியார் எலிசபெத் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

இந்த மாநாடு தொடர்பாக ஆஸ்திரேலியப் பிரதமர் ஜூலியா கில்லார்ட் செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையில், "மனித உரிமைகளைப் பாதுகாக்கும் விடயத்தில் மேலும் காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என வலியுறுத்தும் உள்ளக அறிக்கைக்குத் தலைவர்கள் ஆதரவு அளித்துள்ளார்கள்" என்றார்.

"இந்த அறிக்கை, இதன் அனைத்து மறுசீரமைப்புக்கான பிரேரணைகள், பரிந்துரைகள் ஆகியவை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. இந்த மாநாடு, மறுசீரமைப்பை ஏற்றுக்கொள்வதற்கும், பொதுநலவாய அமைப்பை வலுப்படுத்துவதற்கும் முன்வந்துள்ளது" என்றும் அவர் குறிப்பிட்டார்.

"ஒருநாடு ஜனநாயக விழுமியங்களையும், சட்ட ஒழுங்குமுறைகளையும் புறந்தள்ளிவிட்டு, ஏற்றுக்கொள்ளமுடியாத ஒரு நிலைப்பாட்டுக்குள் விழுமுன், பொதுநலவாய அமைப்பு உடனடியாகத் தலையிடுவதற்கு இந்த மறுசீரமைப்புப் பிரேரணைகள் வழிசமைக்கும்" என்றும் ஆஸி. பிரதமர் விளக்கினார்.

"இத்தகைய முரண்பாடானதொரு நிலைப்பாட்டில் சம்பந்தப்பட்ட தலைவர்களுக்கு இரு வாய்ப்புகள் அளிக்கப்படும். ஒன்று, இடை நிறுத்தம். மற்றது, வெளியேற்றம்" என்றும் பிரதமர் கில்லார்ட் தெரிவித்துக்கொண்டார்.

அதேவேளை, இதுவரை எந்தவொரு நாடாவது, பொதுநலவாய அமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்டதில்லை. எனினும், இராணுவப் புரட்சியை அடுத்து சில நாடுகள் தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டிருக்கின்றன.

மனித உரிமை மீறல்கள், அரசியல் உரிமை துஷ்பிரயோகம் ஆகியவற்றுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதையே இந்த உச்சிமாநாடு பெரிதும் வலியுறுத்துகிறது.

மாநாட்டின் இரகசிய அறிக்கையை ரொய்ட்டர் செய்தி நிறுவனம் பார்வையிட்டுள்ளது. இதில் ஒருசாரார் மனித உரிமைகள் ஆணையாளர் நியமிக்கப்படவேண்டுமென்ற உறுதிப்பாட்டோடு உள்ளனர். பிறிதொரு சாரார் இந்த உத்தேச ஆலோசனைக்கு அதிருப்தியும், ஆட்சேபனையும் தெரிவிக்கின்றனர் என ரொய்ட்டர் குறிப்பிடுகின்றது.

இந்தப் பொதுநலவாய மாநாட்டில் இலங்கை போர்க்குற்ற விவகார விவாதமே முக்கிய இடம்பெறும் என்றும், கடந்த 25 வருடகால சிவில் யுத்தத்தின்போது இடம்பெற்ற யுத்தக்குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் மீதான விசாரணையை மேற்கொள்ள சுதந்திரமான விசாரணைக்குழுவை அமைக்குமாறு சர்வதேச நிர்ப்பந்தங்கள் இம்மாநாட்டில் கொடுக்கப்படும் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

(ஓ-சி)


**தேவை**

clerk:- ரைப் செற்றிங் செய்யக்கூடிய பெண் விரும்பத்தக்கது நேரில் வரவும்
திசைகாட்டி முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம்.
37,சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி
யாழ்ப்பாணம்.
T.P: 021 491 4527 021 221 9016

**காணி விற்பனைக்கும், கடை வாடகைக்கும்**

பிறவுண் வீதி இந்தியன் விசா அலுவலகத்திற்கு அருகில் 1½ பரப்புக் காணி, அன்னசத்திர ஒழுங்கையில் 02 பரப்பு காணி விற்பனைக்கும், யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் இருகடைகள் (மேலும்,கீழும்) வாடகைக்கும் உண்டு
தொடர்பு:-0778449687

**தவறி விட்டது**

சற்குணராஜா – கதீஸ்வரன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (811843199V), விசேட அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், மற்றும் காப்புறுதிப் பத்திரம், வரிப்பத்திரம் சிறு தொகைப்பணம் என்பன அடங்கிய பை கட்டுடைக்கும், மானிப்பாய்க்கும் இடையில் நேற்று (28.10.2011) வெள்ளிக்கிழமை காலை 7மணிக்கும் 8.30 இற்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் குறிப்பிட்டுள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு ஒப்படைத்து உதவவும்.
தொடர்பு:- 0777771782,0776621845

**புதியதோர் உலகம் செய்வோம்**

பொருளியல் ஆசிரியர்
**வரதராஜன்**

**முக்கிய அறிவிப்பு**

நான் கற்பிக்கும் பாடமான **பொருளியல்** என்ற பெயரில் இயங்கும் எந்தவொரு கல்வி நிறுவனத்தோடும் நிர்வாகரீதியாக எனக்கு எந்தவொரு தொடர்பும் கிடையாது என்பதை எனது மாணவர்களுக்கும் அவர்களின் பெற்றோர்களுக்கும் மற்றும் ஏனை விரும்பிகளுக்கும் அறியத் தருகின்றேன். எனது நிர்வாகத்தின் கீழ் இயங்கும் ஒரேயொரு கல்வி நிறுவனம் D.C.M

S.வரதராஜன்
நிர்வாக இயக்குநர்
D.C.M கல்வி நிறுவனம்


## மஹிந்தவை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆஸ்திரேலியப் பொலிஸார் பலப்படுத்தி இருந்தனர்.

"போர்க்குற்றவாளியான மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆஸ்திரேலியாவில் செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவர் கைது செய்யப்பட வேண்டும்" என்று ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற யோகன் தர்மா என்ற தமிழர் தெரிவித்தார் என ஆஸ்திரேலிய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

"மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் இருக்க வேண்டியவர் அல்லர். முள்ளுக்கம்பிகளுக்குப் பின்னால் இருக்க வேண்டியவர். ஆஸ்திரேலியச் சிறையில் இந்த நாட்டு அரசு அவரை அடைக்கவேண்டும். திரும்பிப் போக அனுமதிக்கக்கூடாது" என்றும் யோகன் கருத்துத் தெரிவித்துள்ளார்.

"இலங்கையை கொமன்வெல்த்தில் இருந்து இடைநிறுத்துவதற்கு எமக்குத் தேவை ஆஸ்திரேலியாவின் ஆதரவே, தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்தித் தமிழர்கள் சுதந்திரமாக வாழ ஆதரவளிக்க வேண்டும்" என்று அஜந்தி கூறினார். இவரும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு தமிழர்களுக்காகக் குரல் கொடுத்தார்.

இந்த எதிர்ப்புப் போராட்டத்தில் பேர்த் நகரில் வாழும் 60 இற்கும் அதிகமான தமிழர்கள் பங்கேற்றனர் என்று உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (உ)

## வடக்கின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ழக்கிழமை தொடக்கம் தத்தமது பிரதேச செயலகங்களில் கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வடமாகாண சபையின் முக்கியமான பொறுப்புக்களில் 14 பெரும்பான்மை இனத்தவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-15)


**மலேசியா வேக் போமிற்**

நல்ல முறையில் நம்பிக்கையான முறையில் செய்து கொடுக்கப்படும்
தொடர்புகளுக்கு :-0775413754

## கண்ணீர் அஞ்சலி



தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர்
கு.பிறேமகாந்தன் அவர்களின் அன்புத் தந்தை

**வைரமுத்து குலவீரசிங்கம்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்வதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

யா/நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம்.
பாடசாலைச் சமூகம்.

புதியதோர் உலகம் செய்வோம்

**யாழ் நகரில் இரு இடங்களில்**

**DCM**

| | |
|---|---|
| BECON கல்வி நிறுவனத்தில் மவுரிக்கூட்டு வீதி, யாழ்நகர் | |

| | |
|---|---|
| A/L 2013 | NOV 05 SAT |
| DAY CLASS | NOV 07 MON |

நிர்வாக இயக்குநர் : பொருளியல் ஆசிரியர் **S.வரதராஜன்**

## கண்ணீர் அஞ்சலி



தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.கு.பிறேமகாந்தன் அவர்களின் அன்புத் தந்தை

**வைரமுத்து குலவீரசிங்கம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்வதுடன்
அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பாடசாலைச் சமூகம்,
கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கடைகள் வாடகைக்கு**

கிளிநொச்சி A9 பிரதான வீதியில், கந்தசாமி ஆலயத்துக்கும் சென். திரேசா தேவாலயத்துக்கும் இடையில் (இராசையா மருந்துக் கடை அருகில்) சகல வசதிகளுடனும் இரண்டு கடைகள் வாடகைக்கு உண்டு.
காட்சியறைகளாகவும் பயன்படுத்தமுடியும்.
தொடர்புகளுக்கு: 0750760922, 0778499012

**யாழ்ப்பாண தனியார் கல்விநிலைய வரலாற்றில் முதன்முறையாக**

புறொஜெக்டர் மூலம் (Audio, Video) 7 வயதுக்குட்பட்ட மழலைகளுக்கான அடிப்படை ஆங்கிலக் கற்கை நெறி

TKY - 07

**உள்ளடக்கங்கள்**

★ ஆங்கில் எழுத்துக்களை உறுப்பமைய எழுதப் பழக்கல்.
★ சொல்பிரயோகம், வசனம் அமைத்தல், கட்டுரை யாக்கம்.
★ இலக்கண வேதனையின்றி பேச்சு ஆங்கிலமும் விளங்கிக் கொள்ளலும்.
★ பாடல்கள், கதைகள், ஆங்கிலப் பத்திரிகைகள்

இக்கற்கை நெறி பிரபல நிபுணர்களால் குழந்தைகள் உளவியலுக்குட்பட்டுத் தயாரிக்கப்பட்டது.
பெற்றோர்களின் அளவுகடந்த வேண்டுதல்களினால் 3 ஆம் புதிய பிரிவு ஆரம்பம் நேரம் சனி பி.ப. 1 மணி 25 பேர் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

**திசைகாட்டி**



முன்மாதியான ஆலோசனை நிறுவனம்
37, சிவகுருநாதர் ஒழுங்கை பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். நகரிலிருந்து கஸ்தூரியார் வீதியூடாக வருகையில் யாழ். இந்துக்கல்லூரி மைதானம் கடந்தவுடன் வலது புறமாக வரும் ஒழுங்கை.
TP: 0214914527, 021 2219016

**NALRAVI**
**SPOKEN ENGLISH**

பயிற்சி நெறியைப் பற்றி:
- 100 மணி நேர/3 மாத கால கற்கை நெறி
- முற்றுமுழுதாக ஆங்கிலச் சூழலை ஏற்படுத்தி அதிக நேரப் பேச்சுப் பயிற்சி
- விரிவான இலக்கண விளக்கங்கள் (IELTS கற்கை நெறிக்குச் சமமான இலக்கணப் பகுதிகள்)
- வீட்டில் சுயமாக பயிற்சி பெற ஆங்கில ஆசிரியர் திரு. ஜெய நல்ரவியின் குரலில் பிரித்தானிய உச்சரிப்பு முறையில் தமிழ் விளக்கங்களுடன் கூடிய 3 AUDIO CDக்கள்
- ஒவ்வொருவரிடமும் அன்பான முறையில் தனிப்பட்ட கவனம்

ஆங்கிலம் சற்றேனும் பேச முடியாதவர்களுக்கு விசேட வகுப்புகள்

யாருக்காக:
- 16 வயதிற்கு மேற்பட்ட ஆங்கிலம் பேச ஆசைப்படும் அனைவருக்கும்
- பல பேச்சு ஆங்கில வகுப்புகளுக்குச் சென்று ஆங்கிலம் பேச முடியாதவர்களுக்கும்

வகுப்பு நேரங்கள்:
BATCH 1 - சனி காலை மட்டும் வகுப்புகள்
BATCH 2 - சனி மாலை மட்டும் வகுப்புகள்
BATCH 3 - ஞாயிறு காலை மட்டும் வகுப்புகள்
BATCH 4 - ஞாயிறு மாலை மட்டும் வகுப்புகள்
BATCH 5 - வெள்ளி தவிர்ந்த ஏனைய கிழமை நாட்களில் காலை மட்டும் வகுப்புகள்
BATCH 6 - வெள்ளி தவிர்ந்த ஏனைய கிழமை நாட்களில் மாலை மட்டும் வகுப்புகள்



NALBON
INSTITUTE OF ENGLISH STUDIES
We are born for your bond

Head Office
527 2nd Floor
Galle Road Colombo 6
Tel 0112 363656 Fax 2360004

Jaffna Branch
62/20 3rd Floor
Stanley Road Jaffna
Tel 021 221 9 221

Website www.nalravi.com E-mail nalravi@yahoo.com
(NALRAVI ENGLISH LANGUAGE CENTRE சர்வதேச வலையமைப்பில் இணைந்து கொள்ளும் நோக்கோடு NALBON INSTITUTE OF ENGLISH STUDIES எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது)

## அரசிடம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆச்சரியமளிப்பதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். அதேவேளை, கூட்டமைப்பினருடனான சந்திப்புக்கள் அனைத்தையும் ராஜாங்கத் திணைக்களமே ஏற்பாடு செய்தது என்பதால் அங்கேயே அவர்களது சந்திப்புக்கள் இடம்பெற்று வருகின்றன; அதற்காக அவை ராஜாங்கத் திணைக்கள உயர் அதிகாரிகளுடன் மட்டுமே நடக்கின்றன என்று கருதிக் கொள்ளத் தேவையில்லை என்று கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரக வட்டாரங்கள் கூறின.

ராஜாங்கத் திணைக்கள அதிகாரிகளுடனான சந்திப்பின்போது, இலங்கை அரசுடன் பேசித் தீர்வைப் பெறுவதில் அதிக அக்கறை காட்டுமாறு கூட்டமைப்பினருக்கு ஆலோசனை வழங்கப்பட்டதாகத் தெரிகிறது. போர்க் குற்றச்சாட்டு என்ற விடயத்தில் தமிழர் தரப்பு அழுங்குப் பிடியாக இல்லாமல் அதனைப் பயன்படுத்தி தமக்கான நலன்களை வென்றெடுப்பதில் அதிக கவனத்தைச் செலுத்த வேண்டும் என்றும் சர்வதேச நாடுகள் அதற்கே ஆதரவாகச் செயற்படும் என்றும் அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

தாயகத்தில் உள்ள தமிழர்களின் அசைக்க முடியாத பிரதிநிதிகள் என்ற வகையில், தமிழர்களின் தலைமைத்துவ வகிபாகத்தை ஈழத் தமிழர்கள் மத்தியிலும் புலம்பெயர் தமிழர்கள் மத்தியிலும் கூட்டமைப்பு பலப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் அமெரிக்க அதிகாரிகளால் எடுத்துரைக்கப்பட்டுள்ளதாகவும் அறிய வந்தது

(உ)

## பிரபாகரனை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னர்களுக்கும் பொது மன்னிப்பு வழங்கப்படுவதுடன் தலைவர் பிரபாகரனும் புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பாளர் பொட்டு அம்மானும் பாதுகாக்கப்படுவார்கள் என்றும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய அமெரிக்கத் தூதருக்கு ஏற்கனவே வழங்கி இருந்த உறுதிமொழியை திரும்பவும் உறுதிப்படுத்தினார்.

பிளேக் - கோத்தா சந்திப்பில், தாக்குதல் தவிர்ப்பு வலயங்கள் மீது எந்தக் காரணம் கொண்டும் படையினர் பலவந்தமான தாக்குதல்களை நடத்தமாட்டார்கள் என்ற உறுதிமொழியையும் பாதுகாப்புச் செயலர் வழங்கியுள்ளார்.

விடுதலைப் புலிகள் அனைவருக்கும் அரசு பொதுமன்னிப்பு வழங்கும் என்ற செய்தி அவர்களுக்கு எட்டும்படி செய்யப்பட்டுள்ளதா என்று பிளேக், பாதுகாப்புச் செயலரிடம் வினவியதற்கு, "அதனை வெளிப்படையாகப் பெரிய அளவில் செய்ய முடியாது. அப்படிச் செய்தால் சிங்கள அடிப்படைவாதக் கட்சிகளான ஹெல உறுமய, ஜே.வி.பி. பிக்குகள் முன்னணி என்பன கடுமையான எதிர்ப்பைக் காட்டும்" என்று கோத்தபாய பதிலளித்தார் என்றும் அந்தக் 'கேபிள்' செய்தி கூறுகிறது.

பொதுமன்னிப்பு என்ற விடயம் பரந்தளவில் பரப்புரை செய்யப்படவில்லை என்றால் அது சேற்றில் புதைந்துபோய் விடும்; அதனால் எந்தப் பயனும் ஏற்படாது என்று சுட்டிக்காட்டிய பிளேக், அதே வேளை, இலங்கையைவிட்டு பிரபாகரன் தப்பிச் சென்றால் அவரைக் கண்டறிவதற்கான உதவிகளை வழங்கக்கூடிய வல்லமை அமெரிக்காவுக்கு இருக்கின்றது என்பதையும் கோத்தபாயவிடம் சுட்டிக்காட்டினார் என்றும் 'கேபிள்' தெரிவித்துள்ளது.

(உ)

**கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு**

உயர்தர தடுப்பு மருந்து ஏற்றப்பட்ட ஒருநாள்/ஒரு கிழமை/இரண்டு கிழமை ஊர்க்கோழிக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. விலை ரூ-75/= இலிருந்து
தொடர்புகளுக்கு: 021 7200616

**பணியாளர்கள் தேவை**

யாழ்.நகரில் தொடங்கவிருக்கும் கணினி விற்பனை நிலையத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.
1. அலுவலக பணியாளர் (பெண்கள்)
(அடிப்படை கணினி அறிவு மற்றும் கணக்கியல் அறிவு விரும்பத்தக்கது)
2. சந்தைப்படுத்தல் அலுவலர் (ஆண்கள்)
(சந்தைப்படுத்தல் துறையில் முன்அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது)
தொடர்புகளுக்கு: 0770555855
@ gmail.com antonyuthayakumar

## சிங்கள மொழிப் பரீட்சை இன்று யாழ்ப்பாணத்தில் 14 நிலையங்களில்

அரச உத்தியோகத்தருக்கான இந்த மொழிப் பரீட்சையை நடத்துவதற்கு ஏதுவாக மொழி விருத்தித் திணைக்களம் யாழ். மாவட்டத்தில் தமிழ் அரச உத்தியோகத்தர்களுக்கு ஒவ்வொரு பிரதேசங்களிலும் நிலையங்களைத் தெரிவு செய்து சிங்கள வகுப்புகளை நடத்தியிருந்தது. இந்த வகுப்புக்கு அரச உத்தியோகத்தர்கள் அனைவரும் பங்குபற்றலாம் என அறிவிக்கப்பட்டது. எனினும் ஆர்வமுள்ளவர்கள் மட்டும் இந்த வகுப்புக்குச் சென்றிருந்தனர். அவர்களுக்கான பரீட்சையே இன்று நடைபெறுகின்றது. பாடசாலை மாணவர்களுக்கான சைவபரிபாலன சபைப் பரீட்சையும் இன்று பரீட்சை நடைபெறவிருந்த நான்கு மண்டபங்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. அந்த விவரங்கள் நேற்றைய உதயனில் வெளியாகியிருந்தன. இதுதவிர இந்து தர்ம ஆசிரியர்களுக்கான பரீட்சையும் இன்று சனிக்கிழமை, நாளை ஞாயிற்றுக்கிழமை மற்றும் எதிர்வரும் 5ஆம் திகதி ஆகிய நாள்களில் நடைபெறும் இந்தப் பரீட்சைக்கு 213 பேர் தோற்றுக்கின்றர் என்று யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

(ஒ-4)

## போர்க்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுக்களை விசாரித்து அவற்றுக்குப் பொறுப்புக்கூற இலங்கை இது வரை நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை.

"போர்க் குற்றச்சாட்டுக்களுக்கு இலங்கை அரசு இன்னும் பொறுப்புக்கூறாத நிலையிலும் கூட பொதுநலவாய நாடுகள் அமைப்பின் தலைவர்கள் மாநாட்டை கொழும்பில் நடத்த அனுமதிப்பதைப் போன்ற அபத்தம் வேறில்லை" என்று தெரிவித்தார் மன்னிப்புச் சபையின் ஆசிய-பசுபிக் பிராந்திய பிரதிப் பணிப்பாளர் மது மல்ஹோத்ரா.

பொதுநலவாய நாடுகள் அமைப்பை மறுசீரமைப்பதா இல்லையா என்ற கட்டத்தை தலைவர்கள் எதிர்கொண்டுள்ளார்கள் என்று சுட்டிக்காட்டும் மல்ஹோத்ரா, தமது அமைப்பின் மறுசீரமைப்பை அவர்கள் விரும்பினால் மனித உரிமைகள் விடயத்தில் அவர்கள் காத்திரமாகச் செயற்பட வேண்டும் என்றும் தெரிவித்தார். "இல்லையெனில் அந்த அமைப்பு சாலப் பொருத்தமற்றதாகிவிடும்" என்றும் அவர் எச்சரித்தார்.

பொதுநலவாய அமைப்பின் மறுசீரமைப்புக்காகப் பரிந்துரைக்கப்பட்டுள்ள யோசனைகளில், உறுப்பு நாடுகளின் மனித உரிமைச் செயற்பாடுகளைக் கண்காணிக்க மனித உரிமைகள் ஆணையாளர் ஒருவரை நியமிப்பது என்ற யோசனையை இலங்கையும் இந்தியாவும் கடுமையாக எதிர்த்து வருகின்றன.

தத்தமது நாடுகளில் நடக்கும் மனித உரிமை மீறல்களைப் பயன்படுத்தி மேற்குலக நாடுகள் தம் மீது அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கு இது வழிவகுத்துவிடும் என்று இவை அஞ்சுகின்றன. (உ)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி புவனேஸ்வரி வேலாயுதபிள்ளை



சுதுமலை வடக்கு ஈஞ்சடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி வேலாயுதபிள்ளை நேற்று (28.10.2011) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளைய தம்பி சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் வேலாயுதப்பிள்ளையின் அன்பு மனைவியும் சறோஜினி, கமலாசனி, அழகம்மா, அழகுராணி (ஆசிரியை வ/கனகராயன் குளம், ம.வித்), பிறேமானந்தன் (அம்பாள் ஸ்ரோர்ஸ் - சுதுமலை), சுமதி (பிரான்ஸ்), பிரபானந்தன் ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற இராசலிங்கம் மற்றும் தெய்வேந்திரம், பேரின்பநாயகம் (ஸ்ரீ சுபா பேக்கரி - சுதுமலை), சிவானந்தம் (அம்பாள் அரைக்கும் ஆலை - சுதுமலை), ஜெயந்தி, இராஜேந்திரகுமார் (பிரான்ஸ்), திகழ்ஜோதி (ஆசிரியை யா/இணுவில் மத்திய கல்லூரி) ஆகியோரின் பாமசமிகு மாமியும், றஜிதா-பாஸ்கரன் (ஹொலண்ட்), றஞ்சித் (ஆசிரியர், யா/ அச்செழு சைவப் பிரகாச வித்), ரூபினி, றஜ்சித், றஜீபன் (கனடா) - நவரூபி, றஜீகரன், தர்சிகா, கஜீபன், சந்துரு, சுபாகர் (விஞ்ஞான பீடம் யாழ் பல்கலைக் கழகம்), சுகுணன், கௌசிகா, கிருஷாந், யதுர்ஷனா, இனுஜன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மகிஷா, சாருஜா, டிலக்சிகா, அக்ஷயன், நிதுஷன் ஆகியோரின் அருமைப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.10.2011) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மாயனத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுதுமலை வடக்கு,*
*ஈஞ்சடி.*

*தகவல்:*
குடும்பத்தினர்.

## வைரமுத்து குலவீரசிங்கம்

(ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்)



விநாயக முதலியார் வீதி, பருத்தித்துறையைச் சேர்ந்த வைரமுத்து குலவீரசிங்கம் 27.10.2011 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் செல்லச்சரஸ்வதியின் அன்புக் கணவரும், பிறேமகாந்தன் (வலயக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி), ரூபகாந்தன், பிறேமலதா, ரூபலதா (தாதிய உத்தியோகத்தர், திருகோணமலை), செல்வரூபலதா, செல்வலதா ஆகியோரின் அன்புத் தந்தையும், ரஞ்சிதமலர், செல்வச்சந்திரன், சிவநேசராசா, சியாமளா ஆகியோரின் அன்பு மாமனும், மயூரிகா, தர்சிகா, கார்த்திகா, பவானிகா, கிருத்திகன், சுருதிப்பிரியா, ஷைந்தவி, சிவலதன், தேனுஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.10.2011) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 9 மணிக்கு பருத்தித்துறை சுப்பர்மடம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*விநாயக முதலியார் வீதி,*
*பருத்தித்துறை.*

*தகவல்:*
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.10.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org